South Harrow Food & Wine
தமிழ்க் கடை
Tel: 0181-4236321
234 Northolt Road, South Harrow, Middleser Ha2 8 du
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள் மரக்கறி வகைகள்
CD Audio's அத்துடன் புதிய தமிழ் திரைப்படங்கள் வாடகைக்கு
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
(மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றிட)
We Aecept All Credit cards & Cheques

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு பிரித்தானியா

Eelamurasu Weekly
முரசு: 4 23 – 29 ஜூலை 1998 முழக்கம்: 184

Sakthy Video
Video Filming for Wedding's B'day's & any other Occasion's
By 3 CCD CAMERA'S
Please Cont:- 0181-6956822
Mob: 0961313436
K.R.S.
33 Lee High Road, Lewisham Se-13
Tel: 0181-2979432

ஜெயசிக்குறுய்
**433**
நாட்கள்

# ரத்வத்தை புதிய காலக்கெடு

## * போர்முனைக்கு புதியரக ஆயுத தளவாடங்கள்
## * விரைவில் சிறீலங்கா முப்படைகளுக்கும் புதிய கூட்டுத் தளபதி

*(20.07.98)*

வன்னியில் ஏ-9 நெடுஞ்சாலையை எதிர்வரும் நவம்பர் மாதத்திற்கு முன் கைப்பற்ற வேண்டும் என சிறீலங்கா பிரதி இராணுவ அமைச்சர் ஜெனரல் ரத்வத்தை தனது தளபதிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். சிங்களப் பகுதிகளில் தேர்தல்களை வருட இறுதியில் சந்திக்கவேண்டிய கட்டாயத்தில் உள்ள சந்திரிகா அரசு, வன்னிப் போர் முனையில் அரச படைகள் அடைந்துவரும் பின்னடைவுகளாலும், தேக்கத்தினாலும் மிகுந்த அச்சம் கொண்டுள்ளது.

ஜெயசிக்குறுய் பின்னடைவுகளை எதிர்க்கட்சிகள் அரசுக்கு எதிரான தேர்தல் பிரச்சாரத்திற்குப் பாவிக்கலாம் என்ற எதிர்பார்ப்பு அரசினை மேலும் கலவரப்படுத்துகின்றது. இதனால் எதிர்வரும் நவம்பருக்கு முன் கிளிநொச்சி வரையிலான நெடுஞ்சாலையைக் கைப்பற்றியே ஆகவேண்டும் என பிரதி இராணுவ அமைச்சர் ஜெனரல் ரத்வத்தை, இராணுவத் தளபதி ரொகான் தலுவத்தைக்கும், போர்முனைத் தளபதிகளுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

புதிய படை நகர்வுகளுக்கு ஊக்கமளிக்கும் விதத்தில் புதி

(☞ 2ம் பக்கம்)

## புலிகள் தயாராகின்றனர்

**- இராணுவ உளவுத்துறை**

*(20.07.98)*

மாங்குளம் நகரைக் கைப்பற்றுவதற்கான தொடர்ச்சியான நகர்வுகளை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியாத நிலையில், தாம் நிலைகொண்டுள்ள பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை சிறீலங்கா இராணுவம் வெகு வேகமாக மேற்கொண்டுவருகிறது. புதிய பதுங்கு அரண்களை அமைத்தும், நிலக்கீழ் சுரங்கப் பாதைகளை நிறுவியும் தம்மைப் பாதுகாப்பதில் துருப்பினர் ஈடுபட்டுள்ளனர்.

தமது நிலைகள் மீது புலிகள் தாக்குதல் நடவடிக்கைகளை ஆரம்பிக்கலாம் என்ற இராணுவ உளவுப்படையின் தகவல்கள்

(☞ 2ம் பக்கம்)

## நீண்டு செல்லும் நடவடிக்கை வெற்றியளிப்பதில்லை

*(20.07.98)*

'2-ம் உலகப் போரில் ரஷ்யாவின் மீது ஹிட்லர் நடாத்திய பார்பரோசா நடவடிக்கையில் அவனது சகல திட்டங்களும் தோல்வியடைந்தன. ஏனெனில் நீண்டுசெல்லும் எந்த நடவடிக்கையும் வெற்றியளிப்பதில்லை. நீண்ட நடவடிக்கையால் அதிகமானவர்கள் அழிந்து விடுவதால் அது வெற்றியளிப்பதில்லை.'

என விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரும் ஜெயசிக்குறுய் நகர்வுக்கு எதிரான போரில், விடுதலைப் புலிகள் அணியை வழிநடாத்தும் சிறப்புத் தரைப்படை தளபதியுமான கருணா அம்மான், ஜெயசிக்குறுய் பற்றிய கேள்விக்கு பதலளித்துள்ளார்.

ஜெயசிக்குறுய், நீண்டகாலச்



**தளபதி கருணா அம்மான் பிரகடனம்**

சமரானது, யாழ். குடாவில் அடைபட்டுள்ள 40,000 துருப்புக்களை காப்பாற்றவும், அடுத்த

(☞ 2ம் பக்கம்)

## யாழ். நகர் இன்று சுற்றிவளைப்பு

*(20.07.98)*

யாழ். நகரில் உள்ள சிறீலங்கா படை அதிகாரிகள் மீது தாக்குதலை நடாத்தும் நோக்குடன் கரும்புலிகள் அணியொன்று நகருக்குள் நுழைந்துவிட்டதென கிடைத்த செய்திகளை அடுத்து, யாழ். நகரின் பெருமம்பாலான பகுதிகளில் இன்று காலை தொடக்கம் மாலை வரை படையினர் விசேட தேடுதல்களை நடாத்தினர்.

யாழ். கஸ்தூரியார் வீதியிலுள்ள வீடொன்றில் கரும்புலிகள் தங்கியிருப்பதாக சந்தேகித்த படையினர், கஸ்தூரியார் வீதியை மூடி அங்கு கடும் தேடுதலை நடாத்தினர். முப்பது மீற்றருக்கு ஒரு சிப்பாய் நிறுத்தப்பட்டு அங்கு கடுமையான சோதனைகள் நடாத்தப்பட்டன.

இதேவேளை பிறிதொரு படைப்பிரிவு யாழ். பொது வைத்தியசாலைப் பகுதியில் கடுமையான தேடுதல்களை மேற்கொண்டது. பாதசாரிகள், வாகனத்தில் பயணம் செய்

(☞ 2ம் பக்கம்)

## உலகெங்கும் கறுப்பு ஜூலை போராட்டங்கள்

1983 இனப் படுகொலைகளின் 15 ஆண்டு பூர்த்தியையொட்டி உலகம் பூராவும் கறுப்பு ஜூலை நினைவுப் போராட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

ஜேர்மனியில் கறுப்பு ஜூலையையொட்டி பொன் நகரில் அமைந்துள்ள சிறீலங்கா துதரகத்திற்கு முன்னால் காலை 10 மணியிலிருந்து 2 மணி வரை அமைதிப் போராட்டம் ஒன்று 23.07.98 அன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பாரிசில் எதிர்வரும் 26.07.98 அன்று மாலை 6 மணி முதல் 8 மணி வரை பிரான்சின் மனித உரிமைகள் பிரகடனம் வெளி

(☞ 2ம் பக்கம்)



மணம் புரிந்தலை மனங்கள்! - 80 வயதான கறுப்பினத் தலைவர் மண்டேலாவும் 52 வயதான சிரகா மாசெல்லும் திருமணம் புரிந்துள்ளனர்

(மேலதிக விபரம் பக்.10)

## செம்மணி புதைகுழிகள் தொடர்பாக அரசின் மௌனம் ஏன்?

**– கத்தோலிக்க நீதி சமாதான ஆணைக்குழு**

யாழ். செம்மணி புதைகுழிகள் தொடர்பாக சிறீலங்கா அரசு மௌனமாக இருப்பது மிகுந்த வேதனையானது. இது தொடர்பாக உடனடியான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க நீதி சமாதான ஆணைக்குழு அறிக்கை மூலம் கோரியுள்ளது.

கிருசாந்தி குமாரசாமி கொலைவழக்கில் முதலாவது எதிரி நீதி மன்றத்தில் கூறிய புதைகுழிகள் தொடர்பான விபரங்களை நிராகரிக்க முடியாது. ஏனெனில் 1996-ம் ஆண்டின் பிற்பகுதி யாழ். மக்களுக்கு மிகப் பயங்கரமான காலமாக அமைந்திருந்தது. பலவிதமான வன்செயல்களும், மனித உரிமை மீறல்களும் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் இடம்பெற்றிருந்தன. 600 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் இக் காலப்பகுதியில் காணாமலும் போயிருந்தனர்.

எனவே செம்மணிப் புதைகுழிகள் தொடர்பான விசாரணைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் எனவும் அவ் அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

லண்டனில் நம்பிக்கை = நாணயம் = உத்தரவாதம் = குறைந்த விலை
மங்கையர் நெஞ்சங்களில் குறுகிய காலத்தில் இடம்பிடித்தவர்கள்
RATHY JEWELLERS
தாலிக்கொடி தயாரிப்பில் கைதேர்ந்தவர்களின் கைவண்ணத்தில்
சகல நகைகளையும் செய்தும், இறக்குமதி செய்து வழங்குபவர்கள்

28 Ealing Road, Wembley, Middx. HA0 4TL
Tel: 0181-903 3063
Fax: 0181-903 9711
Mon.-Sat. 10.00 A.M. - 6.30 P.M.
Sunday 12.00 Noon - 6.30 P.M.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்

ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
யோ. சிறீஸ்கந்தராஜா
Tel: 03 04 35 29 23
அருந்தவராஜா:
Tel / Fax: 02 151 39 73 83

டென்மார்க்:
G.R. திருச்செல்வம்
Stadion Alee - 30, 1th
7430 Ikast, Denmark.
Tel + Fax: 75310546

சுவிஸ்: மக்கள் கடை
Verlag: People Shop
Henrich Str-85; 8005 Zürich.
Druckerci: Frankreich.
Tel: 01-271 7374

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
குணம்: - Tel: 0956277718

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

# விடுதலைப்புலிகள்- இலக்கியவாதிகள் கலந்து கொண்ட இருநாள் கருத்தரங்கு

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இரு நாள் இலக்கிய கருத்தரங்கு கடந்த 18,19 ஆகிய திகதிகளில் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றுள்ளது.

சுமார் 800 பேர் கலந்து கொண்ட இக்கருத்தரங்கில் விடுதலை இலக்கியம், நவீன இலக்கியம், போர்க்கால இலக்கியம் ஆகியன பற்றியும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் சார்பில் செய்தி பிரிவு பொறுப்பாளர் திரு.ரவி, நிதர்சனம் தொலைக் காட்சி சேவை பொறுப்பாளர் நகுலன், கவிஞர் புதுவை ரத்தினதுரை, திரு.வே.பாலகுமார், பெண்கள் பிரிவைச் சேர்ந்த தமிழ் கவி, புலிகளின் குரல் வானொலி சேவை பொறுப்பாளர் தமிழன்பன், விதுரன் ஆகியோரும் இலக்கியவாதிகளான கவிஞர் பஞ்சாட்சரம், கருணாகரன், இசையமைப்பாளர் கண்ணன், புதுவை அன்பன், பாலா மாஸ்டர், மகேந்திரன் இலங்கராஜன் ஆகியோர் உட்பட்டதான பேராளர்களும் கலந்து கொண்டனர். இலக்கியங்கள், கவிதைகள் ஆகியன விடுதலை போராட்டத்திற்கு உறுதுணையாக இருக்க வேண்டியதன் அவசியம் குறித்து இக்கருத்தரங்கில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

# நித்தம்புவ தொலைத் தொடர்புக் கோபுரம் குண்டுவைத்துத் தகர்ப்பு

கொழும்பு நகரிலிருந்து 30 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்திருந்த தொலைத் தொடர்பு கோபுரமொன்று கடந்த 19 ஆம் திகதி குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளது. இச் சம்பவத்தில் இரு பொலிஸ் அதிகாரிகளும் படுகாயமடைந்துள்ளனர்.

சிறீலங்கா அரசிற்கு மிகவும் அதிர்ச்சியை அளித்துவரும் மின் மாற்றி, தொலைத்தொடர்பு நிறுவன குண்டுவெடிப்பு வரிசையில் இது இறுதியாக நடைபெற்ற சம்பவமாகும்.

காலை வேளையில் இத் தொலைத்தொடர்புக் கோபுர அடிப்பாகத்தில் பொருத்தப்பட்டிருந்த முதல் குண்டு வெடித்ததும், அது பற்றிய தகவல் கிடைத்த நித்தம்புவ பொலிசார் ஸ்தலத்திற்கு விரைந்து வந்து சேத விபரங்களை பார்வையிட்டபோது இரண்டாவது குண்டு வெடித்துள்ளது. இக் குண்டு வெடித்ததும் கோபுரம் முற்றாக சேதமடைந்துள்ளது. அப்போது நித்தம்புவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும், இன்னொரு பொலிஸ் அதிகாரியும் படுகாயம் அடைந்துள்ளனர்.

ஆபத்தான நிலையில் இருந்த பொலிஸ் பொறுப்பதிகாரி கொழும்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார். இக் குண்டு வெடிப்பினை அடுத்து நித்தம்புவ பகுதியில் பதட்டம் நிலவியதுடன், கொழும்பு - கண்டி வாகனப் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## நீண்டு செல்லும்...

தேர்தலில் வெற்றிபெறவுமே இவ் அரசினால் நடாத்தப்படுகின்றது எனக் குறிப்பிட்டுள்ள கருணா அம்மான், சமரில் ஈடுபடும் சிறீலங்காவின் 53-வது பிரிவானது, காட்டுப் பகுதிப் போரில் விசேட பயிற்சி பெற்ற அணி எனவும், 55-வது பிரிவு கவசப் படைகளின் துணையுடன் மரபுவழி நகர்வை மேற்கொள்ளக்கூடிய அணி எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜெயசிக்குறுய் படை நகர்வுகளை எதிர்கொள்வதன் மூலம் எமது போரணிகளும், தளபதிகளும் புதிய தந்திரோபாயங்களையும், போர் உத்திகளையும் கற்றறிந்துள்ளனர். மேலும், கற்றதைப் பிரயோகிக்க இது ஒரு ஏற்ற தருணம் எனக் குறிப்பிட்டுள்ள கருணா அம்மான், இப் போர் நடவடிக்கை எமது விடுதலைக்கான சாதகமான திருப்புமுனையாக அமைந்துள்ளது என பிரகடனப்படுத்தி உள்ளார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## புலிகள்...

அடிப்படையில் இவ் ஏற்பாடுகளை முடுக்கிவிட்டுள்ளன.

புலிகள் இராணுவ நிலைகளை அண்டியுள்ள பகுதிகளில் புதிய நீண்டதூர பதுங்குகுழிகளையும், அரண்களையும் நிறுவிவருவதாக இராணுவ உளவுத்துறை நம்புகின்றது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## உலகெங்கும்...

யிடப்பட்ட Place des Droits de l'Homme (M°: Trocadero) எனும் இடத்தில் விழிப்புப் போராட்டம் ஒன்று இடம்பெற உள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## ரத்வத்தை...

தாக இறக்குமதி செய்யப்பட்ட பலரக கனரக ஆயுதங்களை 53-ம், 55-ம், 55-ம் பிரிகேட்டுகளுக்கு அரசு வழங்கியுள்ளது.

விடுதலைப் புலிகளின் கனரக ஆயுதப் படைப் பிரிவான கேணல் கிட்டு பீரங்கிப் படையணி மற்றும் விக்டர் கவச எதிர்ப்பு அணிகளின் நகர்வுகளை கட்டுப்படுத்த வேண்டிய தேவை சிறீலங்கா படைகளுக்கு ஏற்பட்டுள்ளதால், புதிதாக வழங்கப்பட்ட ஆயுத தளவாடங்கள் உயர் தொழில்நுட்பம் கொண்டதாக இருக்கும் என நம்பப்படுகின்றது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## யாழ். நகர்...

தோர் ஆகியோர் கடுமையான சோதனைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள்.

இச் சோதனைகளில் எவ்வளவு பேர் கைது செய்யப்பட்டனர் என்ற விபரம் கிடைக்கப்படவில்லை.

இதேவேளை, ஜெயசிக்குறுய் வெற்றியின் பின் சிறீலங்காவின் முப்படைகளையும் ஒன்றிணைத்து நடவடிக்கைகளில் ஈடுபட கூட்டுத் தளபதி ஒருவரை சிறீலங்கா அரசு நியமிக்க முடிவு செய்துள்ளது. இதனை எதிர்க்கட்சியான ஐ.தே.க. வரவேற்றுள்ளது.

வாடகைக்கு RESTAURANT
விற்பனைக்கு வீடு

பாரிஸ் 9-ல் M°: Cadet அல்லது Aners க்கு அருகாமையில் 28 ஆசனங்களைகக் கொண்ட, உடனடியாக நடத்தக்கூடிய, மிகவும் நல்ல நிலையில் உள்ள INDIAN RESTAURANT சகல தளபாடங்களுடனும் உடன் வாடகைக்கு உண்டு.

**வாடகை: 7,000F HT.**

BAILF 3, 6, 9 வருடங்களுக்கு செய்து தரப்படும்.

விற்பனைக்கு (வீடு): RER-C - Choisy le Roi க்கு அருகாமையில் 72M² இடவசதி கொண்ட 4 Pices வீடு விற்பனைக்கு உண்டு.

**விலை: 4,50,000F**

சகல தொடர்புகளுக்கும்: சிவா
TEL: 01 46 71 66 91 - Mobile Tel: 06 09 91 12 66

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிதிக்காக

இன்னிசை மாலை

கர்நாடக இசைப் பாடல்கள்
தத்துவப் பாடல்கள்
இன உணர்வுப் பாடல்கள்
பக்திப் பாடல்கள்

யாவும் ஒரே மேடையில்

கலைமாமணி டாக்டர் சீர்காழி சிவசிதம்பரம்
சங்கீதபூஷணம் பொன். சுந்தரலிங்கம்
மதுரக் குரலோன் கண்ணன்

25.07.98
சனி மாலை 5.30 மணி

இடம்: Lee Valley Leisure Centre
Picketts Lock Lane
Edmonton, London N9 0AS
Nearest Rail Station: Ponders End. Bus routes: W8, 363.
Car park Available

நுழைவுச் சீட்டு - £100, £50, $10

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் - இங்கிலாந்துக் கிளை
0171-403 4554, 0181-961 7675

புதிய வரவு IATA உடனுக்குடன் பிரயாண ரிக்கெற் பெற்றுக்கொள்ளலாம்

ERRANCES TRAVELS
Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,800 Frs. |
| Singapour | - | 3,670 Frs. |
| Madras | - | 4,300 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
Li: 075 95 01 37
(ADV)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழச் செய்தித் தொகுப்பு

## வவுனியாவில் கிளைமோர்
## புளொட் எம்.பி. உட்பட நால்வர் பலி

வவுனியா ஹொறவப்பொத்தானை வீதியில் கடந்த 15-ம் திகதி இடம் பெற்ற கிளேமோர் கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றில் வவுனியா புளொட் பிரமுகரும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணிக் கட்சியின் சிறீலங்கா நாடாளுமன்ற உறுப்பினருமான சண்முகநாதனும், அவரது மகனும், இரண்டு மெய்ப் பாதுகாப்பாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர். அவரது மனைவி படுகாயமடைந்துள்ளார்.

புத்த விகாரையொன்றில் நடைபெற்ற விழாவொன்றில் கலந்துவிட்டு இரவு 10 மணியளவில் இவர்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோதே இத்தாக்குதல் நடைபெற்றுள்ளது. இவர்களது வாகனம் ஹொறவப்பொத்தானை வீதியிலுள்ள அரிசி ஆலையடிக்கு அண்மித்தபோது அடையாளம் தெரியாத சில ஆயுதபாணிகள் வாகனத்தின் மீது தன்னியக்க ஆயுதங்களால் தாக்குதலை நடாத்தியதுடன், கிளேமோர் கண்ணிவெடித் தாக்குதலையும் மேற்கொண்டனர். இதனால் சண்முகநாதனும் அவரது மகனும் இரண்டு மெய்ப்பாதுகாப்பாளர்களும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டள்ளனர். அவரது மனைவி படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டார்.

இத் தாக்குதலில் காயமடைந்த மேலும் மூன்று பொலிசார் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இதுவரை இத் தாக்குதலுக்கு யாரும் உரிமை கோராதபோதிலும், விடுதலைப் புலிகளே இத் தாக்குதலுக்குப் பொறுப்பு என புளொட் தலைவர் சித்தார்த்தன் குற்றம் சாட்டியுள்ளார். ஆனால் வவுனியாவிலிருந்து கிடைத்த புதிதான செய்திகளின்படி புளொட் குழுவினரிடையே ஏற்பட்ட பிளவே இத் தாக்குதலுக்குக் காரணம் என அறியப்படுகிறது.

## பலியான மீனவரின் குடும்பங்களுக்கு சங்கத்தின் பண உதவி

சிறீலங்கா கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் தாக்குதல்களால் கொல்லப்பட்ட மீனவர்களின் குடும்பங்களுக்கு முல்லைத்தீவு மீனவ கூட்டுறவுச் சங்கம் பண உதவி செய்துள்ளது. குறிப்பாக கடந்த மே மாதம் முள்ளிவாய்க்கால் பகுதியில் கிபீர் விமானங்களின் தாக்குதல்களால் கொல்லப்பட்ட மீனவர்களின் குடும்பங்களுக்கு இப் பண உதவி செய்யப்பட்டுள்ளதுடன் மொத்தப் பண உதவியாக ஒரு இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபாவும் பங்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப் பங்கீட்டில் 25 குடும்பங்கள் தலா ஐயாயிரம் ரூபாவினையும், பத்துக் குடும்பங்கள் தலா பத்தாயிரம் ரூபாவினையும் பெற்றுக்கொண்டுள்ளன.

இப் பணவுதவியைப் பெற்றுக் கொண்ட குடும்பங்கள் யாவும் சூரியக் கதிர் நடவடிக்கையின் போது யாழ். குடாவிலிருந்து வெளியேறி முல்லை மாவட்டத்தில் குடியேறியவர்களாவர்.

## பதிவுக்கான செய்திக் குறிப்புகள்

★ கல்முனையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பேருந்து வண்டியொன்று மொனராகலை பகுதியில் வழிமறிக்கப்பட்டு சிங்கள காடையர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. கொள்ளையிடப்பட்டவற்றின் பெறுமதி சுமார் 7 இலட்சம் ரூபாய்களாகும்.

★ வன்னிப் பிரதேசத்தில் பணத்திற்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அரச ஊழியர்கள் தமக்கு வழங்கப்படும் காசோலைகளைக்கூட மாற்ற முடியாத நிலையிலுள்ளனர்.

★ யாழ். மக்களை சுரண்டுவதற்காக சிறீலங்கா தேசிய லொத்தர் சபை புதிய சுரண்டல் டிக்கட்டுகளை யாழில் விற்பனைக்கு விட்டுள்ளது.

★ புகழ்பெற்ற தேற்றாத்தீவு கண்ணகை அம்மன் ஆலய 'கண்ணகிவிழா' கடந்த 17-ம் திகதி நடைபெற்றுள்ளது.

★ அனைத்துலக பத்திரிகையாளர் தினத்தை சிறப்பாக கொண்டாட கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் ஏற்பாடு செய்து வருகிறது.

★ மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனைப் பகுதியில் இடம் பெற்ற கோஷ்டி மோதலில் மூவர் வெட்டுக்காயங்களுக்கு இலக்காகியுள்ளனர்.

★ நல்லூர் கந்தசாமி ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 28-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

★ மன்னார் செம்மண் தீவு பகுதியில் சிறீலங்கா படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 73 வயது முதியவர் ஒருவர் பலியாகியுள்ளார்.

★ கிளிநொச்சி தமிழ் சங்கத்தின் புதியநிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றுள்ளது. தலைவராக ஐ. ஆறுமுகதாஸ் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

★ மட்டக்களப்பு கொக்குவில் பகுதியைச் சேர்ந்த கண்மணி என்ற பெண்மணி கழுத்து நெரித்து கொலைசெய்யப்பட்டுள்ளார். இவரது கொலைக்கு இவரது கணவரே காரணம் எனவும் கூறப்படுகிறது.

★ வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தனது 175-வது ஆண்டு விழாவினை கொண்டாடியுள்ளது.

★ மூன்றுநாள் நாடகப்பட்டறை ஒன்று, மட்டக்களப்பில் நடைபெற்றுள்ளது. சுமார் 50 பேர் இப் பட்டறையில் கலந்து கொண்டனர்.

★ யாழ். செயலக ஊழியர்கள் 28 பேருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

## மன்னார் மாவட்டத்திற்கு புதிய தமிழீழ நீதிமன்றம்

தமிழீழ நீதிச் சேவைப் பிரிவின் மாவட்ட நீதிமன்றம் ஒன்று மன்னார் பெரியமடுப் பகுதியில் புதிதாக திறந்துவைக்கப்பட்டுள்ளது. கடந்த 15-ம் திகதி காலை திறந்து வைக்கப்பட்ட இந் நீதிமன்றம் மன்னார் பகுதி மக்களின் சட்டப் பிரச்சினைகள் தொடர்பான விசாரணைகளை இனிமேல் மேற்கொள்ளும்.

ஆரம்ப தின வைபவம் தமிழீழ தேசிய கொடி ஏற்றிவைத்தலைத் தொடர்ந்து நடைபெற்றுள்ளது. விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பிரமுகர்கள் தமிழீழ, பொருண்மிய மேம்பாட்டுக் கழக உறுப்பினர்கள், தமிழீழ நீதிச்சேவை பிரமுகர்கள் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டுள்ளனர்.

## சிறீலங்கா அரசிற்கெதிராக அக்கராயனில் எதிர்ப்புப் பேரணி

சிறீலங்கா அரசின் நிவாரணக்குறைப்பு நடவடிக்கைகளைக் கண்டித்தும், அரசால் விதிக்கப்பட்டுவரும் பொருளாதார தடைக்கெதிராகவும் எதிர்ப்புப் பேரணியொன்று கடந்த 17-ம் திகதி அக்கராயன் பகுதியில் நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுக்களின் சம்மேளனத்தால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள இவ் எதிர்ப்புப் பேரணியில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டு சிறீலங்கா அரசின் நடவடிக்கைக்கெதிராக தமது எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே சிறீலங்கா அரசு விதித்துள்ள பொருளாதாரத் தடைகளால் மிக மோசமாகப் பாதிப்படைந்த மக்களை நிவாரண வெட்டு என்ற புதிய வடிவத்திலும் அரசு பழிவாங்குவது காட்டுமிராண்டித் தனமான செயல் என இப் 'பேரணியில் கலந்துகொண்ட பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## நோர்வே தூதுவர் மட்டக்களப்புக்கு விஜயம்

சிறீலங்காவின் நோர்வே நாட்டுத் தூதுவர் ஜான்வெஸ்றபோக் கடந்தவாரம் மட்டக்களப்புப் பகுதிக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டுள்ளார். அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களின் அழைப்பின் பேரில் மட்டக்களப்புப் பகுதிக்கு வந்த தூதர், அங்கு அவர்களுடன் பேச்சுக்களை நடாத்தியுள்ளார்.

தூதரைச் சந்தித்த தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள், மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் பல்வேறு விதமான இன்னல்களையும் விரிவாக எடுத்துக் கூறினர்.

குறிப்பாக இராணுவத் தாக்குதல்கள் காரணமாக தமது கணவரை இழந்த இளவயதுப் பெண்கள், அவர்களின் பிள்ளைகள் தொடர்பான விடயங்கள் தூதரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இப் பிரச்சினைகளை விரிவாகக் கேட்ட தூதர், நோர்வே அரசு மட்டக்களப்பு பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள நிவாரண நடவடிக்கைகளுக்கு மேலும் உதவி செய்யும் என உறுதியளித்துள்ளார்.

## அம்பாறையில் 7 தமிழர்களை காணவில்லை

அம்பாறை காட்டுப் பகுதிக்கு விறகு சேகரிக்கும் நோக்கோடு சென்ற 7 தமிழர்கள் காணாமல் போயுள்ளார்கள். அம்பாறைப் பகுதி தமிழ் மக்களை மிகவும் பீதியடையச் செய்த இச் சம்பவம் கடந்த வாரம் நடைபெற்றுள்ளது. மிகவும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த இவர்கள் தமது குடும்பத் தேவைக்காக விறகு சேகரிப்பதற்காக காட்டிற்குள் சென்றனர்.

ஆனால் இவர்கள் மீண்டும் காட்டிலிருந்து திரும்பிவரவில்லை. இவர்களை சிறீலங்கா இராணுவத்தினரோ அல்லது ஊர்காவற் படையினரோ கொலை செய்திருக்கலாமென இப் பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரு மாதங்களிற்கு முன்னரும் இவ்வாறு விறகு தேடச்சென்ற மூவர் பின்னர் உருக்குலைந்த நிலையில் சடலங்களாகக் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## லெப்.சீலனின் 15வது நினைவு

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மூத்த போராளிகளில் ஒருவரான லெப். சீலனின் 15-வது நினைவெழுச்சிநாள் வன்னியில் உணர்வு பூர்வமாகக் கொண்டாடப்பட்டது.

15 வருடங்களிற்கு முன் களப்பலியாகி தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முழுமூச்சாக்க உதவிய இம் மாவீரனின் நினைவினை இவ் எழுச்சி விழாவில் பலரும் நினைவு கூர்ந்துள்ளனர்.

## யார் என்று என்னை நினைத்தாய்?

'யார் என்று என்னை நினைத்தாய்' என்ற தலைப்பிலான தெருக்கூத்து ஒன்று வன்னியில் பல்வேறு பகுதிகளிலும் தற்பொழுது நடாத்தப்பட்டு வருகிறது. மக்களைப் பெரிதும் இக் கலைநிகழ்வு கவர்ந்திழுத்து வருகிறது.

## வவுனியாவில் பதற்றம்

புளொட் எம்.பி. சண்முகநாதன் கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டதையடுத்து புளொட் குழுவினர், வவுனியா நகரிலுள்ள வர்த்தக நிறுவனங்கள் மற்றும் பொது நிறுவனங்களை மூடிவிடும்படியும் துக்கம் அனுஸ்டிக்குமாறும் உத்தரவிட்டுள்ளனர்.

புளொட் குழுவினரின் இவ் உத்தரவு காரணமாக வவுனியாவில் பதற்றம் நிலவிவருகிறது. பழிவாங்கும் தாக்குதல்களை புளொட்குழுவினர் மேற்கொள்ளுவார்கள் என்ற அச்சத்தில் பாடசாலைகளில் மாணவர் வரவு மிகக் குறைவாகவே இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப அரசியலுக்கு சுனேத்திராவின் தூது முயற்சி

கறுப்பு யூலை காலப் பகுதியில் தமிழ் மக்கள் சொரிந்த விழிநீரைப் போலவே சிறீலங்காவின் தலை நகர் கொழும்பிலும், அதன் புற நகர்ப் பகுதிகளிலும் கடந்த வாரம் மழை கொட்டோ கொட்டென்று கொட்டியது. இவ்வாறு அடாது மழை பெய் தாலும் விடாது அரசியல் நாட கங்கள் ஆங்காங்கே அரங்கே றின. இந் நாடகங்களில் குடும்ப அரசியல், பொது அரசியல் என்பனவே பிரதான காட்சிக ளாக இடம் பெற்றன.

கடந்த வாரம் நடைபெற்ற அரசியல் நிகழ்வுகளில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், ஜெய சிக்குறுய் சூத்திரதாரியுமான ரத்வத்தையின் 60 வது பிறந்த நாள் கொண்டாட்டங்கள் முக் கியமானவை. ஆட்டம் பாட் டம், குடி , விருந்து என்று இவ் விழா களைகட்டியிருந்தாலும் இறுதி நேரம்வரையும் சந்திரிகா விழாவிற்கு வராமல் ஒதுங்கிக் கொண்டமை, அரசினைக் கடு மையாக் எதிர்த்துவரும் பௌத்த மகாசங்கத்தின் சோபித தேரோ வுக்கு பிறந்தநாள் விழாவில் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் ஆகியன அலசலுக்கு உரியதாகி விட்டன. தமிழ் மக்களுக்கு சில 'சலுகைகளை' வழங்குவதற்கு உத் தேசிப்பதைக்கூட கடுமையாக எதிர்த்துவரும் பௌத்த பீடாதி பதி ஒருவருக்கு இவ் விழாவில் முக்கியத்துவம் கொடுத்ததின் மூலம்தான் யார்? தனது நோக் கம் என்ன? என்பதை ரத்வத்தை மிகத் தெளிவாக்கியுள்ளார்.

'கொடூரமான பயங்கரவாதி களை ஒடுக்கப் பாடுபடும் ஒரு தரம்வாய்ந்த வீரன்' என ரத்வத் தையைப் புகழ்ந்த சோபித தேரர், ரத்வத்தைக்கு தனது ஆசியினையும் வழங்கியுள்ளார். சோபிததேரர் இங்கு கொடூர மான பயங்கரவாதிகள் எனச் சுட்டிக்காட்டியது வெறுமனவே விடுதலைப் புலிகளை அல்ல. ஒட்டு மொத்தமான தமிழ்த் தேசி யத்தையே அவர் அவ்வாறு வகைப்படுத்தியுள்ளார். இந்த ஆசி வழங்கும் செய்கையூடாக சிங்கள தேசத்தின் பௌத்த இன வாதமும், இராணுவ ஏதேச்சதி காரமும் இரண்டு செய்திகளை



சிறிசேன குரே: 'வெற்றிடங்கள் உண்டு'

வழங்கியுள்ளன. ஒன்று கறுப்பு யூலை நிகழ்வுகள் சிங்கள தேசத் தைப் பொறுத்தவரை அனுதா பத்திற்கு உரியதல்ல, இரண்டா வது தீர்வுப் பொதியை எதிர்த்து வரும் மகாசங்கத்தின் பக்கமே ரத்வத்தை உள்ளார். அதாவது படைபலம் உள்ளது என்ப னவே அவை.

தனது அரசிற்கு பெரும் தலை யிடியாக உள்ளவர்என சந்தி ரிகா கருதும் சோபித தேரரு டன் ரத்வத்தை நெருக்கமாய் நின்ற காட்சி சந்திரிகாவை சினமடையச் செய்ததால்தான்



கலக்கும் குடும்ப அரசியல்

பிறந்தநாள் விழாவிற்கு வராது ஒதுங்கிக் கொண்டார் என்ப தும் கொழும்பில் அடிபடும் கதைகளாகும்.

## பேம்பி



**மைத்திரிபால சேனநாயகா: உலகிலேயே நீண்டகாலம் பதவி வகித்த பாராளுமன்ற உறுப்பினர் (47 வருடங்கள்) என்ற தகுதிக்கு உடையவர். யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் கல்வி கற்ற இவர், சிறீமாவின் வலது கரம் எனவும் வர்ணிக்கப்பட்டவர் கடந்த 16-ம் திகதி மரணமானார்.**

விருந்து நடைபெற்ற ரத்வத் தையின் வாசஸ்தலமான 'இஸ் ரான் மோர் கிறெசன்ட்' இல்லத்தில் முப்படைத் தளபதிகள் உள்ளிட் டதான பிரமுகர்கள் நள்ளிரவு வரை சந்திரிகாவிற்காக காத்தி ருந்தனர். ஆயினும் சந்திரிகா வர வில்லை. அறிவிப்புக்கூட கொடுக்க வில்லை. நள்ளிரவைத் தாண்டிய பின்னரே இரவு உண விற்காக பிரமுகர்கள் சென் றனர். சோபிதர் தேரரிடம் ரத் வத்தை ஆசி பெற்ற விடயம் வெறும் தனிப்பட்ட விவகார மாக பொது ஜன ஐக்கிய முன் னணியினரும் எடுத்துக் கொள்ள வில்லை. வாராந்த அமைச்சர வைக் கூட்டத்தில் இவ்விட யத்தை பலர் கிளறினர். சிலர் ரத்வத்தையுடன் தமக்கு ஏன்

'வம்பு' என்ற ரீதியில் வாழ்த்துக் களை தெரிவித்துவிட்டு சென்று விட்டனர். அரசை கடுமையாக சாடும் ஒருவருடன் முக்கிய மான பொறுப்பு(?) வகிப்பவர் எவ்வாறு நெருக்கமாகலாம் என் பதே பிரச்சினையைக் கிளறிய வர்களின் வாதமாகும். இவ் அமைச்சரவைக் கூட்டத்திற்கு வழமைபோலவே மிகத் தாமத மாக வந்த சந்திரிகா ரத்வத் தையை நோக்கவுமில்லை, அவ ருடன் பேசவுமில்லை. இவ் விட யத்தை அமைச்சரவை சகாக் கள் பலரும் அவதானித்துக் கொண்டனர்.

கூட்டத்தில் அமைச்சர் சிறி சேனா ஜனாதிபதி செயலக அதிகாரிகளை மிகக் கடுமை யாக சாடியதும் கொஞ்சம் சலசலப்பை ஏற்படுத்திய ஒரு விடயம். ஜனாதிபதி செயலக அதிகாரிகள் பலர் 'மாபியா'க் காரர்கள் போல நடப்பதாக வும், ஜனாதிபதியை பிழையாக வழிநடத்துவதாகவும் சிறிசேனா சுட்டிக்காட்டினார். இக் கூட் டத்திற்குப் பின்னர் சந்திரிகா சில அமைச்சர்களுடன் அலரி மாளிகையில் குடும்ப அரசிய லுடன் சம்பந்தப்பட்ட கூட்டம் ஒன்றை நடத்தினார்.

தனது தம்பியும் ஐ.தே.க.வின் உறுப்பினருமான அநுரா மீண் டும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி யில் இணைந்துகொள்ள வருவ ராயின் அது பற்றிய உங்கள் கருத்துக்கள் என்ன என்று நேர டியாக விடயத்திற்கு சந்திரிகா வந்தார். ஆனால் அமைச்சர்கள் முகங்களில் படர்ந்த அதிருப்தி ரேகைகளே அதற்கு பதிலாக அமைந்திருந்தன.

'1994ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது ஐ.தே.க. வேட்பாளரான காமினி திஸாநாயக்காவுடன் அநுரா ஒரே மேடையில் அமர்ந்திருந்து உங்களை கடுமையாக விமர்சித் ததை மறந்துவிட்டீர்களா? என மூத்த அமைச்சர் ஒருவர் சந்தி ரிகாவிடம் வினாவினார். 'வேண் டுமானால் அநுராவிற்கு வெளி நாடு ஒன்றில் தூதுவர் பதவியை வழங்க நாம் சம்மதிக்கலாம்' என இன்னொரு அமைச்சர் பரிகாரம் சொன்னார். அனுரா விடயத்தில் சிறீமாவிற்கும் பதில் சொல்ல வேண்டும் என்பதும் இந்த அமைச்சர்களுக்கு தெரி யாததல்ல. அனுராவை எப்படி யாவது சிறீலங்கா சுதந்திரக் கட் சிக்குள் நுழைத்துவிட வேண் டும் என்பதில் சந்திரிகாவின் அக்கா, சுனேத்திரா நாணயக் காரர பல [illegible] சந்திரி காவிடம் தூது சென்றதன் விளைவே இந்த விசேட கூட்ட மாகும்.

ஆளும் கட்சியின் நிலை இவ் வாறு இருக்க, எதிர்க் கட்சியான ஐ.தே.க.வோ உலகக் கிண்ணத்தை வென்ற பிரான்ஸ் அணியை தனது கட்சிக்கு ஒப்பிட்டு அவ் வாறன ஒரு நிலைதான் சிறீலங்கா அரசியலில் வரப்போகிறது. எதிர்பாராத ரீதியில் அரசை தோற்கடித்து நாம் ஆட்சியைக் கைப்பற்றுவோம் எனவும் சூளு ரைத்துள்ளார்.

கடந்தவாரம் நடந்த கட்சி யின் செயற்குழுக் கூட்டத்திற்கு ஏ.சி.எஸ்.ஹமீட் சமூகமளிக்கா தது ஒரு முக்கியமான விடயம். மாகாணசபைத் தேர்தல்களில் கட்சி வெற்றியடைவதற்கு ஏற்ற வழிவகைகளை உருவாக்கித்தரு மாறு முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல்லிடம் ரணில் வேண்டுகோள் விடுத்ததானது அனுரா எதிர்ப்பு ஆட்டத்தில் காயை றொனி டி மெல் பக்கம் ரணில் நகர்த்துவது தெரிகிறது. இந்த ஆட்டத்தில் அடுத்து அநுரா செய்யப் போவது என்ன என்பதே இப்போது ஐ.தே.க. உறுப்பினர்களிடையே எழுந்துள்ள ஒரு கேள்வியாகும்.

## குசும்புச் சித்தர் செப்பல்கள்

ஆர் என்ன சொல்லுறதெண்டு ஒரு விவஸ்தையில்லாமல் போச்சு! செம்மணியிலை இருக்கிற புதை குழியளைச் சட்டெண்டு தோண்டவேண்டுமெண்டு புளொட் மாணிக்கமானவர் கேட்டுக் கொண்டிருக்கிறார். அப்ப இவையள் புதைச்சதுகளை தோண்டச் சொல்லி ஆர் கேட்கிறது பாருங்கோ!

• • •

யாழிலை உள்ள சாவடியளிலை இருக்கிறவை தங்களைக் கடந்து போறவை வாறவையை துருவல் சோதனை நடத்துகினமாம். மறவர் படை ஆக்களை கப்பெண்டு பிடிக்கிறதுதானாம் சோத னையின்ரை நோக்கம். ஆனா சோதனை நடக்கேக்கை மூச்சை தம் பிடிச்சு நிக்கச் சனம் பழகி வருகுதாம். சீருடையின் 'வாசனை'தான் அதற்குக் காரணமாம்.

அதுசரி, சோதனை நடத்துறவைக்கு போக்கு காட்டி அடிக்கிறது மறவர் படையினருக்கு கைவந்த கலையெண்டு தெரியாதோ...?

• • •

யாழ். மாநகர பணியகத்திலை எங்கும் தொங்குவது புட்டபர்த்தி பகவானார் படமாம். உள்ளக அன்பளிப்புக்களாய் கூட படங்கள் 'கைமாறும்' நிலையாம்.

• • •

சிங்கக் கொடியாரின்ரை உளவுத் துறை புதிசாய் அவிட்டு விட்ட மறவர் படை சங்கதி, தலைநகரிலை பெரிசாய் கோரம் எடுபடேல் லையாம்.

'முன்னொரு தடவை, மறவர் படை ஆலோசகர் படுத்த படுக்கையாய் கிடக்கிறார், இனி தப்புறது கஷ்டம் எண்டு உவை சொன்னவை. ஆனால் கிறிஸ்தவ மேய்ப்பனார் வன்னிக்கு போன சமயம் ஆலோசகர் கச்சிதமாய் பேச்சுக்களிலை பங்கேற்றதை நாம் மறப்பமோ?' எண்டு சிங்கக்கொடி செய்தியாளர் ஒருவர் வாய்விட்டும் சொல்லிக் கொண்டாராம்.

• • •

யாழிலை இருக்கிற பொதுத்தொலைபேசிக் கூடங்களெல்லாம் அடிக்கடி செத்துப்போகும் நிலை! அது இயற்கையான மரணம் தானோ எண்டு தொலைபேசிப் பிரியர்கள் சிலர் ஆய்வுசெய்து முடிவையும் கண்டு பிடிச்சிட்டினம். மர்ணமடைந்த தொலைபேசிக் கூடங்களுக்குப் பக்கத்திலை இருக்கிற தனியார் தொலைபேசிக் கூடங்களை நோக்கித் தான் சுட்டுவிரல் நீளுதாம்.

• • •

சிங்கக்கொடியாரின்ரை நகர காவலர்களின் தலைமைப் பணியகத் திலையிருந்து ஆயிரக்கணக்கான கடிதத் தலைப்புகள் மாயமாம். மாயமானதிலைபெரியவரின்ரை கடிதத் தலைப்புகளும் அடங்குதாம். விசயத்தை விசாரிக்க இரகசிய காவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கினமாம். காவல் இல்லாதவைக்கு காவல் காக்கிற காவலருக்கே காவல் இல்லை யெண்டா அதை எந்தக் காவலரிடம் சொல்லுறதாம்?

• • •

மலையகக் கட்சி செயலாளர் ஒருத்தர் எழுதின இராஜினாமாக் கடிதம் நூற்றியேழு பக்கங்களைக் கொண்டதாம். உலகத்திலை இது தான் அதி நீளமான இராஜினாமா கடிதம் எண்டும் கதை அடிபடுகிறது. அக் கடிதத்தை புத்தகமாக்கி கின்னஸ் புத்தகத்திலை இடம்பிடிக்கச் செய்யவும் சிலர் முயற்சி செய்கினம். பதவி இருந்தாலும் பெயர்வரும் இல் லாட்டிலும் பெயர் வரும் ஞானத்தங்கமே.

• • •

உலகக் கிண்ணப்போட்டி வெற்றியை புகலிடம் 'பெற்ற' தமிழர் கள் களிகூர்ந்தமுறை சரியா பிழையா எண்டு புகலிட வானலை யார் வைச்ச விவாதம் 'தேவைதானோ' எண்டு விளையாட்டு ரசிகர் கள் பலர் முகத்தைச் சுளிச்சிருக்கினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி தேடும் நீதி விழா!

தமிழ் நாட்டின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 26 பேருக்கும் நீதி கோரும் போராட்டத்திற்கு ஜேர்மனியில் ஒரு நீதிவிழா நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம், தமிழருவி ஆதரவுடன் அடுத்தமாதம் நடாத்தவுள்ள இவ் விழாவில் எழுச்சிக் கலை நிகழ்ச்சிகளுடன் தமிழ் நாட்டில் இருந்தும் அறிஞர்கள் வருகை தந்து உரையாற்ற உள்ளனர். நீதிக்கும் புறம்பான தீர்ப்பை எதிர்த்து நீதிகோரி வழக்காடவுள்ள தமிழகத்து பழ. நெடுமாறனின் முயற்சிக்கு ஆதரவளிக்கும் முகமாகவே, இதனை ஏற்பாடு செய்துள்ளோம் என உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க பொதுச் செயலாளர் திரு. கே.ரி. கணேசலிங்கம் தெரிவித்தார். மனிதநேயமும், தமிழ் உணர்வும், கருணையும் கொண்ட அனைவரும் இதற்கு ஆதரவளிக்குமாறு அவர் மேலும் கேட்டுள்ளார். விழா தொடர்பான விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படும்.

## அமெரிக்க புலமைப் பரிசில் பெற்ற தமிழ் மாணவி

ஜேர்மனியில் அமெரிக்கப் புலமைப் பரிசிலை புலம்பெயர் வாழ் தமிழ் மாணவி செல்வி ஜொஸ்லின் செல்வரத்தினம் பெற்றுள்ளார். தாயகத்தில் நெடுந்தீவைச் சேர்ந்த இவர், ஏர்க்கெலன்ஸ் தமிழாலய மாணவி என்பது குறிப்பிடத்தக்கது.

ஜேர்மன் அமெரிக்க நட்புறவை வளர்க்கும் முகமாக ஜேர்மன் பாடசாலைகளில் 10ம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கான அமெரிக்க நாட்டின் உயர் கல்வி புலமைப் பரிசில் ஜேர்மன் பாராளுமன்றத்தினால் ஒவ்வொரு வருடமும் ஒரு தொகுதிக்கு ஒரு மாணவர் என்ற அடிப்படையில் தெரிவு செய்யப்படுவது வழக்கம்.

1998 - 1999ம் ஆண்டுக்கு கமின்ஸ்பேர்க் தொகுதியில் இருந்து மேற்படி மாணவி தெரிவு செய்யப்பட்டுள்ளார். அறுபதிற்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் தேர்விற்குச் சென்றிருந்தபோதும் இறுதியில் இவரே தெரிவு செய்யப்பட்டார். இதற்கு இவரின் திறமையும் ஒழுக்கமுமே காரணமாகும்.

## ஜேர்மனியில் அகதிகள் பேரணி

ஜேர்மனியில் அகதிகள் குடிபெயர்ந்தோர் உரிமைக்கான யாத்திரையொன்று இடம்பெறவுள்ளது. 14.08.98 தொடக்கம் 20.09.98 வரை இப் பேரணி தொடர்ச்சியாக நடைபெறும்.

'பிறேமன் நகரில் ஆரம்பமாகும் இப் பேரணி, கேல்ண் நகரில் முடிவடையும். ஒல்டன் பேர்க், பிறேமன், கம்பேர்க், லுயிபெக், கீல், ரொஸ்டொக், பெர்லின், கனோவர், காசல், கொட்டிங்கன், முன்சன், பிராங்போட், கேல்ன் உட்பட 383 நகரங்களுக்கூடாக இப் பேரணி நடாத்தப்படும்.

பல அகதிகளுக்கான நிறுவனங்கள் குடி பெயர்ந்தோர் நிறுவனங்கள் மற்றும் இன துவேஷங்களிற்கெதிரான அமைப்புகள் இணைந்து, அகதிகள் மீது பரவலாக நடாத்தப்படும் தாக்குதலுக்கு எதிராக இப் பேரணி நடாத்தப்படவுள்ளது. ஜேர்மன் பொதுத் தேர்தலுக்கு ஒரு கிழமைக்கு முன்பாக முடிவுக்கு வரும் இப்பேரணியானது ஐந்து கிழமைகளுக்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதிக தூரமான இடங்களை பஸ் வண்டிகள் மூலமும் சில இடங்களில் கப்பல் மூலமாகவும் செல்வதுடன் மக்கள் செறிவான பகுதிகளில் கால்நடையாகவும் செல்ல பேரணி ஏற்பாட்டாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

## மிருசுவில் படை அதிகாரி சிப்பாயினால் சுட்டுக்கொலை

யாழ். தென்மராட்சியில் உள்ள மிருசுவில் இராணுவ முகாமின் பொறுப்பதிகாரியான மேஜர் ஒருவரை, அங்கு கடமையாற்றிய சிப்பாய் ஒருவர் சுட்டுக்கொலை செய்துள்ளார். இராணுவ சேவையில் இருந்து தப்பியோடி, பின்னர் கைது செய்யப்பட்டு இங்கு அனுப்பப்பட்ட சிப்பாய் ஒருவரே இக்கொலையைப் புரிந்துள்ளார். தன்னை வீடுசெல்ல அனுமதிக்குமாறு இச் சிப்பாய் பலதடவை இவரிடம் கோரிய போது, அதிகாரி அவரை எச்சரிக்கை செய்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த சிப்பாய் தனது துப்பாக்கியினால் அதிகாரியை ஆறு தடவைகள் சுட்டுள்ளார். இச் சம்பவத்தைத் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்த சிப்பாயை இராணுவப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

## நெல்லியடி யுவதியின் சடலம் குண்டசாலையில் மீட்பு

பருத்தித்துறை நெல்லியடியைச் சேர்ந்த சிவஞானம் சஜித்தா என்ற 25 வயதான யுவதியின் சடலம் குண்டசாலையில் உள்ள வீடொன்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூர் நாட்டில் பணிபுரிந்துவிட்டு கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் நாடு திரும்பிய இவர் குண்டசாலையில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்து டென்மார்க் நாடு செல்வதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டவர் எனவும், ஆனால் கடந்த 17ம் திகதி கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் இவரது சடலம் தம்மால் கண்டெடுக்கப்பட்டதெனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். இவர் தற்கொலை செய்துகொண்டாரா? அல்லது கொலை செய்யப்பட்டு தூக்கில் இடப்பட்டாரா என்பது குறித்து பொலிசார் கருத்துக்கள் எதுவும் தெரிவிக்கவில்லை.

## மாலைதீவு அமைச்சரின் கொழும்பு வதிவிடத்தில் கொள்ளை

மாலைதீவு அமைச்சர் ஒருவருக்கு சொந்தமான வெள்ளவத்தை வீடொன்றில் இருந்து இலட்சக் கணக்கான ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன. அமைச்சரும் அவரது மனைவியும் மாலைதீவில் தங்கியிருக்கும் வேளையிலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. இக் கொள்ளையில் இவர்களது வீட்டுக் கார் சாரதியும் உடந்தையாக இருந்துள்ளார் என வெள்ளவத்தைப் பொலிசார் தெரிவித்துள்ளதுடன், கொள்ளையிடப்பட்ட நகைகளின் ஒரு பகுதி மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

## கொட்டாஞ்சேனை தேடுதல் வேட்டையில் எட்டுப்பேர் கைது

கொட்டாஞ்சேனைப் பகுதியில் கடந்த 17ம் தியதியன்று நள்ளிரவு தொடக்கம் மறுநாள் அதிகாலை வரை நடாத்தப்பட்ட பாரிய தேடுதல் வேட்டையில் ஒரு பெண் உட்பட 8 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ரட்ணம் வீதி, நியூன்காம் சதுக்கம், செக்கட்டித்தெரு, மேட்டுத் தெரு ஆகிய பகுதிகளை பெருமளவு இராணுவத்தினரும், பொலிசாரும் சுற்றிவளைத்து வீடுவீடாகத் தேடுதல் நடாத்தினர். வீட்டில் இருந்தவர்களை வெளியே அழைத்த படையினர் அவர்களில் தமிழர்களாக இனம் காணப்பட்டவர்களை நான்கு பேருந்துகளில் ஏற்றி கொட்டாஞ்சேனைப் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுசென்றுள்ளனர். பின்னர் அவர்கள் மீது நடாத்தப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்தே மேற்படி 8 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## நடைபாதை குறிப்புகள்

### அன்னிய மொழியால் ஏற்பட்ட அவஸ்தை

கடந்தமாதம் மலேசியாவிலிருந்து தமிழ் அன்பர் ஒருவர் சூரிச் மாநகருக்கு வந்திருந்தார். அவர் சூரிச்சிலுள்ள ஒரு ஈழத் தமிழரின் நட்பைப் பெற்று இருவருமே சூரிச் நகரைச் சற்றுச் சுற்றிப்பார்த்தனர். அப்போது சூரிச் நகரிலுள்ள வெல்வி ஏரிக்கரையையும் சுற்றி அங்கு தரித்திருந்த சிறிய கப்பல்கள் வள்ளங்கள் என்பவற்றையும் கண்டு சென்றார்கள். மீண்டும் மறுநாள் இருவரும் சந்திக்க நேரம் குறிக்கப்பட்டிருந்தது. மலேசிய அன்பர் சூரிச் பிரதான புகையிரதத்திலிருந்து தனது ஈழத் தமிழ் நண்பரிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு, தன்னை வந்து அழைத்துச் செல்லுமாறு கூறினார். அப்போது அந்த ஈழத்து நண்பர் பிரதான புகையிரத நிலையத்திலுள்ள புகையிரத நேர அட்டவணைப் பலகைக்கு அருகில் நிற்குமாறு கூறினார். கூறும்போது 'போட்டுக்கு அருகில் நில்லும்' வாறேன் என்றார். குறித்த நேரத்திற்கு அவ்விடம் வந்த ஈழத்து நண்பர் அட்டவணை 'போட்டுக்கு' அருகில் வந்து தேடிவிட்டு அந்த நண்பரைக் காணாததால் திரும்பிவிட்டார். மீண்டும் இருவரும் சந்தித்தபோது உண்மை புரிந்தது. அதாவது அந்த மலேசிய அன்பர் வெல்வி ஏரிக்கரையில் உள்ள போட்டுக்கு (வள்ளம்) அருகில் காத்திருக்க, ஈழ நண்பர் புகையிரத 'போட்டுக்கு' அருகில் தேடிவிட்டுச் சென்றிருந்தார். இது தமிழ்மொழியில் அன்னிய மொழி சேர்ந்ததால் ஏற்பட்ட துன்பமாகும்.

## வவுனியா வைத்தியசாலையில் உரிமை கோரப்படாத ஆறு சடலங்கள்

வவுனியா வைத்திசாலையில் உரிமை கோரப்படாத நிலையில் உள்ள 6 சடலங்களையும் அடக்கம் செய்வதற்கு மேலிடத்து உத்தரவிற்காக காத்திருப்பதாக பதில் மாவட்ட வைத்திய அதிகாரி குறிப்பிட்டுள்ளார். வவுனியா தடை முகாம்களில் பாதுகாப்புப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களில் நோய் வாய்ப்பட்டு இறந்தவர்களே அரச வைத்தியசாலை சவச்சாலையில வைக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களில் சிறு குழந்தைகளும் அடங்குவர் எனவும் தெரிவித்த வைத்திய அதிகாரி, வெளியிடங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட சில சடலங்களும் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## ASCES புதிய வகுப்புகள்

எமது பாடசாலை மாணவர்கள் 97/98 கல்வியாண்டில் சிறந்த புள்ளிகளைப் பெற்று முதல் மாணாக்கராகத் திகழ்கின்றனர்.

பாடசாலை மாணவர்களுக்கான Bio, Chimie, Physique, Maths, Anglais, Informatique, Français, Histoire....ect வகுப்புகள் நடைபெறுகின்றன.

**பிரெஞ்சு**
26.07.98 ஞாயிறு பி.ப 3.30 மணி
11.07.98 சனி மு.ப. 10 மணி
08.07.98 புதன் பி.ப. 3.30 மணி
27.07.98 திங்கள் பி.ப. 2.30

**ஆங்கிலம்**
Cambridge, Toefl பரீட்சைகளுக்கும்; பாடசாலை மாணவர்களுக்குமான வகுப்புகள்
18.07.98 சனி பி.ப 1.30 மணி
26.07.98 ஞாயிறு மு.ப 10 மணி
27.07.98 திங்கள் பி.ப 2.30 மணி

**கம்பியூட்டர்**
26.07.98 ஞாயிறு பி.ப 4 மணி
27.07.98 திங்கள் பி.ப 5.30 மணி

சிறுவர்களுக்கான தமிழ், பிரஞ்சு, கணித, ஆங்கில, நடன வகுப்புகள் பிரதி சனி தோறும் பி.ப 1.30 மணி முதல்
**தையல்/கேக் அலங்காரம்:** 25.07.98 சனி பி.ப 2 மணி
**கராத்தே:** திங்கள் மாலை 4மணி, புதன் பி.ப 3.30 மணி

*சனி, ஞாயிறு வகுப்புகள் நடைபெறும் இடம்:*
41, Rue Didot, 75014 Paris. M°: Pernety (N°:13) - Tel: 01 42 57 23 56

**பாரதி நுண்கலைக் கல்லூரி**
**25.07.98 சனி பிற்பகல் 3.30 மணி** - சிறார்களுக்கான தமிழ், பிரெஞ்சு, ஆங்கிலம், கணித, நடன வகுப்புக்கள்
**22.07.98 புதன் பிற்பகல் 3.30 மணி** - நடனம், சங்கீதம், தமிழ், பிரெஞ்சு, ஆங்கில வகுப்புக்கள்

*திங்கள், செவ்வாய். புதன், சனி வகுப்புகள் நடைபெறும் இடம்:*
**2, Rue Esclagnon, 75018 Paris.**
**M°: Porte de Clignancourt - Tel: 01 42 57 23 56**
Pub


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் மீண்டும் ஒரு கறுப்பு ஜூலை வராமல் தடுக்க முடியும்





## கறுப்பு ஜூலை நினைவுகள்

எலி ஸ்கார்ஸ்ரின், ஒரு நோர்வேஜிய பெண்மணி! 83 இன் கோடை காலத்தினை நோர்வேயில் அனுபவிக்க விரும்பாமல், 'தென்னாசியாவின் முத்தான' சிறீலங்காவிற்கு கண்டம் கடந்து பறந்தார்.

83 இன் கறுப்பு ஜூலையில் கொழும்பு கசாப்புக் கடையாக மாறிக்கொண்டிருந்த வேளை, தனது விடுமுறையை முடித்துக் கொண்டு கட்டுநாயக்கா விமான நிலையத்தினை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த இவரின் வாகனத்தினை மறித்த சிங்கள காடையர்கள் சிலர் தமிழர்கள் எவரும் இருக்கின்றனரா என வெறிபிடித்தவர்களாய் துருவி ஆராய்ந்தனர். அதே சமயம் இந்த நோர்வேஜிய பெண்மணியின் கண்முன்னால் வந்து தரித்த தனியார் பேருந்து ஒன்று எவ்வாறு அதற்குள் இருந்த தமிழர்களுடன் கோரமாக தீயிட்டு கொழுத்தப்பட்டது என்பதையும் அவர் திகிலுடன் இவ்வாறு விபரிக்கின்றார்.

'நாம் பயணம் செய்த வாகனத்தில் தமிழர்கள் எவரும் இல்லை என்று அறிந்ததுமே வெறி பிடித்தவர்களாய் அவர்கள் வாகனத்தினை விட்டு இறங்கி ஓடினார்கள். விதியின் குறுக்கும் மறுக்குமாக பலர் ஆவேசத்துடன் ஓடித்திரிந்ததைக் கண்டேன். அப்போதே எனது கண் முன்னால் வந்து நின்ற ஒரு வாகனத்திற்குள் ஏறிய அந்த காடையர்கள் சிறிது நேரத்திற்கெல்லாம் அந்த வாகனத்தின் கதவுகளை இறுகப்பூட்டி எரிபொருள் வாகனம் முழுக்க ஊற்றி தீயிட்டனர். வாகனத்திற்குள் இருந்து கூக்குரல்கள் கேட்டுக்கொண்டிருந்தன. எனது கண் முன்னாலேயே அவர்கள் கருகி மாண்டதை கண்டேன்'

இந்த பெண்மணியை பேட்டி கண்ட பி.பி.சி யின் பேட்டியாளர்கள் இவரை இடைமறித்து, இவ்வாறு கேட்கின்றார். 'அப்படி எரிக்கப்பட்டவர்கள் தமிழர்கள்தானா என எவ்வாறு கூறுவீர்கள்?

அதற்கு அந்த பெண்மணி, 'எனது வாகனத்தில் ஏறி தமிழர்கள் எவரும் இருக்கின்றார்களா? என ஆவேசத்துடன் வினவியவர்கள் ஓடிச் சென்று இன்னுமொரு வாகனத்தை மறித்து தீயிடுகின்றார்கள்; அப்போ அவ்வாறு எரியூட்டப்பட்டவர்கள் தமிழர்கள் அல்லாமல் எவ்வாறாயிருக்க வேண்டும்?'

அவர் மேலும் இப்படி தொடர்கின்றார். 'இந்த கொடூரம் நடந்துகொண்டிருப்பதை சில பொலிசாரும் இராணுவத்தினரும் பார்த்துக்கொண்டு வாளாது இருந்தனர். எனது கண்முன்னால் அலறியபடியே கருகிமாண்ட அந்த மனிதர்கள் அவலத்தினை என்னால் என்றுமே மறக்க முடியாது'.

இந்த எலி ஸ்கார்ஸ்ரயினின் பயங்கர அனுபவம் நோர்வேஜிய செய்தியூடகங்கள் அனைத்திலுமே முக்கியத்துவப்படுத்தப்பட்டது. சர்வதேச செய்தி நிறுவனங்கள் இவரை தொடர்ந்து பேட்டி கண்டன. பி.பி.சி. பல நாட்களிற்கு இவரை தொடர்பு கொண்டது. 83 இன் அனர்த்தங்கள் தொடர்ந்து வெளியிடப்பட்ட அறிக்கைகள் பலவற்றிலும் இவரின் திகில் அனுபவம் தவறாமல் இடம் பெற்றது.

இந்தப் பெண்மணி விபரிக்கும் அகோர அனுபவம் போல பல நூற்றுக்கணக்கான பயங்கரங்கள் ஒரு இன அழிப்பில் இடம்பெற்றது. பல ஆயிரக் கணக்கான தனி மனித அவலங்கள் அரங்கேறியது.

முரளி, யாழ் இந்துக்கல்லூரியின் பழைய மாணவன் க.பொ.த. உயர்தரப் படிப்பை முடித்துவிட்டு கொழும்பில் 'கைட்ராமணி' எனும் தனியார் விற்பனை நிலையம் ஒன்றில் பணிபுரிந்து கொண்டு இருந்தவர். தமிழர் ஒருவரின் வர்த்தக நிலையம் என்பதால் ஆவேசத்துடன், ஆயுதங்களுடன் நெருங்கிய காடையர்களைக் கண்டு இவரும் இவரின் நண்பன் ஒருவரும் வீதியில் இறங்கி ஓடமுடியாமல் மேல்மாடியினை நோக்கி ஓடுகின்றனர். ஓடிக்கொண்டிருந்தவர்கள் கீழ் மாடியில் கடையில் காடையர்கள் மூட்டப்பட்ட தீ மேல் மாளிகைக்கும் வேகமாக பரவுகிறது. நண்பனே குதிப்போம் என்கின்றான், உயரமான கட்டடம் இவன் தயங்குகின்றான்.

நண்பனோ நெருங்கிவரும் தீயிலும் குதிப்பது மேல் என பாய்கின்றான். முறிந்த கால்களுடன் நண்பன் உயிர்தப்ப, 'கைட்ராமணியின்' உச்சத்து மாடியில் அந்த முரளி கருகியவனாய் கிடக்கின்றான்.

நினைவை மீட்க இன்னுமொரு சம்பவம்...

யாழ்ப்பாணத்தின் மேற்கு அரியாலையின் வீதியொன்றின் வழியாக மாலைக் கருக்கல் வேளையொன்றில் ஓடி வருகிறாள் ஒரு தாய். 'ஐயோ எனது மகனை கொண்டு போட்டாங்கள்' தீர்ப்பதற்கு திராணியில்லாத அந்தத் தாய் வீதியில் கிடந்த மண்ணை எடுத்து தனது நெஞ்சில் வாரி எறிந்தபடியே உரக்க ஓலமிடுகின்றாள். அவளது ஓலத்திற்கு காரணம், சிறிது நேரத்திற்கு முன்னர் தான் சிறீலங்கா வானொலி வாசித்து முடித்த, வெலிக்கடையில் கொல்லப்பட்டவர்களின் நீண்டதொரு பெயர்பட்டியலில் அவளின் மகனின் பெயரும் அடங்கியிருந்ததே. பல மாதங்களாக பெரிய மனிதர்களிடமெல்லாம் அலைந்து திரிந்த பின்னர், வெலிக்கடைச் சிறையில் வாடும் தனது மகன் விடுவிக்கப்பட்டு விடுவான் என்ற நம்பிக்கைகள் உடைந்து மகன் இல்லை என்று ஆனதில் உச்சத்து சோகத்திலேயே அந்தத்தாய் அப்படிக் குரல் கொடுத்து ஓலமிட்டாள்.

அவளது மகனின் பெயர் ராஜன் அழகராஜா. யாழ் செயலகத்தில் கடைநிலை ஊழியனாக பணிபுரிந்து வந்தவன் யாழ். செயலகத்தில் இடம் பெற்றிருந்த குண்டுவெடிப்பைத் தொடர்ந்து சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டிருந்தவன். குண்டு வெடிப்பிற்கும் இவனுக்கும் சம்பந்தமெதுவும் இல்லை என்பதால் இவனின் விடுதலை நாட்களை எண்ணிக் கொண்டிருந்தது இவனது குடும்பம்.

ஜூலை மாதத்து 25ம் திகதி 37 பேரும் இரண்டு நாட்கள் கழித்து 27ம் திகதி 16 பேருமாக மொத்தம் 53 பேர் வெலிக்கடையின் சிறைக் கதவிற்குள் அடைத்து வைக்கப்பட்டு ராஜன் அழகராஜா போலவே காட்டுமிராடித்தனமாக காவு கொள்ளப்பட்டனர்.

வெலிக்கடை அகோரத்தில் சம்பந்தப்பட்ட அனைத்து தமிழர்களின் அவல முடிவின் பின்னனுபவம் வார்த்தையில் வடிக்க முடியாத சோகமிருக்கும்.

> **அடிப்பவனைத் தடுத்து திருப்பி அடிப்பது அவலத்தைப் போக்கி விடுதலை அடைய வழி என்ற எளிதான புரிதலுடனும், இலட்சியப் பற்றுடனும் தியாக உணர்வுடனும் இயங்கிவந்த விடுதலைப் புலிகளுடனும் ஆயிரக் கணக்கில் இளையவர்கள் சேர்ந்துகொண்டனர்.**

இவையுமாய் இன்னம் பலவுமாய் பல ஆயிரம் சோகங்களை அந்த கறுப்பு ஜூலையில் நடந்து முடிந்தது. இனக்கலவரம் என்ற பதத்தை சர்வதேசமுமே பயன்படுத்தியது. கலவரம் என்றால் சம்பந்தப்படுகின்ற தரப்பினர் அனர்த்தங்கள் புரிய வேண்டும். ஆனால் அந்த ஜூலையில் நடந்ததோ இன அழிப்பு. அந்த சொல்லே 83 ஜூலை சம்பவங்களிற்கு மிகப் பொருத்தமானது. ஏனெனில் தமிழர்களே அவர்கள் சார்ந்திருந்த இனம் சார்ந்து அழிக்கப்பட்டனர். தற்பாதுகாப்புக்குத் தன்னும் சிங்களவர்கள் சம்பவங்களில் கொல்லப்பட்டதாக பதிவுகள் இல்லை. திருநெல்வேலியில் அதிர்ந்த கண்ணி வெடியும் கொல்லப்பட்ட 13 இராணுவத்தினருமே தெற்கின் மறு தாக்கத்திற்கு காரணம் என்று வாதங்கள் கூறப்பட்ட போதும், தமிழர்கள் ஒழுங்கு படுத்தப்பட்ட முறையில், திட்டமிட்ட ரீதியில் வாக்காளர் பதிவுப் பட்டியலின் துணை கொண்டு கூட தாக்கப்பட்டனர். என்பது பின்னர் நிறுவப்பட்ட தகவல்கள். பல மட்டங்களிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையும் கூட.

83 இன் அனர்த்தங்களையும் தொடர்ந்து சர்வதேசமுமே தமிழருக்காய் கண்ணீர் விட்டது. தமிழர்கள் இன ரீதியாக அடக்கப்படுகின்றனர் என்று ஏற்றுக்கொண்டது. அடக்கப்படும் தமிழருக்காய் அன்று அனுதாபக்குரல் கொடுத்த சர்வதேசமும் தமிழர்கள் இனரீதியாக அடக்கப்படுவதன் காரணத்திற்கான ஆழ அகலங்களை ஆராய்ந்து இலங்கை இனப் பிரச்சினையில் தார்மிக ரீதியான நிலைப்பாட்டை எடுக்கவில்லை. அல்லது எடுக்க விரும்பவில்லை. அடி வாங்குபவனுக்காய் குரல் கொடுக்கின்ற தமது நலன்களிற்கும் வசதியான போக்கையே சர்வதேசம் கொண்டிருந்தது.

அடிப்பவனைத் தடுக்க எந்தச் சர்வதேச சண்டியனும் நியாயத்திற்காய் வரப்போவதில்லை. அடிப்பவனைத் தடுத்து திருப்பி அடிப்பது அவலத்தைப் போக்கி விடுதலை அடைய வழி என்ற எளிதான புரிதலுடனும், இலட்சியப் பற்றுடனும் தியாக உணர்வுடனும் இயங்கி வந்த விடுதலைப் புலிகளுடனும் ஆயிரக் கணக்கில் இளையவர்கள் சேர்ந்துகொண்டனர்.

இத்தனை அனர்த்தங்களையும் புரிந்துகொண்டும் ஜெயவர்த்தனா முன்னர் ஒரு முறை 'போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்' என்று கொக்கரித்தபோதே இலட்சியப் பற்றுக்கொண்ட சிலர் உரிமையுடனான சமாதானத்தினை நீயாக வாங்கிவிட்டால் போர்தான் முடிவு. எதிர்கொண்டு பார் என தமிழினத்தின் ஆன்மாவின் அடித்தளத்தில் சில உறுதிப்பாடுகளை எடுத்துக்கொண்டனர்.

1983 இன் ஜூலை கலவரங்கள் இன்று இலங்கை இனப் பிரச்சினை பற்றி ஆய்வு செய்வோர் அனைவராலும் பிரச்சினைகள் முனைப்புப் பெற்ற முறிவுப்புள்ளியாகவோ அல்லது போர் தொடங்கிய வருடமாக காட்டப்பட்டு வருகின்றது. இலங்கை இனப் பிரச்சினையினை 83 ல் இருந்தே ஆராய முனையும் குறும்பார்வை குறைபாடுகொண்ட பலரும் கற்காமல் இல்லை.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிக் களத்தில் புலிகளின் அதிரடி வைத்தியம்

'புளியங்குளச் சந்தி' சிறீலங்கா இராணுவத்தின் ஜெயசிக்குறுய் படை நடவடிக்கையில் வரலாற்று ரீதியாக மிகப் பாரிய யுத்தங்களை எதிர்கொண்ட ஓர் இடம். முன்னரங்க காவலரண் பகுதியில் மாலதி படைப் பிரிவினர் தளமமைத்து இராணுவத்தின் நகர்வுகளை எதிர்கொண்டிருந்தனர். இந்நிலையில் ஜெயசிக்குறுய் படையணியின் இரண்டு யுத்தத் தாங்கிகளைக்கொண்ட படைப்பிரிவொன்று எதிர்பாராத வேளையில் விடுதலைப் புலிகளின் முன்னரங்க காவல் நிலைகளைத் தகர்த்தபடி முன்னேறத்தொடங்கியது. திடீரென மூண்ட யுத்தத்தினால் தாங்கிகளின் முன்னேற்றத்தை மாலதி படையணியால் தடுக்க முடியவில்லை. இவ்வேளை அடுத்த நிலையில் நிலைகொண்டிருந்த சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு தாங்கிப் படையணியை தடுத்து நிறுத்தி உக்கிரமான தாக்குதலைத் தொடுத்தது.

இப்போது சிறீலங்காவின் படைகள் தடுமாறத்தொடங்கின. தாங்கிகள் இரண்டும் மீண்டும் திசை தடுமாறி எத்திசையில் செல்வதென்பதை அறியாமல் ஓடத்தொடங்கின. பின்வாங்கிய தாங்கிகள் மீண்டும் மாலதி படை அணியின் பிராந்தியத்திற்குள் நுழைந்தபோது அவர்கள் அதை உடனடியாகத் தாக்க முயற்சிக்கவில்லை. இப்பிராந்தியத்திற்குள் நுழைந்த தாங்கிகள் விடுதலைப் புலிகளினுடையவையா? அல்லது சிறீலங்கா இராணுவத்தினதா? என்ற குழப்பமே இதற்குக் காரணம். படையணியின் தொலைத்தொடர்புப் பிரிவினர் தாங்கிப் பிரிவினருடன் தொடர்புகொண்டு தாங்கிகள் சிறீலங்காவினுடையது என்பதை உறுதி செய்தவேளை தாங்கிகள் இரண்டும் தப்பிப் பிழைத்து தமது பாதுகாப்பு வலையத்திற்குள் புகுந்துகொண்டன.

ஒரு வருடத்தைத் தாண்டி இரண்டாவது வருடத்தில் அடியெடுத்து வைத்து இரண்டு மாதங்களாக அதே பகுதியில் தரித்து நிற்கும் ஜெயசிக்குறுய் வரலாற்றுச் சமரின் ஓர் போர்க்கள நிகழ்வே இது. சிறீலங்கா படைத்தலைமை தனது அனுபவம் வாய்ந்த, திறமை மிக்க இராணுவ அணிகளைக்கொண்டு வன்னி மண்ணில் மேற்கொள்ள முயன்றுள்ள ஜெயசிக்குறுய் படைநகர்வில் இதுபோன்று ஏராளமான இராணுவத் தோல்விகளை சந்தித்து வருகின்றது.




யாழ். குடாவில் அது மேற்கொண்ட சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின்போது மூன்று படைப்பிரிவுகளைக் கொண்டு தனது நகர்வை மேற்கொண்டிருந்தது. அன்றைய படை நடைவடிக்கை முடிவின் போது இருபது வரையிலான இராணுவ அதிகாரிகள் இறந்தும், 150 இற்கும் மேற்பட்ட அதிகாரிகள் காயங்களுக்கும் உள்ளாகியும் இருந்தனர். அங்கு சிறீலங்காவின் வெற்றியை அதன் கனரக படைப்பிரிவே உறுதி செய்திருந்தது. ஆனால் அந்த நம்பிக்கையுடன் வன்னிப் பெரு நிலப்பரப்பில் இராணுவ நடவடிக்கையை கனரக படைப்பிரிவுகளின் உதவியுடன் மேற்கொள்ள முயன்ற சிறீலங்கா தனது பாரிய இராணுவத் தோல்விகளை சந்தித்து வருகின்றது.

விடுதலைப் புலிகளின் பலத்தை மிகக் குறைத்து மதிப்பிட்டிருந்த சிறீலங்கா படைத் தலைமை யாழ். குடாவில் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட பின்னடைவினை இராணுவ ரீதியாக விடுதலைப் புலிகள் பலவீனமடைந்துவிட்டனர் என்ற முடிவிற்கு வந்தது. அந்தத் துணிவில் வன்னியில் பெரும் படைநகர்வை கனரக படைப்பிரிவுகளின் உதவியுடன் முன்னோக்கி நகர்த்தியது. விடுதலைப் புலிகளின் சிறிய எதிர்ப்புக்களுடன் ஓரளவிற்கு முன்னேறிய சிறீலங்கா இராணுவம் தாண்டிக்குளம் நொச்சிமோட்டைப் பகுதியில் தனது நடவடிக்கை தலைமையகத்தை அமைத்துக்கொண்டது. அங்கு 55-வது பிரிவின் நடவடிக்கைத் தலைமையகம், பீரங்கிப் பிரிவின் தலைமையகம், கனரக ஆயுதப் பிரிவின் தலைமையகம் போன்றவை அமைந்திருந்தன. ஜெயசிக்குறுய் படைகளுக்கெதிரான விடுதலைப் புலிகளின் முதலாவது பாரிய தாக்குதல் இங்குதான் நடந்தேறியது. விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணிகளால் தாண்டிக்குளம் நொச்சிமோட்டை இராணுவப் பாதுகாப்பு வலையம் முற்றாக தாக்கியழிக்கப்பட்டது. இத் தாக்குதலின்போது இராணுவத்தினது பீரங்கிப் படைப்பிரிவு முற்றாக சிதறடிக்கப்பட்டது. கனரக ஆயுதப் பகுதி விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது.

## போரியலைப் புதிதாகப் புகட்டும் தமிழீழ போர்க்களம் III

இப் பிராந்தியத்தில் விடுதலைப் புலிகளின் அணிகள் ஒரு நாள் முழுதும் நிலைகொண்டிருந்தன. இத்தாக்குதலின்போது பல கனரக படைத் தளவாடங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றிக்கொண்டு செல்லப்பட்டன. ஆயுதக் களஞ்சியம் வெடித்துச் சிதறியது. இவ் இராணுவ படைத்தள தாக்குதலினால் சிறீலங்கா, 200 மில்லியன் ரூபா ஆயுதத் தளவாடங்களை இழந்ததாக அறிவித்தது. ஆனால் இவ் எண்ணிக்கை இரண்டு மடங்குகள் அதிகமானது என்பதுதான் உண்மை.

ஜெயசிக்குறுய் இராணுவம் சந்தித்த அடுத்த தோல்வி பனிக்கநீராவியில் நடந்தேறியது. 53-ம் படைப்பிரிவின் 551-வது படையணியைச் சேர்ந்த இராணுவத்தினர் சிலமணிநேரம் எதிர்ப்புக்களின்றி முன்னேறினர்.

இதேவேளை, 55-ம் படைப்பிரிவு பெரியமடுப் பகுதியில் இருந்து முன்னேற முயன்றது. இவ் இரு படைப் பிரிவுகளும் சிறிது தூர இடைவெளி அகலத்தில் நகர்ந்துகொண்டிருக்க, அவற்றிற்கிடையே புகுந்து நகர்ந்த விடுதலைப் புலிகளின் அணிகள் இரண்டாவது பாரிய தாக்குதலை அவ் அணியின் மீது தொடுத்தனர். இங்கு தாக்குதல் நடந்துகொண்டிருந்த வேளை, பெரியமடுப் பகுதியில் நிலைகொண்டிருந்த படைப்பிரிவின் மீது ஏக காலத்தில் விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத் தாக்குதலில் சிறீலங்கா இராணுவத்தின் அனுபவம்மிக்க விஜயபாகு படையணி சிதறடிக்கப்பட்டது. அங்கிருந்த மோட்டார் ஏவும் தளம் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டது. அங்கிருந்து 120mm பீரங்கி ஒன்றும், 5 மோட்டார் ஏவும் தளங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. அத்துடன் ஏராளமான கனர்க வாகனங்கள் உட்பட இராணுவ உபகரணங்கள் விடுதலைப் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டன.

**சிறீலங்கா இராணுவம் மாங்குளம் நகரைக் கைப்பற்றும் மிகப் பெரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஒலுமடுவிலிருந்து ஆரம்பிக்க முயன்றது. பெரும் தாங்கிப் படையணி ஒன்றின் உதவியுடன் நகர முயன்ற இராணுவம் விடுதலைப் புலிகளின் உடனடியான தாக்குதலுக்கு உள்ளாகியது.**

இதன்பின் பல முனைகளின் ஊடாக மேல்நோக்கியும் நகர முயன்ற ஜெயசிக்குறாய் படையணிகள் தொடர்ந்தும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு உள்ளாகின. புளியங்குளச் சமருக்கு அடுத்ததாக இராணுவத்தின் மிக முக்கிய இலக்காகக் கருதப்பட்டது மாங்குளம் நகர்ப்பகுதியே. ஜெயசிக்குறாய் இராணுவ நடவடிக்கையை கடந்த சுதந்திர தின விழாவின் முன் முடித்து வைக்க சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை காலக்கெடு வைத்திருந்தார். ஆனால் அக் காலப் பகுதியில் சிறீலங்காவின் இராணுவம் மாங்குளத்தை அண்டிய பகுதிகளிற்குக்கூடச் செல்ல முடியவில்லை. இந் நிலையில் ஒரு வருடம் முடிந்து இரண்டாவது வருடத்தில் இரண்டு மாதங்கள் சென்றுவிட்டன. இன்னும் ஜெயசிக்குறாய் படையணிகள் மாங்குளத்தின் சுற்றுப்புறப் பகுதிகளிலேயே நிலைகொண்டுள்ளது.

சிறீலங்கா இராணுவத்திற்கு அண்மைக் காலத்தில் ஏற்பட்ட மிகப் பெரிய இழப்பாக ஒலுமடுச் சமர் கருதப்படுகின்றது. சிறீலங்கா இராணுவம் மாங்குளம் நகரைக் கைப்பற்றும் மிகப் பெரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஒலுமடுவிலிருந்து ஆரம்பிக்க முயன்றது. பெரும் தாங்கிப் படையணி ஒன்றின் உதவியுடன் நகர முயன்ற இராணுவம் விடுதலைப் புலிகளின் உடனடியான தாக்குதலுக்கு உள்ளாகியது. இத் தாக்குதலில் இரண்டு தாங்கிகள் முற்றாக அழிக்கப்பட்டும் சில சேதமாக்கவும் பட்டநிலையில், என்ன செய்வதென்று அறியாமல் தமது படையணிகளை பின்னோக்கி நகர்த்திக் கொண்டன. இத் தாக்குதலின் போது ஓர் அதிகாரியும் அவருடன் இருந்த இராணுவ வீரர்களும் காணாமல் போயினர். சில உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.

ஜெயசிக்குறாய் இராணுவத்தின் கனரக ஆயுதப் பிரிவு தொடர்ந்து செயலிழந்து வருகிறது என்பதைவிட அவர்களது கனரக ஆயுத எதிர்ப்பு அணிகளின் தாக்குதல்கள் சிறீலங்காவின் தாங்கிப்படையணியை முற்றாகச் செயலிழக்கச் செய்திருக்கின்றன என்பதுவும், விடுதலைப் புலிகள் ஜெயசிக்குறாய் இராணுவ நடவடிக்கையின் போது இவ்வகையான பல தாங்கி எதிர்ப்புப் படைப் பிரிவுகளை யுத்த முனைகளில் நிறுத்தி சிறீலங்கா இராணுவத்தின் இராணுவ பலத்தை மட்டுமல்லாது, அவர்களது மனோதைரியத்தையும் உடைத்தெறிந்துள்ளார்கள் என்பதுதான் உண்மை.



(இன்னும் வரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய விஞ்ஞானிகளுக்கு விசா மறுப்பு இந்திய அணுகுண்டின் எதிரொலி!

இந்தியாவின் புகழ்பெற்ற விஞ்ஞானி சிதம்பரத்திற்கு அமெரிக்க தூதரகமும் விசா தர மறுத்து விட்டது. நாட்டின் கௌரவமே இதில் அடங்கியிருப்பதால் மத்திய அரசு கண்டனம் தெரிவிக்க வேண்டுமென மக்களவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோரினர். இந்திய அணுசக்தித் துறை தலைவரான டாக்டர் ஆர். சிதம்பரம் அமெரிக்காவில் நடக்க இருந்த பன்னாட்டு படிகவியல் சங்கத்தின் ஆண்டுக் கூட்டத்தில் கலந்துகொள்ள விரும்பி அங்கு செல்வதற்கான விசாவினை கோரியிருந்தார்.

படிகவியல் துறையில் நிபுணரான இவர் அச் சங்கத்தின் துணைத் தலைவருமாவார். இதேபோன்றுதான் கல்பாக்கம் அணுசக்தி மையத்தின் இரு விஞ்ஞானிகள் அறிவியல் தொழில் நுட்பம் தொடர்பான மாநாட்டில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கும் விசா மறுக்கப்பட்டது. இவை இந்தியாவில் மிகுந்த சர்ச்சையை தோற்றுவித்துள்ளன.

கடந்த மே 11-ம் திகதி இந்தியா அணுகுண்டு வெடித்ததை தொடர்ந்து இந்தியாவின் அயல் உறவு பாதிப்புற்றது. தற்போது இவ்விஞ்ஞானிகளுக்கு விசா வழங்க மறுத்ததின் மூலம் அமெரிக்கா இங்கிலாந்தும் இராஜதந்திர மட்டத்திலான தமது சினத்தை வெளிப்படுத்தியுள்ளன.




# ஓசையின்றி ஓரங்கப்படுகிறார் வை.கோ ஜெயலலிதா நடவடிக்கை!

தேர்தலின் போது அதிமுக கூட்டணியில் அங்கம் வகித்திருந்த ம.தி.மு.க. தற்போது முற்றாக விலகிவிட்டதாக தெரிகிறது. பா.ஜ.க. ஆட்சி அமைத்த இந்த நூறு நாட்களில் கூட்டணியில் இருந்து மதிமுக ஜெயலலிதாவால் புறந்தள்ளப்பட்டு வருகிறது. அதிமுக கூட்டணியினர் அண்மையில் போயஸ் கார்டனில் சந்தித்து பேசியபோது ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ அழைக்கப்படவில்லை. அக்கட்சி சார்பாக யாரும் கலந்து கொள்ளவுமில்லை. புதுவைக்கு மாநில அந்தஸ்து வழங்கப்படும் என்றுமத்திய அரசு



உறுதி கூறியதற்கு அதிமுக கூட்டணி நன்றி தெரிவித்திருந்தது. அந்தப்பட்டியலில் மதிமுக இடம் பெறவில்லை.

தற்போது காவிரி நதி நீர்ப் பிரச்சினை தொடர்பாக ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிடப்பட்ட மனுவை மதிமுக பிரதமரிடம் கையளித்துள்ளது. ம.தி.மு.க. தனித்து செல்கிறதா எனக் கேட்டதற்கு, அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் 'நாங்கள் அதிமுக கூட்டணியில் தொடர்ந்து நீடிக்கிறோம்' என்றார்.

ஆனால் உறவு முறிந்து விட்டது என்றே கட்சி வட்டாரத்தில் பேச்சு அடிபடுகிறது.

# ராஜீவ் கொலை: விடுபட்ட ரகசியங்கள் குறித்து சி.பி.ஐ. விசாரணை தேவை

(புதுடில்லி, ஜூலை 19)

ராஜீவ் கொலை வழக்கு சதியில் மறைக்கப்பட்ட ரகசியங்களை வெளிப்படுத்த சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று ஜெயின் கமிஷனின் முக்கிய சாட்சியான ரமேஸ் தலால் கோரியுள்ளார். இது குறித்து பிரதமர் வாஜ்பேயிக்கு அவர் கடிதம் எழுதியுள்ளார்.

ராஜீவ் கொலைச் சதியில் சந்திரசுவாமிக்கு உள்ள தொடர்பு குறித்து மேலும் விசாரிக்க உத்தரவிடப்பட வேண்டும் என்று ஜெயின் தனது இறுதி அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளதாக பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன. டில்லியில் கொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் ராஜேந்தர் ஜெயினுக்கு அந்த சதி பற்றி தெரியும். ஜெயின் கமிஷனில் ஆஜராகுவதற்கு முன்பாகவே அவர் கொலை செய்யப்பட்டுவிட்டார். ராஜீவ் கொலை சதியில் பல ரகசியங்களைத் தெரிந்தவர் ராஜேந்திரர் ஜெயின், எனவே அவரது கொலைக்கான நோக்கம் குறித்தும் ராஜீவ் கொலை சதிக்கும் ராஜேந்திர் ஜெயின் கொலைக்கும் தொடர்பு உள்ளது குறித்தும் விசாரிக்க வேண்டும் என அக்கடிதத்தில் அவர் கோரியுள்ளார்.

# தமிழ் மொழிக்கு மாற்ற முடிந்ததை மாற்றவேண்டும் — கருணாநிதி

எதையெல்லாம் தமிழ் மொழிக்கு மாற்ற முடியுமோ அதை தமிழ் மொழியில் எழுத வேண்டும் என்று முதல்வர் கருணாநிதி கேட்டுக் கொண்டார். அப்துல் ரகுமானின் மணிவிழா நிகழ்ச்சியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அவர் பேசியதாவது: விளம்பரப் பலகைகளைக்கூட தமிழில் எழுத நம்மவர்கள் தயங்குகிறார்கள். வணிக நிறுவனங்களின் விளம்பரப் பலகையை மாற்றினால், அந் நிறுவனம் இதுவரை பெற்று வந்த விளம்பரம் மறைந்து விடாதா, அத்துடன் தொடர்பு கொண்டவர்கள் மறுபடியும் வருவார்களா? என்று சிலருக்கு சந்தேகம் இருக்கும்.

வடமொழியில் பெயர் இருந்தால் அதை மாற்ற வேண்டியதில்லை. உதாரணமாக, ஜெயலட்சுமி சில்க் ஹவுஸ் என்றிருந்தால் ஜெயலட்சுமி துணிக்கடை அல்லது பட்டு மாளிகை என மாற்றுங்கள் என்றுதான் சொல்கின்றேன். ராஜாஜியின் பெயரை முரசொலியில் ராசாசி என்றே எழுதி வந்தோம். எனக்கு ராஜாஜி கடிதம் எழுதினார். எம்.ஜி.ஆர் பெயரில் 'ஜி' மாற



வில்லை. ராஜேந்திரனில் ஜே மாறவில்லை. 'நான் மட்டும் செய்த பாவம் என்ன?' என்று எழுதியிருந்தார்.

இனிமேல் ராஜாஜி என்றே பிரசுரிக்கப்படும் என்று அவருக்குக் கடிதம் எழுதினேன். வடமொழியில் பெயர் இருந்தால் மாற்ற வேண்டியதில்லை. மாற்ற முடிந்ததை மாற்ற வேண்டும் என்றார் கருணாநிதி.

6ம் பக்கத் தொடர்ச்சி)

## வரலாற்றில் மீண்டும்...

தனிமனித உரிமைகள் பற்றியெல்லாம் எண்ணுக்கடங்காத மாநாடுகள் நடாத்தும் மேற்குலகத்திற்கு இனம் சார்ந்து தமிழர்கள் அடக்கி ஒடுக்கப்படுகின்ற அழிக்கப்படுகின்ற வரலாறு புரியாததல்ல. அடக்கப்படுபவன் கைகளை கட்டியபடியே தொடர்ந்து ஓலமிட்டால் சில வேளை மீட்புக்கு வந்து தான் விரும்பிய தீர்வை பெற்றுக் கொடுக்க சர்வதேசம் தயார்ப்படும். அடக்கப்படுபவன் பிரச்சினை வடிவத்தின் வளர்ச்சிப் போக்கில் போர் புரியும் ஓர் அங்கமாய் மாறுகையில் தனது நலன்களுக்கு பெற்றுக்கொள்ள எதுவுமே இல்லாதவிடத்து நியாயம் தார்மீகம் யாவுமே சர்வதேசத்திற்கு இரண்டாம் பட்சமே. இது இன்றைய யதார்த்தம்.

சிறீலங்கா ஒரு பல இனக் குழுக்களையும் கொண்ட சமூகம். (Multi Ethinic Society) என்றும் இந்த இனக்குழுக்களுக்கு இடையேயான புரிந்துணர்வு ஒன்று ஏற்பட்டு ஒரு சமாதான சுக வாழ்வு ஏற்படுவதே ஐக்கிய சிறீலங்காவிற்கு ஆரோக்கியமானது என்ற வரலாற்றுக் குருட்டுத் தனத்துடன் சில நாடுகள் செயற்படுவதும், இந்த 'புரிந்துணர்விற்கான' செயற்திட்டத்திற்கு பலகோடி ரூபாய் பணத்தினை உதவியாக சிறீலங்கா அரசிற்கு வாரிவாங்குவதும் இப்போதும் நடந்து வருகின்றது. முன்னரைப்போல் இப்போதெல்லாம் இனக் கலவரங்கள் நடப்பதில்லை என்று இந்த நாடுகள் எண்ணுகின்றனவோ என்னவோ. பெரிதான ஆராய்ச்சிகள் எதனையும் செய்யாமல் இரண்டாம் தரப் பிரஜைகளாக தமிழர்கள் நடாத்தப்பட்டும் ஏன் 83 போல் ஓர் பெரும் கலவரம் ஒன்று அண்மைய வரலாற்றில் இடம்பெறவில்லை என்றால் அதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய பல நியாயமான விளக்கங்களை வழங்கமுடியும். அவற்றின் முக்கியமானது, தமிழர்கள் ஒரு நியாயமான போரை தமது பகுதிகளில் நடத்தி வருகின்றனர் என்று ஏற்றுக்கொள்ளத்தக்க கருத்து மெல்ல மெல்ல சமூக உளவியல் ரீதியில் பல மட்டங்களில் சிங்கள மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருவது.

சிறீலங்காவின் இனப்பிரச்சினையின் அடிப்படை இன ரீதியில் தமிழர்கள் அடக்கப்பட்டு வந்தது இந்த அடக்கு முறையில் இருந்து தமிழர்களை மீட்பதாயின், வரலாற்றுப் பார்வையுடன் பெறப்படும் முடிவான தமிழர்களின் சுய நிர்ணய உரிமையினை அங்கீகரிப்பதே சர்வதேசம் மேற்கொள்ள வேண்டிய முதற் செயற்பாடாகும்.

ஈனக்குரலைக் கொடுத்து வந்த தமிழினம் கடந்த காலங்களில் ஒரு தார்மீகப்போரை பெரும் வெற்றிகளைக் குவித்துக்கொண்டே ஒரு பலமான நிலையில் இருந்து நடாத்தி வருவது சர்வதேசத்தின் கண்களுக்குத் தெரிகின்ற விடயம். ஜெயசிக்குறுய் போர்முனையில் ஒருவருடத்திற்கு மேலாக போரிட்டு வருகின்ற சிறீலங்கா இராணுவம் சேற்றில் சிக்கி முக்கி முனகுகின்ற யானையின் நிலையினை ஒத்தாகப் படும் அவஸ்தைகளும் கடந்த காலங்களில் விடுதலைப் புலிகள் பெற்ற ஒப்புயர்வற்ற போரியல் வெற்றிகளும் வெறும் செய்திகள் அல்ல. சர்வதேச அரசியல் வட்டாரங்களுக்கு இவை ஒரு சமிக்கையினைக் கொடுக்கின்றது. தமிழினம் பலமான நிலையில் இருந்தே உரிமைகளைப் பெற முனைகின்றது. அவலக் குரல் எழுப்பி கவனம் தேடி உரிமை கேட்கும் அணுகுமுறையல்ல இது. தமிழினத்தினம் தனது உரிமைகளை உரிமைப் போர் நடாத்திய தமிழினம் பெற முனைகின்றது. தமிழர் பலம் இன்னும் பன்மடங்கு பெருகும்போது சர்வதேச அங்கீகாரம், ஆதரவும் வந்துசேரும். அதற்கான அறிகுறிகள் நிகழ் காலத்திலேயே தென்படுகின்றன.

புலம் பெயர் தமிழராகிய எமது பங்கு வரலாற்று ரீதியான அடக்குமுறை வடிவங்களை எடுத்துக்கூறி நியாயமான ஆதரவினை சர்வதேச மட்டங்களில் திரட்டுவதே. தமிழர்கள் வேண்டி நிற்பது சர்வதேசத்தின் கருணையையல்ல. மாறாக தார்மீக ஆதரவையே. பெருகப்பட்ட எமது பலத்துடன் சர்வதேச ஆதரவும் இணையும்போதே வரலாற்றில் மீண்டும் ஒரு ஜூலை 83 இடம் பெறுவதை எம்மால் தவிர்க்க முடியும்.

-நிலவன்

# பா.ஜ. அரசு உயிர் தப்பியது! அரசின் நிதிநிலை அறிக்கை வாக்கெடுப்பில் வென்றது!

பாரதிய ஜனதா கூட்டணி அரசின் முதல் நிதிநிலை அறிக்கை மக்களவையில் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேறியது. இந்த வாக்கெடுப்பில் அரசு வெற்றிபெற வாக்குப் பலம் இருக்குமா? என்ற சந்தேகம் அரசியல் மட்டங்களில் நிலவின.

அரசின் கூட்டணிக்குள் ஏற்பட்ட நெருக்கடிகள் இச் சந்தேகத்தை தோற்றுவித்திருந்தன. வாக்கெடுப்பில் நிதிநிலை அறிக்கை வெற்றிபெறாமல் போயிருந்தால் அரசு கவிழ்ந்திருக்கும் ஆனால் நெருக்கடிகள் சமாளிக்கப்பட்டு அரசு காப்பாற்றப் பட்டு விட்டது.

நிதிநிலை அறிக்கை விவாதத்தின் போது அரசின் பொருளாதாரக் கொள்கை குறித்து மக்களவையில் கடும் விமர்சனம் தெரிவிக்கப்பட்டது. ஆரோக்கியமற்ற வழிகளில் நிதியாதாரத்தை திரட்டும் நடவடிக்கைகளினால் சாமான்யர்கள் மீது வரிப்பளு சுமத்தப்படுவதாக எதிர்க்கட்சிகள் புகார் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் கணினி துறைக்கு வரிச்சலுகை தகவல் தொழில் நுட்பத்துறையில் மகத்தான வளர்ச்சி!

எல்லாவகை கணினி (கம்பியூட்டர்) மென்பொருள்களுக்கும், கம்பியூட்டர் கலர் மொனிட்டர் போன்றவற்றிற்கும் இறக்குமதித் தீர்வை நிதிநிலை அறிக்கையில் குறைக்கப்பட்டது. தற்போது மேலும் பல வரிச்சலுகைகளை மக்களவையில் மத்திய நிதியமைச்சர் அறிவித்திருக்கிறார். தகவல் தொழில் நுட்பத்துறையில் மகத்தான வளர்ச்சியை நோக்கி நாடு நடைபோட்டுக் கொண்டிருக்கும் இச்சமயத்தில், தொலைநோக்குடன் சரியான முடிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதாய் நிதி அமைச்சரின் அவ்வறிவிப்புக்கு இந்திய பத்திரிகைகள் பாராட்டு தெரிவித்துள்ளன.

இந்தப் புதிய சலுகைகள் மத்திய திட்டக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. கணினித்துறை சுற்றுப்புறச் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாதது. ஏராளமான வேலை வாயப்புகளை உருவாக்கக் கூடியது. அன்னியச் செலாவணியை கணிசமாக ஈட்டித் தருவதோடு, உள்நாட்டின் அனைத்துத் துறைகளின் வளர்ச்சிக்கு ஊக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. தகவல் தொழில் நுட்பத் துறை வளர்ச்சி பெறாமல் நாட்டின் முன்னேற்றத்தை நினைத்துக்கூட பார்க்க முடியாது என அக்குழு பரிந்துரை செய்துள்ளது. இதுவரை மென்பொருள் ஏற்றுமதியாளர்களுக்கு முதன் முதலாக விரிவுபடுத்தப் பட்டிருக்கிறது. இதனால் மென்பொருளை உருவாக்க உதவும் நிறுவனங்களின் எண்ணிக்கை பலமடங்கு அதிகரிக்க வாய்ப்புள்ளது. தகவல் தொழில் நுட்பச் சாதனங்கள் மீது விதிக்கப்படும் தீர்வைகள் 2003-ம் ஆண்டுக்குள் முழுமையாக விலக்கிக் கொள்ளப்படும் என்ற அறிவிப்பு, இத்துறையில் அந்நிய முதலீட்டை ஊக்குவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஊதியம் குறைவு, சிறந்த தொழில் நுட்பத்திறன் ஆகிய காரணங்களினால் இந்திய மென்பொருள் ஏற்றுமதி நிறுவனங்களுக்கு கொள்வனவுக் கட்டளைகள் கிடைக்கின்றன.

சென்னை பெங்களூர் ஹைதராபாத் ஆகிய நகர்களில் கணினி மென்பொருள் நிறுவனங்கள் அதிகரித்து வருகின்றன.

## 'பொருளாதாரத் தடையால் இந்தியாவுக்கு பாதிப்பில்லை'

### பொருளாதார வல்லுனர்கள் கருத்து தெரிவிப்பு!

சென்னையில் 'பொருளாதாரத்தடை - இந்திய பொதுத் துறை நிறுவனங்களுக்குள்ள சவால்கள்- வாய்ப்புகள்' என்ற கருத்தரங்கு நடைபெற்றது. இதில் இந்தியாவின் பொருளியல் அறிஞர்களும், பொருளியல் பத்திரிகைகளின் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். இக் கருத்தரங்கில் 'வலியுறுத்தப்பட்ட கருத்துக்களாவன:

தொலைநோக்கில் இப்பொருளாதாரத்தடை பெரும் பாதிப்பை ஏற்படுத்தாது. அதே நேரத்தில் நாட்டின் வளங்களை நாம் பயன்படுத்திக்கொள்ள வளர்த்துக்கொள்ள ஒரு வாய்ப்பாகவே அமையும். பொதுத்துறை நிறுவனங்கள் தங்களிடம் தற்போதுள்ள குறைபாடுகளை நீக்கி நாட்டின் வளர்ச்சிக்கேற்ப மாறவேண்டும் என்றார் 'எக்னாமிக் டைம்ஸ்' ஆசிரியர்களில் ஒருவரான ராகவன்.

1914 முதல் இதுவரை 119 பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை பெரும்பாலும் தோல்வியே அடைந்துள்ளன. நம்நாட்டின் மீது பொருளாதாரத் தடை உள்ளதோ இல்லையோ, நம்மிடம் உள்ள திறமைகளைக்கொண்டு நாம் முன்னேற முடியும் என்றார்.

பைனான்சியஸ் எக்ஸ்பிரஸ் ரெசிடென்ட் 'ஆசிரியர்களில் ஒருவரான ரவி சீனிவாசன்.

## உயிர்பெறும் நாதுராம் கோட்சே மகாத்மாகாந்தியை கேலிசெய்யும் நாடகம்!

இந்தியாவின் தேசத்தந்தை என மதிக்கப்படுபவர் மகாத்மா காந்தி. இந்திய சுதந்திரத்திற்காக மக்களை ஒன்றுதிரட்டி சாத்வீக போராட்டத்தை மேற்கொண்டார்.

அவரது போராட்ட வழிமுறையும், அவரது வாழ்க்கை முறையும் உலகின் மிகச்சிறந்த மனிதர்களில் ஒருவராக அவரை உயர்த்தி இருந்தது. ஆனாலும் அவர் இந்தியக் குடிமகன் ஒருவராலேயே சுட்டுக்கொல்லப் பட்டார்.

காந்தியை சுட்டவனான நாதுராம் கோட்சே 'இந்துமத வெறியன்', 'துரோகி' என்றெல்லாம் இதுவரையில் அழைக்கப்பட்டு வந்தான். ஆனால் இந்தியாவில் வலுப்பெற்று வரும் இந்து மத அடிப்படைவாதிகள் கோட்சேவை தேசபக்தனாக நியாயப்படுத்தி வந்தார்கள்.

தற்போது இந்தியாவில் ஆட்சியிலிருக்கும் பா.ஜ.க. அரசு, மத அடிப்படைவாதத்தை பேசியே ஆட்சிக்கு வந்தது.



இந்நிலையில் தற்போது மகாத்மாகாந்தியை அவதூறு செய்யும் நாடகம் இந்தியாவின் மராட்டிய மாநிலத்தில் அம்மொழியில் மேடையேற்றப்பட்டு வருகின்றது. 'நான் கோட்சே பேசுகிறேன்' என்னும் தலைப்பிலான அந்நாடகத்தில் மகாத்மா காந்தியை கொலை செய்த நாதுராம் கோட்சே தனது தரப்பு நியாயத்தை கூறுவதாகவும், காந்தியை கொன்றதை நியாயப்படுத்துவதாகவும் உள்ளதாம்.

அந்நாடகத்தில் மகாத்மா காந்தியின் பாத்திரம் சித்தரிக்கப்பட்டிருக்கும் விதம் அவரை அவமதிப்பது போல் இருக்கிறதாம். ஆதலால் இந்நாடகத்தை உடனடியாக தடைசெய்ய வேண்டுமென காங்கிரஸ் கட்சி கோரியுள்ளது.

இக்கோரிக்கையை வலியுறுத்தி நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் கிளர்ச்சி செய்ய காங்கிரஸ் கட்சி முடிவு செய்துள்ளது.


திருமணவிழாக்களா, பூப்புனித நீராட்டு விழாக்களா, பிறந்த நாள் வைபவங்களா, மேடை நிகழ்ச்சிகளா இசை மழையில் நனைந்து மகிழ

ஐரோப்பா புகழ்

பாரிஸ்

ஈழநிலா

தொடர்புகட்கு: இயக்குநர் S.S. தில்லைச்சிவம்

Tel: 0140375669


## ☺ வாய் மொழிகளும் கொசுறுச் செய்திகளும் ☹

☺ இனிய தமிழில் திருக்குறள் ஓதி திருமணம் நடத்தப்படுவதை நீங்கள் எங்காவது பார்த்து இருக்கிறீர்களா? தமிழ்நாட்டில் சமீப காலமாகத்தான் இந்த வகைத் திருமணங்கள் நடக்கத்தொடங்கியுள்ளன. சுருக்கமாக இதை 'திருக்குறள் திருமணம்' என்கிறார்கள்....

மலேசியாவில் 'திருக்குறள் திருமணங்கள்' அதிகமாக நடைபெறுகின்றன. இதற்காகவே திருக்குறளை எப்படி ஓதி திருமணம் நடத்த வேண்டும் என்பதற்காக 'தமிழிய நெறித் திருமணம் செயல்பாட்டு முறைகள்' என்னும் நூலை அச்சிட்டு வெளியிட்டுள்ளனர். இதன் மூலமாகத்தான் 'திருக்குறள் திருமணம்' மலேசியாவிலிருந்து தமிழ்நாட்டுக்கு காலடி எடுத்து வைத்தது. தமிழ்நாட்டில் திருக்குறள் திருமணம் முதலில் 1990 ம் ஆண்டு கடலூரில் நடந்தது.

*– திருக்குறள் திருமணம் - 19.07.98 ராணி இதழில்.*

❀ ❀ ❀

☺ ராமச்சந்திர சவுகானும், 'அது அம்மாவின் உத்தரவு - அதை நிறைவேற்றி வைப்பதே குடும்பத்தின் எதிர்கால வாழ்வுக்கு சரியானதாக இருக்கும்' என்று கூறி தன்னை வெட்டி அம்பாளுக்கு பலியிட சம்மதம் தெரிவித்தார்.

அவரது மனைவி கேவளா தேவி, அவரது மூன்று மகன்கள் ஆகியோரது சம்மதத்துடன் அம்மனுக்கு பூஜை நடத்தப்பட்டது. எல்லோரும் தங்களது ஆசைகளை அவிழ்த்து எறிந்து விட்டு நிர்வாண கோலம் பூண்டனர். ராமச்சந்திர சவுகானை மனைவியும் மூன்று மகன்களும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள். மூத்தமகன் அவரது தலையை வெட்டி அம்பாளின் அருள் பெற்ற மருமகள் மீனாவிடம் கொடுத்தார். அதைக் கையில் வாங்கிய மீனாவின் உடலில் அம்பாள் ஆவாகனம் ஆக - அவளுக்கு ஆவேசம் ஏற்பட - சாமியாடியபடியே மாமனாரின் இரத்தத்தை உறிஞ்சிக் குடித்தாள் அவள். மற்றவர்களோ கொடுமையின் சிகரமாகவே மாறி, பலியானவரின் உடலில் இருந்து சதையைப் பிய்த்து பிய்த்துச் சாப்பிட்டார்கள்.

இத்தனைக்கும் யார் காரணம்? அல்லது எது காரண்ம்? அந்த ஊரைச் சேர்ந்த சாமியார் மதன் குப்தாதான் காரணம். மீனா சாமியாரின் மரம பக்தை! சாமியார்தான் மீனாவுக்கு இந்த நரபலி ஆலோசனையை அருள்வாக்காக வழங்கியிருக்கிறார். இந்த சம்பவம் நடந்த பிறகு சாமியார் தலைமறைவாகி விட்டார்.

இந்தியாவை உலுக்கும் மந்திரவாதிகள் - சின்னக் குத்தூசி

*– 10.07.98 நக்கீரன் இதழில்.*

❀ ❀ ❀

கி.மு 450 இலேயே கிரேக்க நாட்டின் ஏதென்ஸ் நகரத்தில் ஜனநாயக முறை ஆட்சியைப் பற்றி விவாதம் எழுந்தபோது, ஜனநாயகம் செயல்பட வேண்டுமானால் அதில் பங்கு கொள்ளும் அளவுக்கு மக்களுக்கு படிப்பறிவு அவசியம் என்று கருதப்பட்டது. அரசியல் கருத்துகளில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் பேச்சாற்றல் வளர வேண்டுமென்று கருதப்பட்டது. புதிய அடுக்குமொழி கலாச்சாரத்தாலேயே ஒரு மாபெரும் புரட்சியை ஏற்படுத்திய திராவிட இயக்கத்தின் வழி வந்த இன்றைய கட்சிகள், தங்கள் பிரச்சாரத்தில் தனிநபர் தூற்றலில் இறங்கிவிட்டதால் மக்களின் அறிவைக் கூர்மைப்படுத்த எந்த விசயமுமில்லை. அறிவை வளர்த்துக் கொள்ள பாமரனுக்கு ஆர்வமுமில்லை. படித்தவனுக்கு தேர்தலில் பங்கு கொள்ளவே அக்கறையில்லை. வாக்காளரிடையே விழிப்புணர்வு ஏற்படும் வரை, தனக்கு கிடைத்தவாக்கெல்லாம் தனது தவறுகளுக்கும் சொந்த விருப்பங்களுக்கும் மக்கள் கொடுத்த அங்கீகாரம் என்றுதான் ஜெயலலிதா சொல்வார்.

*– ஜனநாயகமும் விழிப்புணர்வும் - வாஸந்தி, 15.07.98 இந்தியா டுடே.*

❀ ❀ ❀

☺ தமிழக அரசியலில் 'தனிநபர் விரோதம்' என்பது கடந்த கால் நூற்றாண்டுக்கும் மேலாக வேரூன்றிவிட்டது. தங்களுக்குள் தனிமனித உறவுகளை பலப்படுத்திக் கொள்ள விரும்பாத இந்தத் தலைவர்கள், ஜாதி மோதல்களை எப்படி கட்டுப்படுத்துவார்கள்?

இதற்கு முதல்வர் கலந்து கொண்ட, குமாரசாமி ராஜா நூற்றாண்டு விழாவே ஒரு உதாரணம். குமாரசாமி ராஜா நினைவு தபால் தலை வெளியிட வேண்டும் என்று முன்முயற்சி எடுத்தவர் ம.தி.மு.க வின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வைகோ. ராஜபாளையத்தில் நடைபெற்ற இந்த விழாவில் தொகுதி எம்.பி என்கிற முறையில் அவருக்கும் அழைப்பு உண்டு. தபால்தலை வெளியிடுகிற பணியும் அவரிடம் கொடுக்கப்பட்டது. ஆனால் தி.மு.க வில் இருந்து பிரிந்து வந்த வைகோ. ராஜபாளையத்தில் நடைபெற்ற இந்த விழாவில் கலந்துகொள்ளவில்லை. பொது நிகழ்ச்சி என்பது வேறு கட்சி விரோதம் என்பது வேறு பிரித்துப் பார்க்க முடியாததுதான். அவருடைய மறுமலர்ச்சி சிந்தனை.......

'வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது' இது தி.மு.க வின் ஆரம்பகால கோஷம். ஆனால் அரசியல் நாகரிகத்தில் இன்றும் வடக்குத்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. அங்கே வாஜ்பாயின் கவிதைகளை நரசிம்மராவும், ராவ் எழுதிய புத்தகத்தை வாஜ்பாயும் வெளியிடுகிறார்கள்.

*– நவீன தீண்டாமை! 15.07.98 தமிழன் எக்ஸ்பிரஸ் இதழ் தலையங்கம்.*

❀ ❀ ❀

☺ 'சினிமா நடிகர், நடிகைகளெல்லாம் கோடிக்கணக்கில் வரிப்பாக்கி வைச்சிருக்காங்க. அதையெல்லாம் கண்டுகொள்ளாத அரசு, விவசாயிகளின் சின்னச் சின்னக் கடன்களுக்காக 'ஜப்தி' நடவடிக்கையில் இறங்குகிறது. கடனுக்கு ஈடாக பெண்கள் கைகளில் போட்டிருக்கும் வளையல்களை எடுத்துக்கொண்டு போகிறார்கள். அரசின் இந்த நடவடிக்கையை எதிர்த்து கோட்டையை நோக்கி கோவண ஊர்வலம் நடத்தப் போகிறோம்'.

*– இந்திய உழவர் உழைப்பாளிகள் கட்சித் தலைவர் வேட்டலம் மணிகண்டன், 15.07.98.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஈராக்

# அரபு இஸ்ரேல் பிரச்சினையை தீர்க்க அரபு மகாநாட்டுக்கு சதாம் கோரிக்கை

மத்திய கிழக்கின் பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டுவர உடனடியாக அரபு மகாநாடு ஒன்று கூட்டப்பட வேண்டும் என ஈராக்கிய அதிபர் சதாம் குசேன் வேண்டுகோள் விடுத்தார்.

1968-ம் ஆண்டு யூலை 17-ம் திகதி தற்போதைய ஹுசேன் தலைமையிலான பாத் கட்சியின் புரட்சியின் மூலம் ஈராக்கின் ஆட்சியைக் கைப்பற்றியது. இதன் 30-வது வெற்றிநாள் கடந்த வெள்ளிக்கிழமை ஈராக்கில் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு ஈராக்கிய ஜனாதிபதி உரையாற்றினார். அதன் போது தற்போதைய இஸ்ரேலிய, அரபுப் பிரச்சினையை விவாதிக்க உடனடியாக அரபுநாடுகளைக் கொண்ட உச்சிமகாநாடு ஒன்று கூட்டப்பட வேண்டும். இம் மகாநாட்டிற்கு ஈராக் அழைக்கப்படாமல் விட்டாலும் பரவாயில்லை என்றார்.

அவர் மேலும் பேசுகையில், 1991-ம் ஆண்டு வ்ளைகுடா யுத்தத்தின் பின் கெயிரோவில் 1996-ம் ஆண்டு ஈராக் தவிர்ந்த அரபு நாடுகளின் உச்சிமாநாடு கூட்டப்பட்டது.

அதன்பின் என்ன நடந்தது. இஸ்ரேலின் நிலைப்பாட்டில் மாற்றங்களை கொண்டுவர முடிந்ததா? அல்லது சியோனிசவாதிகளின் அரவணைப்பாளனான அமெரிக்காவின் நிலைப்பாட்டில் மாற்றங்களை கொண்டுவர முடிந்ததா? எனக் கேள்வி எழுப்பினார்.



அரபு உச்சி மகாநாடு ஒன்றைக் கூட்டும்படி வேறுபல அரபுத் தலைவர்களும் கோரிக்கை விடுத்திருந்தனர். அதேவேளை பல அரபு நாடுகள், ஈராக்கின் 'குவைத் ஆக்கிரமிப்பின் பின்' இஸ்ரேலுடன் தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டன.

இவ் அரபுத் தலைவர்களின் அமைதிக் கோரிக்கையை ஈராக் தொடர்ந்து எதிர்த்து வந்துள்ளது. அரபு இஸ்ரேலிய போர்களின் போது ஈராக்கியப் படைகள் பங்குபற்றியிருந்ததும், 1982-ம் ஆண்டு இஸ்ரேலிய போர் விமானங்கள் ஈராக்கிய அணுஉலையைத் தகர்த்ததும் குறிப்பிடத்தக்கது.

## புதிய செயற்கைக்கோள் தொலைக்காட்சி சேவை

ஈராக் கடந்த வெள்ளிக்கிழமை புதிதாக செயற்கைக்கோள் மூலமான தொலைகாட்சி சேவை ஒன்றினை ஆரம்பித்துள்ளது. ஈராக்கின் கலாச்சார, செய்தித்துறை அமைச்சர் ஹுமாம் அப்துல் காளிக் கடந்த வெள்ளியன்று ஈராக்கில் நடைபெற்ற புரட்சியின் 30-ம் ஆண்டு விழாவின்போது இத் தொலைக்காட்சி சேவையினை ஆரம்பித்து வைத்தார்.

ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசேன் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை இப் புதிய தொலைக்காட்சி சேவையின் முதலாவது நிகழ்வாக அமைந்திருந்தது.

ஈராக்கின் மீது விதிக்கப்பட்டுள்ள ஐ.நா வின் பொருளாதாரத் தடையானது, அங்குள்ள சிறுவர்களையும் வயதானவர்களையும் பெரிதும் பாதித்துள்ளது. பொருளாதார ரீதியாக ஸ்திரமான நிலையிலிருந்த ஈராக் தற்போது பல நெருக்கடிகளை சந்தித்து வருகிறது.

சுமார் எட்டு வருடங்களாக நீடிக்கும் இத் தடையின் நேரடி, மறைமுக விளைவுக்ளை உலகிற்கு எடுத்துக்கூற இப் புதிய செயற்கைக்கோள் தொலைக்காட்சி சேவை பெரும்பங்கை வகிக்கும் என ஈராக்கின் செய்தித்துறை அமைச்சர், ஆரம்ப நிகழ்ச்சியின்போது குறிப்பிட்டார்.

## தென்னாபிரிக்கா

# தென்னாபிரிக்க தலைவர் 80 வயதில் மீண்டும் திருமணம்

தென்னாபிரிக்க தலைவர் நெல்சன் மண்டேலா தனது 80 வது வயதில் மீண்டும் திருமணம் செய்துகொண்டார். திரு மண்டேலா கடந்த சனியன்று தனது 80 வது பிறந்தநாளை கொண்டாடினார். அதேதினம் தனது நீண்டநாள் சினேகிதியும் முன்னாள் மொஸாம்பிக் தலைவர் சமோரா மார்சலின் விதவை மனைவியுமான கிராசா மார்சலை திருமணம் செய்து கொண்டார்.

ஜோகனெஸ் பேர்க் புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ள ஜனாதிபதியின் பிரத்தியேக இல்லத்தில் இத் திருமணம் எளிமையாக தனிப்பட்ட ஒரு நிகழ்வாக இடம்பெற்றது. இத் திருமணம் பற்றிய செய்தியை தென்னாபிரிக்காவின் உதவி ஜனாதிபதி தபோ ம்பேகி அறிவித்தார்.



பிரிட்டோரியாவில் பத்திரிகையாளர்களை சந்தித்தபோது ஜோகனெஸ் பேர்க் பிரதம நீதியரசர் முன்னிலையில் இத் திருமணம் நடைபெற்றது என்று கூறினார்.



1990-ம் ஆண்டு மண்டேலா சிறையிலிருந்து வெளியேறியிருந்த சமயம் மார்சல் இவரை முதலில் சந்தித்தார், அதன்பின் இவர்களின் நட்பு தொடர்ந்தது. மொஸாம்பிக்கின் செல்வாக்கு மிக்க வழக்கறிஞரும், சிறுவர்களுக்கான உரிமை அமைப்பின் செயற்பாட்டாளருமான கிராசா மார்சலுக்கும் மண்டேலாவுக்கும் இடையேயான உறவு கடந்த வருடம் வெளியுலகிற்கு தெரியவந்தது.

ஆரம்பத்தில் இவர்கள் திருமணம் செய்துகொள்ள மாட்டார்கள் என்றே கூறிவந்திருந்தனர்.

## இஸ்ரேல்

# மேற்குக்கரை படைவிலகலை ஆதரிக்குமாறு வலதுசாரிகளுக்கு வேண்டுகோள்

நீண்டநாட்களாக இழுபறி நிலையில் தேக்கமடைந்து போயுள்ள இஸ்ரேல் பலஸ்தீன அமைதிப் பேச்சுக்களை மீண்டும் தாம் ஆரம்பிக்க இருப்பதாகவும், இதில் இடையூறாக இருக்கும் மேற்குக்கரை படை விலகலுக்கு, இஸ்ரேலின் தீவிர வலதுசாரிகளின் ஆதரவையும் இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்யமின் நெத்தன்யாகு கோரியுள்ளார்.

கடந்த வியாழன் அன்று இஸ்ரேலின் அரசில் அங்கம் வகிக்கும் தீவிர வலதுசாரி தேசிய சமயவாதக் கட்சியின் பிரமுகர்களிடையே பேசும் போதே இக் கோரிக்கையை அவர் முன் வைத்தார்.

கடந்த 16 மாதங்களாக பலஸ்தீனர்களுக்கும், இஸ்ரேலியர்களுக்கும் இடையேயான பேச்சுக்கள் நடைபெறவில்லை. இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தைக்குள் மீண்டும் இழுக்க அமெரிக்கா கடுமையாக முயன்று வருகின்றது.

மேற்குக்கரையில் மேலும் 13 வீத நிலப்பரப்பிலிருந்து இஸ்ரேலியப் படைகள் விலகிக் கொள்ள வேண்டும் என அமெரிக்கா கோரியிருந்தது. இக் கோரிக்கையை இதுவரை காலமும் இஸ்ரேல் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் எப்படியாயினும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் இஸ்ரேல் தள்ளப்பட்டுள்ளது.

இதே வேளை அமெரிக்காவின் கோரிக்கைகளுக்கு இஸ்ரேல் அடிபணிந்தால் தாம் அரச கூட்டணியிலிருந்து விலகிக் கொள்வதாயும், அரசை கவிழ்த்துவிடுவதாயும் தீவிரவாத வலதுசாரிகள் எச்சரித்திருந்தனர்.

இந்நிலையிலேயே நெத்தன்யாகு வலதுசாரிக் கட்சியினரிடையே இக் கோரிக்கையை விடுத்தார். அவர் அங்கு பேசும் போது இஸ்ரேலின் நிலக் கைமாற்றல் என்பது பாலஸ்தீனர்களின் அமைதி உடன்படிக்கையின் ஓர் அங்கம். நாம் மேலும் படைவிலகலை மேற்கொள்ளும் போது பலஸ்தீனியர்கள், இஸ்ரேலிற்கான பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். அதை அவர்கள் செய்வார்கள் என நாம் நம்புகிறோம் என்றார்.



இஸ்ரேலில் பாதுகாப்பு அமைச்சர் இன்னும் சில தினங்களில் பலஸ்தீன அதிபர் அரபாத்தையோ அல்லது அவரது உதவியாளரையோ சந்திப்பார் என நெத்தன்யாகு மேலும் தெரிவித்தார்.

## எரித்திரியா

# ஜனாதிபதி கென்யா பயணம்

எரித்திரியா ஜனாதிபதி இஸாயாஸ் அபேவேர்கி தனது நாட்டின் எல்லையில் ஏற்பட்டுள்ள யுத்தம் சம்பந்தமான பேச்சுக்களை நடத்த கென்யாவுக்கு பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

கென்யாவின் ஜனாதிபதி டானியல் அராப் மோய் உடன் கடந்த சனிக்கிழமை எரித்திரியத் தலைவர் பேச்சுக்களை மேற்கொண்டார்.

கடந்த 13.07.98 அன்று எதியோப்பிய பிரதமர் மெலேஸ் செனாவி நைரோபியில் ஜனாதிபதி மோய் உடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

கென்யா அதிபர் டானியல் அரப் மோய், எதியோப்பிய எரித்திரிய ஜனாதிபதிகள் இருவரையும் ஒரே சமயத்தில் நைரோபிக்கு விஜயம் செய்யுமாறு கோரிக்கை விடுத்திருந்தார். இதன் மூலம் இரு தலைவர்களையும் நேரடியாக சந்திக்கவைத்து எல்லைப் பிரச்சினையை தீர்த்துவைக்க அவர் விரும்பினார். ஆனால், எரித்திரிய தலைவர் அன்றையதினம் வருகைதரவில்லை. அதற்கான காரணமும் கூறப்படவில்லை.

ஆனால், கடந்த சனியன்று காலையே மலேசியப் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பியிருந்தார். உடனடியாக அன்றைய தினமே கென்யாவிற்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

கடந்த மே 6-ம் திகதி இரு நாடுகளும் ஆரம்பித்த யுத்தத்தினால் இன்றுவரை நூற்றுக்கும் அதிகமானோர் இரு பகுதியிலும் கொல்லப்பட்டுள்ளனர். அமெரிக்கா, ருவண்டா, ஆபிரிக்க ஒருமைப்பாட்டிற்கான அமைப்பு, மற்றும் பல ஆபிரிக்கத் தலைவர்கள் இவ் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

ரவி வாகனசேவை



உங்கள் அனைத்து
வாகனத் தேவைகளுக்கும்
நீங்கள்
தொடர்புகொள்ள
வேண்டியது
தொலைபேசி:
0148765190 அல்லது
0607622689

Pub

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரான்ஸ்

# சிரிய ஜனாதிபதி பாரிஸ் விஜயம்

'மத்திய கிழக்கில் சிரியாவின் ஒத்துழைப்போ அல்லது பங்களிப்போ இல்லாமல் சமாதானம் என்பது ஏற்பட முடியாது. நிச்சயமாக எந்தவோர் அமைதிப் பேச்சுக்களிலும் சிரியா கலந்து கொள்ளவேண்டும். நாமும் சிரியாவுடன் இணைந்து சமாதான முன்னெடுப்பிற்கான நடவடிக்கைகளில் பங்குகொள்ள ஆர்வம் கொண்டுள்ளோம்' என பிரெஞ்சு ஜனாதிபதி திரு ஜக் சிராக் அவர்கள் சிரிய ஜனாதிபதி ஹாபீஸ் அல் அசாத்துடனான இரண்டாம் கட்ட பேச்சுக்களை முடித்தபின் கடந்த வெள்ளியன்று தெரிவித்தார்.

சிரிய ஜனாதிபதி ஹாபீஸ் அல் அசாத் வெளிநாட்டு விஜயங்களை அனேகமாக மேற்கொள்வதில்லை. அவரது மேற்கு நாட்டு விஜயங்கள் மிகக் குறைவாகவே இடம்பெறுவதுண்டு. இவ்வகையில் சுமார் 22 வருட இடைவெளியின் பின் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு அவர் பாரிஸ் வந்துள்ளார்.

இங்கு பிரெஞ்சு ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட உயர் மட்ட அரச தூதுக் குழுவினருடன் பேச்சுக்களை நடாத்தினார். சிரியாவிற்கும் பிரான்சிற்கும் இடையே நீண்ட நாள் பிணக்காக பிரண்ணர் விவகாரம் இருந்துவந்துள்ளது. 1942 முதல் 1945 வரையான காலத்தில் சுமார் 100,000 பிரெஞ்சு யூதர்கள் ரான்சியிலிருந்து ஜேர்மனியின் கொலை முகாம்களுக்கு அனுப்பப்பட்டு கொல்லப்படுவதற்கு 'பிரண்ணர்' முக்கிய பொறுப்பாளியாக இருந்துள்ளார்.

இவர் நீண்டநாள் தலைமறைவின் பின் போலி கடவுச்சீட்டொன்றினைப் பயன்படுத்தி ஜோச் பிச்செர் என்னும் பெயருடன் சிரியாவிற்குள் நுழைந்து தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து வந்துள்ளார். பல முறை பிரெஞ்சு புலனாய்வுத் துறையினர் இவரைத் தேடும் நடவடிக்கையில ஈடுபட்டும் இன்று வரை கைது செய்யப்படவில்லை.

தற்போது பிரான்சில் தங்கியிருக்கும் ஹாபீஸ் அல் அசாத்திடம் இவ் விவகாரம் பிரஸ்தாபிக்கப்பட்டது. இதற்கு இவ் விவகாரத்தை தாம் தீவிரமாக ஆராய இருப்பதாக அவர் உறுதியளித்தார். பின்னர் பத்திரிகையாளரிடம் பேசியபோது மத்திய கிழக்கு அமைதி முன்னெடுப்புக்களில் பிரான்சும் அதனது ஐரோப்பிய பங்காளர்களும் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் 1991-ம் ஆண்டு மற்றிட்டில் ஏற்படுத்தப்பட்ட முன்னெடுப்புக்களை மீண்டும் வலியுறுத்துமாறும் கூறினார். இதற்கு பிரெஞ்சு அதிபர் பதிலளிக்கையில் தாம் மீண்டும் ஓர் புதிய மாநாடு ஒன்றை கூட்ட ஆர்வம் கொண்டுள்ளதாயும் மத்திய கிழக்கின் அமைதி முயற்சிகளில் மற்றைய நாடுகளுடன் இணைந்து தமது நாடும் பங்கேற்க விரும்புகிறது எனக் கூறினார்.

தற்போது மத்திய கிழக்கின் நலன்களில் அமெரிக்காவே கூடிய அக்கறையுடன் செயற்படுகிறது. தற்போதைய புதிய பிரெஞ்சு நடவடிக்கைகளானது இப்பிராந்தியத்தில் அமெரிக்காவின் மேலாதிக்கத்தை விடுத்து ஐரோப்பிய சமநிலை ஒன்றை ஏற்படுத்த முயலும் ஓர் நகர்வு என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## கிழக்குத் தீமோர்

# கிழக்குத் தீமோரில் ஐ.நா. விசேட தூதுவர்

இந்தோனேசியாவினால் ஆக்கிரமிக்கப்பட்டு இன்று விடுதலையை தேடி நிற்கும் கிழக்குத் தீமோரில் தொடர்ந்து ஏற்பட்டு வரும் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவந்து ஓர் நிரந்திரத் தீர்வினை ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் சபை நீண்ட நாட்களாகவே முயற்சித்து வருகின்றது. இந்தோனேசியாவில் அண்மையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களைத் தொடர்ந்து கிழக்குத் தீமோருக்கு சுயாட்சி முறையிலான தீர்வு ஒன்றினை வழங்க புதிய அரசு ஒப்புக் கொண்டுள்ளது. இப்புதிய அபிவிருத்திகளைத் தொடர்ந்து ஐ.நாவின் விசேட தூதுவர் ஜம்சீட் மாக்கர் கடந்த ஞாயிறன்று கிழக்குத் தீமோருக்கு விஜயம் மேற்கொண்டார். அங்கு அவர் அப்பிராந்திய இராணுவத் தலைவர்கள் உள்ளூர் அரச பிரதிநிதிகள் மற்றும் அப்பிராந்தியத்தில் செல்வாக்குப்பெற்ற தேவாலய அதிகாரிகளுடனும் பேச்சுக்களை மேற்கொண்டார்.

ஐ.நா. வின் விசேட தூதுவர் இந்தோனேசிய தலைநகர் ஜகர்தாவில் கிழக்குத் தீமோரின் விடுதலைப்போராட்டத் தலைவர் குஸ்மாவோவை கடந்த வெள்ளியன்று சந்தித்திருந்தார்.

இவர் இங்கு வருவதற்கு முன் இந்தோனேசியாவின் புதிய ஜனாதிபதி B.J ஹபீபியுடன் பேச்சுக்களை கடந்த சனியன்று மேற்கொண்டார். கிழக்குத் தீமோரின் 800,000 மக்கள் தமது சுதந்திரத்திற்காக வாக்கெடுப்பு ஒன்று நடாத்தப்பட வேண்டும் என்றும் இந்தோனேசியாவின் 27வது மாகாணமாக அதிகாரத்தின் கீழ் தொடர்ந்தும் தமது நாடு இருப்பதை விரும்பவில்லை என்றும் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஞாயிறன்று கிழக்குத் தீமோரின் தலைநகர் டிலியில் மாபெரும் பேரணியொன்றும் இடம்பெற்றது.

## ஆப்கானிஸ்தான்

# தலிபான்களுக்கு எதிரான யுத்தத்திற்கு இஸ்ரேல் உதவுகிறது

### - தலிபான்கள் குற்றச்சாட்டு

ஆப்கானிஸ்தானின் இஸ்லாமிய தலிபான் அமைப்பின் ஐ.நா. பிரதிநிதி தமது நாட்டிற்கு எதிரான கிளர்ச்சியாளர்களின் யுத்த முயற்சிக்கு இஸ்ரேல் உதவி வருகிறது எனக் குற்றம்சாட்டியுள்ளார்.

கடந்த வியாழன் அன்று ஐ.நா. சபையில் ஆப்கானிஸ்தானின் பிரதிநிதி நூருல்லா சாத்ரான் பேசும் போது முன்னாள் ஜனாதிபதி புறானுதீன் றபானி 1996-ம் ஆண்டு இஸ்ரேலின் தலைவர்கள் சிலருடன் பேச்சுக்களை மேற்கொண்டிருந்தார். பின்னர் அவரது நெருங்கிய உதவியாளர்கள் சிலர் இஸ்ரேலியப் பிரதமர் நெத்தன்யாகுவைச் சந்தித்துள்ளனர்.

இதன் தொடர் நடவடிக்கையாக அண்மையில் அவர்கள் இஸ்ரேலுக்கு பயணம் செய்தனர். அங்கு நடைபெற்ற பேச்சுக்களைத் தொடர்ந்து மிக நவீன உளவு வேலைகளுக்கு உதவக்கூடிய கேட்கும் கருவிகள் மற்றும் சில உபகரணங்கள் போன்றவற்றை பெற்றுக் கொண்டுள்ளனர் என்ற அவர், 1500, 2000 மைல்கள் தாண்டி இஸ்லாமின் இதய பூமிக்குள் நுழைந்து முஸ்லீம்களை அழிக்கும் நடவடிக்கைகளை இஸ்ரேலியர்கள் மேற்கொள்கிறார்கள், இதற்காக அவர்கள் மிகக் கடுமையான கொடுரமான பரிசைப் பெற்றுக் கொள்வார்கள் என்றார்.

பதவியிலிருந்து துரத்தப்பட்ட முன்னாள் ஆப்கானிஸ்தானின் ஆட்சியாளர்கள் தற்போது வடபகுதியிலிருந்து தற்போதைய ஆட்சிக்கு எதிராக யுத்தம் செய்து வருகின்றனர். அப் பகுதியில் கடந்த மாதம் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு இஸ்ரேல் உதவிகளை அனுப்பியிருந்தது, ஆனால் வடபகுதி ஆட்சியாளர்கள் அதனை நிராகரித்து திருப்பி அனுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பபுவா நியூ கினி

# பபுவா நியூ கினியில் கடற்கோளின் கோரத்தாண்டவம் மூவாயிரத்திற்கும் அதிகமானோர் பலி

பசுபிக் சமுத்திர நாடான பபுவா நியூகினியின் வடமேற்குக் கரைப் பகுதியில் தோன்றிய பாரிய கடற்கோளினால் மூவாயிரம் வரையிலான மக்கள் கொல்லப்பட்டனர். பல கிராமங்கள் கடலால் அழிக்கப்பட்டன.

பபுவா நியூகினியின் வடமேற்கு பிஸ்மாக் கடற்பகுதியில் அமைந்திருந்த சிறு தீவுப் பகுதிகளின் மக்கள் கடந்த வெள்ளியன்று தமது வாழ்நாளில் அறிந்திராத புதுமையான ஒரு அனுபவத்தைச் சந்தித்தனர். நடந்து முடிந்த அனர்த்தத்தின் பின் தப்பிப் பிழைத்த ஓர் கிராமவாசி தனது அனுபவத்தை பத்திரிக்கையாளரிடம் விபரித்தார்.

கடந்த வெள்ளியன்று இரவு அப் பகுதியில் விசித்திரமான நில நடுக்கம் போன்றதோர் அதிர்வு ஏற்பட்டுள்ளது. அத்துடன் போர்விமானங்கள் இறங்குவதுபோன்ற பாரிய இரைச்சல் ஏற்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து திடீரென ஏற்பட்ட வெளிச்சத்தினூடு கடலை நோக்கியபோது கடல் கொந்தளித்து மிக வேகமாக கரையைநோக்கி வந்துகொண்டிருந்ததை அவதானித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து உயிரைப் பாதுகாத்துக்கொள்ள செய்வதறியாது அங்கும் இங்கும் மக்கள் ஓடத் தொடங்கியுள்ளனர்.

ஆனாலும் பாரிய கடலலைகள் அவர்களை விட்டுவைக்கவில்லை. சுமார் பத்து மீற்றர்கள் (33 அடி) உயரத்திற்கு கடல் கொந்தளித்து அலைகள் கரையை நோக்கி நகர்ந்துள்ளன. சில நிமிட நேரங்களிற்குள் கிராமத்திற்குள் புகுந்த கடல் அலைகள் கிராமத்தவர்களையும் அள்ளிக் கொண்டு பேரழிவையும் ஏற்படுத்திவிட்டு மீண்டும் ஆழ் கடலுக்குள் சென்றுவிட்டது.

இப்பகுதியில் உள்ள பல தீவுகள் ஆழமற்ற நிலத்தொடர்புகளை கொண்டிருந்தன. கடந்த வெள்ளியன்று ஏற்பட்ட அனர்த்தத்தின்பின் பல தீவுகள் கூட காணாமல் போயுள்ளனவாம். இப் பகுதித் தீவுகளில் சுமார் 10,000 மக்கள் வசித்தனர்.

இவர்களில் 3000 வரையிலான மக்கள் ஏற்பட்ட கடற்கோளினால் மரணமடைந்துள்ளனர். மீட்பு வேலைகளில் அண்டை



நாடான அவுஸ்திரேலிய கடற்படையினரும் விமானப்படையினரும் ஈடுபட்டு வருகின்றனர். 6000 வரையிலான மக்கள் வீடுகளை இழந்து காயப்பட்ட நிலையில் அகதிகளாகி உள்ளனர்.

பபுவா நியூகினியின் பிரதமர் திரு. பில்ஸ்ரேக் கடந்த ஞாயிறன்று சம்பவம் நடந்த பகுதிக்கு விஜயம் செய்து மக்களுக்கு நிவாரணங்களை வழங்கினார்.

## ஆபிரிக்கா

# ஒன்றுபட்ட அகண்ட ஆபிரிக்க அரசு அமையவேண்டும்

### – உகண்டா தலைவர் முசேவினி –

ஆபிரிக்கா கண்டத்தை ஒருமித்த ஓரே ஆபிரிக்க அரசும், அதற்கான ஓர் பலமிகுந்த இராணுவமும் அமைக்கப்பட வேண்டும் என உகண்டா ஜனாதிபதி யுவேரி முசேவினி கடந்த வெள்ளியன்று தெரிவித்துள்ளார்.

உகண்டாவில் பல அமைப்புக்களை ஒன்றிணைத்த தேசிய கூட்டு இயக்கத்தின் மத்திய மாநாட்டின் இறுநாள் அன்று வெளியிட்ட அறிக்கையில் மத்திய, கிழக்கு ஆபிரிக்காவை உள்ளடக்கிய ஒருமித்த ஓர் ஆபிரிக்க அரசும், ஒன்றுபட்ட ஆபிரிக்க இராணுவமும் அமைக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

உகண்டா தலைநகர் கம்பாலாவில் கூடியிருந்த 1600 பிரதிநிதிகளின் முன்பாக அவர் இவ்வாறு கூறினார். எமது எதிர்கால சந்ததிக்கு உறுதியான ஒன்றுபட்ட தலைமையும் பாதுகாப்புமே உத்தரவாதமானது என நான் கருதுகிறேன்.

கடந்தகாலத்தில் ஆபிரிக்காவில் பல முரண்பட்ட தலைவர்களின் நடவடிக்கைகளினால் ஏற்பட்ட விளைவுகள் பாரதூரமானவை. நாமும் அதே தவறுகளை விட்டுவிடுவோமா எனப் பயப்படுகிறேன் எனக் கூறினார்.

1950 களிலும் 1960 களிலும் ஆபிரிக்கா மிகப் பலம்வாய்ந்த ஒரு பிராந்தியமாக காணப்பட்டது. பின்னர் ஏற்பட்ட யுத்தங்களும், இனப் பிரிவினைகளும் அப் பிராந்தியத்தின் பின்னடைவுக்கு பிரதான காரணமாகின என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பமாகிவிட்டது

## பிரித்தானியாவில்

# GNANAM

# Telecom Centers




பாரிசில் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஞானம் தொலைபேசி அட்டைகளை இப்பொழுது லண்டனில் சகல வணிக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| *சிறீலங்கா | - 1min | - 0.35p |
| *இந்தியா | - 1min | - 0.30p |
| கனடா | - 1min | - 0.05p |
| அமெரிக்கா | - 1min | - 0.05p |
| ஜேர்மனி | - 1min | - 6p |
| பிரான்ஸ் | - 1min | - 0.06p |

| | | |
|---|---|---|
| லண்டன் Mobile | - 1min | - 0.15p |
| லண்டன் National | - 1min | - 0.03p |
| அவுஸ்திரேலியா | - 1min | - 0.08p |
| சிங்கப்பூர் | - 1min | - 0.20p |
| சுவிற்சர்லாந்து | - 1min | - 0.08p |

வர்த்தகர்களுக்கு விசேட கழிவு உண்டு. கீழ்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும்

# GNANAM Telecom Centers

180 High Street North
East Ham, London E6, U.K.
Tel: 0181-4708844 Fax: 0181-4708777

* இரவு 6 மணி முதல் காலை 7 மணி வரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழமுரசு
Eelamurasu Weekly
“உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை”

# கறுப்பு ஜூலை

இந்த ஜூலை மாதம் ஈழத் தமிழர்களைப் பொறுத்த வரை மறக்கமுடியாத ஒரு மாதமாகும். 1983ல் நடந்த இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகளும், 1995ல் நடந்த நவாலிப் படுகொலைகளும், 1996ல் நடந்த நாகர்கோவில் படுகொலைகளும் இந்த மாதத்தை தமிழ் மக்கள் என்றைக்கும் மறக்க முடியாத கறுப்பு மாதமாக வரலாற்றில் பதிந்து வைத்திருக்கின்றன.

கறுப்பு ஜூலை என்றவுடன் பெரும்பாலானவர்களின் நினைவுக்கு வருவது 1983 ஜூலைப் படுகொலைகள்தான் இன அழிப்பு நடவடிக்கையை இந்தக் கலவரத்தை ஒரு இனக் கலவரம் என்றுதான் வர்ணிக்கும் முயற்சிகள் இன்றுவரை நடந்துவருகின்றன.

இரண்டு மதத்தவர்கள் ஒருவருடன் ஒருவர் மோதிக்கொண்டால் அதை மதக் கலவரம் என்கிறோம். இரண்டு சாதிப் பிரிவினர்கள் ஒருவரோடு ஒருவர் மோதிக் கொண்டால் அதைச் சாதிக் கலவர் என்கிறோம். இரண்டு ஊரவர்கள் ஒருவருடன் ஒருவர் மோதிக்கொண்டால் ஊர்க்கலவரம் என்கிறோம். ஆனால் சிங்களவர்கள் ஒரு இனம் என்ற அடிப்படையில் தமிழர்களை குறிவைத்து தாக்கியபோது, அவர்களது உடமைகளை அழித்தபோது, பதிலுக்கு தமிழர்கள் சிங்களவர்களை ஒரு இனம் என்ற அடிப்படையில் குறிவைத்து தாக்காத சூழ்நிலையில் அதை ஒரு கலவரம் என்ற குறுகிய வரையறைக்குள் அடக்குவது அதனால் ஏற்பட்ட பாதிப்புக்களின், இழப்புக்களின் இன ரீதியான தாக்கத்தை மழுங்கடிக்கும் நடவடிக்கையாகும்.

இரண்டு மனிதர்கள் ஒருவவோடு ஒருவர் சண்டையிட்டுக் கொள்ளும் போது, அல்லது ஒருவரை ஒருவர் உயிர் போகும் அளவுக்கு தாக்கும்போது, அந்த இருவரில் ஒருவர் கொல்லப்படுவதற்கும், எதுவுமே செய்யாதிருக்கும் ஒருவரை இன்னொருவர் திட்டமிட்டுக் கொலை செய்வதற்கும் எவ்வாறு வேறுபாடு உண்டோ அவ்வாறுதான் ஒரு இனம் இன்னொரு இனத்தை அழிக்கும் நோக்குடன் திட்டமிட்டுத் தாக்குதல் நடாத்துவதற்கும், இரண்டு இனங்கள் பல அரசியல் பொருளாதார நலன்களுக்காக ஒருவருடன் ஒருவர் மோதிக்கொள்வதற்கும் வேறுபாடு உண்டு.

1956-லிருந்து 1983 வரை சிங்கள பௌத்த பேரினவாதிகளால் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அனைத்து வன்முறைகளையும் இந்த அடிப்படையில் நாம் இனச்சுத்திகரிப்பு, இன அழிப்பு நடவடிக்கைகளாகவே பார்க்கவேண்டும். இதில் முக்கியமான அம்சம் - தமிழ் மக்களுக்கு எதிராக காலத்துக்கு காலம் கட்டவிழ்த்து விடப்பட்ட ஒவ்வொரு வன்முறைக்குப் பின்னணியிலும் சிங்களத் தலைவர்களும் சிறீலங்கா அரச இயந்திரமும் இருந்திருக்கிறது.

தமிழ் மக்கள் தங்களுக்கு எதிராக வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்ட எந்தச் சந்தர்ப்பத்திலும் சிங்கள மக்களுடன் ஒரு இனம் என்ற வகையில் மோதலில் ஈடுபடாத சூழ்நிலையில் இந்த நடவடிக்கைகளை இனக் கலவரம் என்று முத்திரை குத்தி குறுக்கி விடுவது தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து தமிழர்களை அழிக்க இடையறாது முயன்று கொண்டிருக்கும் பௌத்த சிங்கள பேரினவாதிகளுக்கு துணைபோகின்ற ஒரு முயற்சியாகும்.

சிறீலங்காவின் பௌத்த சிங்கள பேரினவாத ஆட்சியாளர்கள் சிறீலங்கா ஒரு பல்லினக் கலாச்சாரத்தைக் கொண்ட நாடு. அங்கே ஈழம் என்ற ஒரு நாடு கிடையாது. தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் இனப் பூசல்கள் இருக்கின்றனவேயன்றி - சிங்கள பெரும்பான்மை இனத்தவரிடம் இன மேலாதிக்க கருத்தியலோ அல்லது இன அழிப்பு பிரதேச ஆக்கிரமிப்பு நோக்கமோ இல்லை என்று உலக அரங்கிற்கு காட்டுவதற்கு முற்பட்ட வருகின்றார்கள்.

பாராளுமன்ற வரையறைக்குட்பட்ட அரசியல், பொருளாதாரக் காரணங்களின் அடிப்படையிலேயே சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையில் பூசல்கள் உருவாகி அவை மோதலாக வெடித்து வருகின்றன. அரசியல் அதிகாரத்தைப் பரவலாக்கி பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டால் இனப் பிரச்சினை தீர்ந்துவிடும் என்ற வாதத்தை அவர்கள் முன்வைக்கின்றனர்.

ஆனால், உண்மையில் இலங்கைத் தீவில் சிங்களவர்கள், தமிழர்கள் என்ற இரண்டு தேசிய இனங்களும் ஒன்றுடன் ஒன்று ஒத்துப்போக முடியாத வெவ்வேறான அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகளைக் கொண்டவை. அதேபோல் ஒன்றுடன் ஒன்று ஒத்துப்போக முடியாத வெவ்வேறான வரலாற்று பண்பாட்டு விழுமியங்களையும் கொண்டவை.

இலங்கைத் தீவில் தமிழர்களுக்கு எதிராக பௌத்த சிங்கள பேரினவாதிகளால் வெறும் அரசியல் பரவலாக்கல்கள் மூலமோ அல்லது பல் தேசியக் கலாச்சாரம் என்ற போர்வையைப் போர்த்துவதன் மூலமோ இரண்டு இனங்களையும் ஒன்றிணைக்க முடியாது என்பதற்கு 1983 ஜூலை இன அழிப்பு, இன சுத்திகரிப்பு நடவடிக்கை ஒரு மிகச் சிறந்த உதாரணமாகும். இந்த நிகழ்வின் 15வது ஆண்டில் இது இனக் கலவரமல்ல திட்டமிட்ட இனச் சுத்திகரிப்பு இன அழிப்பு நடவடிக்கைகள்தான் என்பதை ஓங்கி உரத்துச் சொல்லி எங்கள் எதிரிகளின் முகத்திரையை கிழிப்பதோடு, இனி ஒரு கறுப்பு யூலை உருவாகா வகையில் எங்களுக்காக நாங்கள் போராடுவோம். எங்கள் தேசத்தின் விடுதலைக்கு பங்களிப்போம்.

பார்வை

# தமிழீழத்தின் சர்வதேச எதிர்காலம்

தமிழீழம் தன் மக்கள் மீது 15 வருடங்களுக்கு முன் சிங்களதேசத்தினரால் நடாத்தப்பட்ட இனப்படுகொலைகளை நினைவுகூருகையில், உலகின் இருவேறு தேசிய இனங்களின் போராட்டங்கள் சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகளை எதிர்கொண்டுள்ளன. பாலஸ்தீனியர்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை மேலதிகமான அங்கீகாரத்தை வழங்கி அவர்களின் முழுமையான விடுதலைக்கான தமது இணக்கப்பாட்டை வெளிக்காட்டியுள்ளது.

அமெரிக்காவும் இஸ்ரேலும் ஐ.நா சபை நடவடிக்கையை எதிர்த்துள்ளபோதும், பெரும்பான்மை வாக்குகளால் பாலஸ்தீனத்திற்கு முன்னர் வழங்கப்பட்ட அங்கீகாரம் தரமுயர்த்தப்பட்டுள்ளது. இதே வேளை கொசோவா (Kosova) மக்களுக்கு சுயாட்சி (Automomy) வழங்கவேண்டும் என மேற்கத்தேய சக்திகள் வலியுறுத்த ஆரம்பித்துள்ளன. கொசோவாவுக்கான சர்வதேச திட்டம் ஒன்றை வகுக்கவேண்டும் எனவும் அதனை செர்பிய நிர்வாகம் ஏற்க மறுத்தால் அவர்கள் மீது நேட்டோ நாடுகளின் இராணுவ அச்சுறுத்தல் உருவாக்கப்படவேண்டும் எனவும் பிரான்ஸ் பகிரங்கமாக கேட்டுள்ளது.

பாலஸ்தீனம் தொடர்ச்சியான அரபு நாடுகளின் ஆதரவுடன் தன் சர்வதேச அந்தஸ்தை பாதுகாக்கின்றது. கொசேவா தன் புவிசார் அரசியல் பின்னணியில் தன் பலத்தை ஒன்றுதிரட்டுகின்றது. சேர்பியா பாரம்பரியமாக ரஷ்சிய சார்பு நாடு என்பதும், மேற்கத்தைய சக்திகளுக்கு எதிரான ஒரு சக்தி சேர்பியா என்பதும், கொசோவாவின் புவிசார் அரசியலுக்கு பின்னணிக் காரணமாகும். தமிழீழம் முற்றிலும் மாறுபட்ட பின்னணியைக் கொண்டது.

இந்தியா என்ற பிராந்திய வல்லரசும், அதனைச் சுற்றி இந்தியா மீது அச்சம் கொண்ட நாடுகளின் தந்திரோபாய நிலைப்பாடுகளுக்கும் இடையே நாம் வாழ்கிறோம். சீனா மற்றும் அமெரிக்காவின் தென்னாசிய கோட்பாடுகளானது குழப்பகரமான நலன்களை பிரதிபலிக்கின்றன. சிறீலங்கா அரசு தென்னாசியாவில் காணப்படும் அனைத்து பகை முரண்பாடுகளையும் தாண்டி அனைவருக்கும் நண்பனாக நடிக்க முயல்கிறது. தமிழீழத்தின் ‘இயல்பான’ நண்பனாக இருக்கவேண்டிய இந்தியாவை தனது பக்கத்தில் வைத்திருக்கவேண்டிய ‘கட்டாயம்’ சிறீலங்காவுக்கு உண்டு. கதிர்காமரின் இராஜதந்திர மரபுகளுக்கு அப்பாற்பட்ட டில்லி பயணங்கள் முழுமையாக இக் காரணங்களையே பிரதிபலிக்கின்றன. மறுபுறம் சீனா, பாகிஸ்தான் என்பன சிறீலங்காவின் இயற்கையான நண்பர்கள். நீண்ட வரலாற்றுப் பின்னணி கொண்ட வெளிவிவகார கொள்கையை இவற்றுடன் சிறீலங்கா மேற்கொண்டு வருகின்றது. அமெரிக்க நலன்களை தென்னாசியாவில் குறிப்பாக இந்துசமுத்திர பிராந்திய விவகாரத்தில் பிரதிபலிக்க வேண்டிய கட்டாயம் சிறீலங்காவுக்கு உண்டு. குறிப்பாக இந்திய - பாகிஸ்தானிய அரசுகளின் அணு ஆயுத பரிசோதனைகளுக்கு பின்னர் இத்தேவை அதிகரித்துள்ளது.

தமிழீழத்தை பொறுத்தவரை அதனது வெளிவிவகாரப் போக்கு வெளிப்படையாக இதுவரை பிரகடனப்படுத்தப்படவில்லை. தேசியத் தலைவர் அவர்கள் தமிழீழ தேசத்தின் வெளிவிவகார நிலைப்பாட்டுக்கான அனைத்து சாத்தியங்களையும் பாதுகாத்து வருகின்றார்.


இந்தியாவுடனான முரண்பாட்டை விடுதலைப் புலிகள் நட்பு ரீதியான முரண்பாடாகவே பார்க்கின்றனர். தமிழீழ தேசத்தின் முழுமையான விடுதலையை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்பது தமிழீழத்தின் அடிப்படை வேண்டுதல் ஆகும். சிறீலங்காவின் இறையாண்மை (Sovereignty) தொடர்பான விவகாரமாக என இதனை இந்திய நிர்வாகத்தின் ஒரு பகுதி கையாள விரும்புகின்றது. இவற்றிற்கிடையே தொடர்ச்சியான தமிழர் தேசியத்தின் செயற்பாடு இந்தியாவை தமிழீழத்தின் இறையாண்மையை அங்கீகரிக்க வைக்கும் என எதிர்பார்க்கலாம்.

அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய சக்திகளுடனான விடுதலைப்புலிகளின் உறவு, அடிப்படையில் இவற்றுடனான நல்லுறவு என்ற மட்டத்தில்தான் உள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் தத்தமது நாடுகளில் எதுவித சட்டவிரோத செயல்களிலும் ஈடுபடவில்லை என மேற்கத்தேய தரப்பு பகிரங்கமாக ஒத்துக்கொண்டுள்ளது. இதேபோன்று தென்னாசியாவில் மேற்கத்தேய நலன்களை விடுதலைப் புலிகள் இதுவரை நிராகரித்ததில்லை. அமெரிக்கா தம் மீது விதித்த தடையை அமெரிக்க சட்ட வரம்புக்கு உட்பட்டு எதிர்கொள்ளவே புலிகள் முனைந்துள்ளனர். விடுதலைப்புலிகளின் சர்வதேச பணியக பொறுப்பாளரினால் கலிபோர்னிய நீதிமன்றத்தில் அமெரிக்க இராஜாங்க அமைச்சின் செயலாளர் அல்பிரைட் மடலினுக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கு, விடுதலைப்புலிகள் சர்வதேச நெறிமுறைகளுக்கு வழங்கும் மரியாதையைக் குறிக்கின்றது.

அடிப்படையில் தமிழீழம் பூரணமாக விடுவிக்கப்படும்போது புலிகள் உலக சமூகம் மீது வெளிக்காட்டும் நம்பிக்கைக்கு சாதகமான பதிலை உலக சமூகம் மீளத் தரும் என எதிர்பார்க்கலாம்.

இராணுவ ரீதியாக சிறீலங்காவை வெற்றி கொண்டு எமது எல்லைகளை நாம் வரையறை செய்யும்போது, தேசம் என்ற முழுமையான உரித்துடமையுடன் தமிழீழம் தன் வெளிவிவகார கோட்பாட்டை செயற்படுத்த முற்படும். தமிழீழத்தின் நலன்களை ஏற்றுக்கொண்ட நாடுகளுடன் பரஸ்பர உறவுகளை அது மேற்கொள்ளும். அப்போது தென்னாசிய பிராந்திய நலன்கள் என்பதை தனது சொந்த பாதுகாப்புக்கும் நலனுக்கும் ஏற்புடைய கோட்பாடு ஊடாகவே தமிழீழம் சந்திக்க வேண்டிய தேவை காணப்படும். இங்கே இந்தியா என்ற பிராந்திய சக்தி தமிழீழத்தின் எதிர்பார்ப்புக்களை திருப்திப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளது. தனது இயற்கையான நண்பன் ஒருவனை எதிர் முகாமிற்கு தள்ளும் முடிவை இந்தியாவால் எடுக்கமுடியாது. தற்போது இந்தியாவுடன் விடுதலைப் புலிகள் உருவாக்கிவரும் பலதரப்பட்ட கலாச்சார - இன உறவுகள் இரு தரப்பிற்கும் இடையேயான தற்காலிக கசப்புணர்வுகளை நீக்கி நிரந்தரமான உறவுக்கு பாலமிடும் என நம்பலாம்.

- ராஜ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிட்னியிலிருந்து - வன்னிக்கு

*அவுஸ்திரேலியாவில் தற்போது இருக்கும் திரு. பொன்னி வேந்தன் அவர்கள், கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் கொழும்புக்குச் சென்று அதன் பின் வன்னிக்கும் சென்றிருந்தார்.*

*அங்கு தான் கண்டவற்றையும், கேட்டவற்றையும் தனக்குக் கிடைத்த அனுபவங்களையும் ஒரு பயணக் கட்டுரையாக வடித்திருத்கிறார்.*

*சென்ற வாரத்திலிருந்து இக் கட்டுரை தொடராக ஈழமுரசில் வெளிவருகின்றது.*

*— ஆர்.*

(சென்ற வாரத் தொடர்ச்சி)

வவுனியா நகரம் இராணுவ வீரர்களாலும் பொலீசாரினாலும் நிரம்பிக் காணப்பட்டது. மக்களும், தங்கள் காரியங்களைச் சுறுசுறுப்பாக செய்வதைக் காணமுடிகிறது. மாணவர்கள் பாடசாலையை நோக்கிப் புறப்பட்டுக் கொண்டு இருந்தார்கள். கடைகள் திறக்கப்பட்டு வியாபாரம் சுறுசுறுப்பாக நடைபெறுவதைக் காண முடிந்தது. அரச நிறுவனங்கள், வங்கிகள், என்பன இயங்குவதை அவதானிக்க முடிந்தது. நிலைமை வழமைபோல் இருந்தாலும் ஓர் அமைதிகலந்த பீதி அங்கலாய்ப்பு எல்லோர் முகத்திலும் காண முடிந்தது. பஸ் தரிப்பு நிலையம் கலகலப்பாக இருந்தது. வானொலிப் பெட்டிகள் தமிழில் முழங்கிக் கொண்டிருந்தன. தேநீர் கடைகள் மிகவும் மக்கள் கூட்டம் நிறைந்ததாக இருந்தது.

சுமார் 9 மணியிருக்கும். இரு அரச பஸ் வண்டிகளும் நான்கு தனியார் வண்டிகளும் மன்னார் போவதற்காக வரிசையில் நிறுத்தப்பட்டிருந்தன. அரச பஸ் வண்டிகள் நிரம்பிவிட்டதால், தனியார் வண்டியொன்றில் ஏறி நானும் எனது நண்பருடன், மன்னார் போவதற்காக அமர்ந்து கொண்டோம். பொதி ஒன்றும் இருவரிடமும் இல்லாதது பெரிய இலகுவாகஇருந்தது.

காலை 9.30 மணிக்கு பஸ்சில் ஏறி அமர்ந்த பின் 11 மணிக்கு அங்கிருந்து வண்டி கிளம்பியது. வவுனியா நகரில் இருந்து இரண்டு, மூன்று மைல் போன பின் அதாவது குடியிருப்புக்களைத் தாண்டியபின்பு அந்த ஆறு வண்டிகளும் ஒரு இராணுவ முகாமிற்குள் நுழைந்தன. மிகவும் பயமாக இருந்தது. என் நண்பன் பஸ் வண்டியின் பின்னிருக்கையில் இருந்தார்.

எனக்கு அருகில் இருந்தவரிடம் ஏன் இப்படி கொண்டுசெல்கிறார்கள்? என்று கேட்டேன். அவர் முறைத்தவாறு, 'பேசாமல் இரும்' என்றார். அடங்கிவிட்டேன். அடிமைபோல் இரண்டு மணித்தியாலமாக பஸ்சிற்குள் இருக்கின்றோம். அடிக்கும் மழை, வெய்யில், சன நெருக்கல் வேர்த்து வழிந்து பஸ்சில் நாற்றம் எடுக்கிறது. என் உறவினர்களும் நண்பர்களும் கொழும்பில் சொன்னதை நினைத்து எனக்கு இதுவும் வேணும் இன்னும்வேணும் என்று என்னையே நான் நொந்துகொண்டேன்.

இரண்டு மணித்தியாலத்தின் பின் இராணுவ வீரர்கள் வந்தனர். சல்லடைபோட்ட போது ஆட்களுக்கும், பொதிகளுக்கும் எதுவித வித்தியாசமும் அவர்கள் காட்டியதாகத் தெரியவில்லை.

> இதுமட்டுமல்ல, பாரிய முட்கம்பி வளையங்களை இந்த அணைகளுக்கு மேலாக தொடர்ச்சியாக மன்னார் வரையும் பல மடிப்பில் போட்டிருக்கிறார்களாம். வவுனியாவில் இருந்து சுமார் 50 மைல்களுக்மேல் மன்னார் இருக்கிறது.

இவ்வாறு பஸ் வண்டிகள் எல்லாம் சோதனை போட்ட பின் போக அனுமதித்தார்கள். ஒவ்வொரு வண்டிகளின் விபரமும் ஆட்களின் விபரமும் அடங்கிய ஏடு ஒன்று வண்டிச் சாரதியிடம் கொடுக்கப்பட்டது.

ஒவ்வொரு சோதனை செய்யும் சாவடியிலும் சாரதி அவ் ஏட்டைக் காட்டிவிட்டுப் போகும்படி கேட்கப்பட்டார். பின்னர் இரண்டு இராணுவக் கவச வாகனங்கள் எம்முன்னால் செல்ல பின்னால் பஸ் வண்டிகள் செல்ல இறுதியாக ஓர் இராணுவ வண்டியும் வந்துகொண்டிருந்தது, சிறைக் கைதிகள்போல்! மனம் பயத்தில் பலவற்றை நினைத்துக்கொண்டது.

இந்த இராணுவ முகாமை விட்டு நீங்கி சிறுதூரத்தில் முற்றாகக் கைவிடப்பட்ட மன்னார் வீதியும், ஜெயசிக்குய் நடவடிக்கையின்போது பாதிக்கப்பட்டு பாழடைந்த வீடுகளும், பள்ளிக் கூடங்களும், கோவில்களும், பட்டிகளும், தொட்டிகளும் வயல் தோட்டங்கள் பட்டுப்



போன பயன்தரும் மரங்களும் செடிகளும் மனதில் மேலும் அச்சத்தை ஏற்படுத்தின. நம்பவே முடியவில்லை. எவ்வாறு எமது வளம்கொளிக்கும் பூமி, எமது சொத்து சுகம் எல்லாம் பாரபட்சமின்றி அழிக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்கும் போது மனம் வேதனையால் கனக்க, தொண்டை பயத்தினால் அடைத்துப்போக எச்சிலை ஒருவாறு மிண்டி விழுங்கியவாறு மேலும் பார்க்கின்றேன். என்ன ஆச்சரியம்! மன்னார் வீதிக்கு நேர்ப்பக்கமாக வலது பக்கமாக பாரிய மண்ணால் ஆன அணைக்கட்டு ஒன்று போடப்பட்டதை அவதானித்தேன்.

அப்பொழுது பஸ்சில் இருந்த ஒருவர் இந்த அணைக்கட்டு மன்னார் மட்டும் போகிறது தெரியுமா? என்று அருகில் இருந்த மற்றவருக்குக் கூறுகிறார். திகைத்து விட்டேன். இதுமட்டுமல்ல, பாரிய முட்கம்பி வளையங்களை இந்த அணைகளுக்கு மேலாக தொடர்ச்சியாக மன்னார் வரையும் பல மடிப்பில் போட்டிருக்கிறார்களாம். ஒவ்வொரு மூன்று நான்கு மைல்களுக்கிடையில் காவல் தளங்களை அணைக்கட்டிலும் வீதியிலும் போட்டுள்ளார்களாம். வவுனியாவில் இருந்து சுமார் 50 மைல்களுக்மேல் மன்னார் இருக்கிறது.

எத்தனை மில்லியன் ரூபாய்களை மண்ணில் போட்டுள்ளார்கள். எத்தனை இராணுவ வீரர்கள் அங்கு வெறுமனே வீதியை காக்க அமர்த்தப்பட்டுள்ளார்கள். வெட்கமாக இருந்தது. வேதனையாக இருந்தது. வெள்ளையர்கள் போட்ட புகையிரத பாதையைத் தவிர ஒரு அடி கூட மேற்கொண்டு போட முடியவில்லை. வன்னியில் எத்தனை பாழ்டைந்த குளங்கள் ஒன்றும் திருத்தப்படாமல் இருக்கின்றன. இதோ மகாவலி வடக்கு நோக்கி வந்துகொண்டிருக்கிறது என்று எவ்வாறு வட பகுதி மக்கள் காலகாலமாக ஏமாற்றப்பட்டார்கள். இதை எல்லாம் இவர்கள் பாரபட்சமின்றி நிறைவேற்றி இருந்தால் இன்று இந்த நிலைமை வந்திருக்க முடியுமா? வரட்டுக் கௌரவமும், போலித்தனமும், சிறுபிள்ளைத்தனமும் மேலோங்கப்பட்ட இனவாதத்தின் உச்சக்கட்ட அடையாளச் சின்னங்களே, அங்கு உயர்த்திக் கட்டப்பட்ட உச்ச வரம்புகள் என்பதை எந்தவொரு சாதாரண குடிமகனாலும் உணர்ந்து கொள்ள முடியும்.

பறையனாலங்குளத்தில் சீமெந்தினால் தளம் அமைத்து பறையனாளங்குளம் என்ற பெயரை மாற்றி 'சப்புமல்புர' என்ற சிங்களப் பெயர் வைக்கப்பட்டு இராணுவத்தினால் சிங்கக்கொடி பறக்கவிடப்பட்டு நெருக்கடிகளின் காரணமாக பின்னர் கைவிடப்பட்ட நிலையில் இருக்கும் அந்த வழிபாட்டுச் சின்னங்கள் இதற்கு நல்ல உதாரணம். அதைப் பார்த்தவுடன் மனம் மிகவும் அல்லல்பட்டது, அறியாமையும், அரக்கத்தனமும் எவ்வாறு கொடிகட்டிப் பறக்கிறதென்று!!

அரசியல் அறிவும் சமூக சிந்தனையும் இல்லாத- அரசியல் தலைவர்களின் தான்தோன்றித்தனமான அடாவடித்தனம் அப்படியே பார்ப்பவர்களுக்கு புரியும். ஆனால், நீண்ட நாட்கள் இவர்களால் இப்படி போக முடியாது என்பதையும் யாராலும் உணரமுடியும். இது உலக வரலாறுகள் தந்த பாடங்கள்!

> தொண்டை பயத்தினால் அடைத்துப்போக எச்சிலை ஒருவாறு மிண்டி விழுங்கியவாறு மேலும் பார்க்கின்றேன். என்ன ஆச்சரியம்! மன்னார் வீதிக்கு நேர்ப்பக்கமாக வலது பக்கமாக பாரிய மண்ணால் ஆன அணைக்கட்டு ஒன்று போடப்பட்டதை அவதானித்தேன்.

பாரிய அணைக்கட்டுக்களையும் காவல் புரியும் இராணுவ வீரர்களையும் பார்த்து ஏங்கியவாறு பயணம் பள்ளம் மேடு சேறு சகதி நிரம்பிய வழியால் மேலும் தொடர்கிறது. ஒரு பெரிய பாரிய வெளி ஒன்றில் நூற்றுக்கு அதிகமான லொறிகள் வரிசையில் நிறுத்தப்பட்டு அதிலிருந்து சாமான்கள் இறக்கப்படுவதுமாய், ஏற்றப்படுவதுமாய் காணப்படுகிறது. பெரிய காட்டுப்பகுதி. ஏன்? இப்படிச் செய்கிறார்கள் என்று அருகில் இருந்தவரை அடைத்த குரலில் பரிவுடன் கேட்டேன்.

அதற்கு அவர் கொழும்பிலிருந்துவரும் சாமான்கள் இங்கு பறிக்கப்பட்டு சோதனையிட்ட பின், அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் பொறுப்பில் மன்னார் மடு வீதிவழியாக வன்னி பெருநிலப்பரப்பிற்கு அதாவது புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசத்திற்கு அனுப்புவதன்பொருட்டு இவ்வாறு நடைபெறுகிறது என்று விரைவாகவும் சுருக்கமாகவும் கூறிவிட்டு, மறுபக்கமாக முகத்தைத் திருப்பி ஏதோ முணுமுணுத்துக் கொண்டார். அவருக்கு நான் ஒரு மகா அலுப்பாக இருந்தது. அவரின் செயல்களில் நன்றாகவே தெரிந்தது நான் என்ன செய்வது?

(தொடரும்)

அனைத்து அச்சு வேலைகளும் குறித்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்

தமிழ் அச்சகம்

(மக்கள் கடை முன்பாக)

இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500-க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.

திங்கள் முதல் - சனி வரை 09.00 – 22.00 மணிவரை

60, Rue Louis Blanc, 75010 Paris

Tel & Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42

24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்

தமிழ் அச்சகத்தின் கிளை நிறுவனம் Marcadet Poissonniers இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

20 Rue Labat, 75018 Paris

M°: Marcadet Poissonniers

அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!

திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதன் நன்மை அழைப்பிதழ், கேக் பெட்டிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

அழைப்பிதழ் மாதிரித்தாள் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

Pub

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூட்டு வலியை உண்டாக்கும் வழிகளை சீர் செய்வோம்

## ஏன் மூட்டுகளில் வலி ஏற்படுகிறது? எதனால்?


அல்சர் உள்ள ஒருவருக்கு 'எண்டாஸ்கோப்' செய்து அல்சர் எந்தளவு உள்ளது என்பதை துல்லியமாகப் பார்த்து சிகிச்சை செய்ய முடிகிறது. சிறுநீரகத்தில் கல் உள்ள ஒருவருக்கு எந்தச் சிறுநீரகத்தில் கல் உள்ளது என்பதை 'ஸ்கேனிங்'கில் பார்க்க முடிகிறது.

ஆனால், முதுகில் வலி, நடுத்தண்டில் வலி, கால் மூட்டில் வலி என்றதும் 'எக்ஸ்ரே' முதல் ஸ்கேனிங் வரை செய்ததில், சிலருக்கு முதுகிலும் வட்டு நகர்ந்துள்ளது என்றும், சிலருக்கு கால் மூட்டு தேய்ந்துள்ளது என்றும், ஒரு சிலருக்கு தோள் பட்டை மூட்டுகளை சுற்றியுள்ள தசை நார் பாதித்துள்ளது என்றும் எலும்பு நிபுணர் கூறினாலும், பலருக்கு எல்லா பரிசோதனைகளும் 'சாதாரணம்' என்றே வருகிறது.

வலி சில நோய்களில் உயிரே போவது போல் இருப்பது எதனால்? கீழே விழும்போதும் கனமான பொருளை தூக்கும் போதும், முதுகு எலும்பு பிதுங்குவது உண்மையே.

பலருக்கு கால்மூட்டு, இடுப்புகளில் தேய்வு ஏற்படுவதும் சகஜமே. இருதயம் 72 - முறையும் சுவாசம் 18 முறையும் ஒரு நிமிடத்திற்கு செயல்படுகிறது. உணவு மண்டலம் இரத்த மண்டலம், நரம்புமண்டலம் என அனைத்தும் சரி வர செயல்பட்டு ஆரோக்கியமாக தசை எலும்புகள் இயங்கினாலும், உயிரோட்டம் என்பது விஞ்ஞானத்திற்கு இன்று வரை 'எட்டாத' ஒன்றுதான்.

நமது உடலில் ஒரு குறைந்த மின் காந்த சக்தி உள்ளது என்பதை சீன அக்குபஞ்சர் நிபுணர்கள் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பு கண்டறிந்தனர். இந்த குறைந்த மின்காந்த சக்தி உடல் முழுவதும், கை விரல் நுனியிலிருந்து கை, கால்கள், வயிறு, முதுகு, நெஞ்சு, கழுத்து,



இருதயம், நுரையீரல் வரை நிறைந்துள்ளது. இச்சக்தி (WEISHI) அதாவது தேங்கியிருக்கும் சக்தி என்று சீன அக்குபஞ்சர் மருத்துவர்கள் கூறுகின்றனர். இச்சக்தியானது அதிக உடல் உழைப்பில்லாதவர்களுக்கு 'தேங்கிய குளம் போல' இருப்பதால் மதமதவென்று, சுறுசுறுப்பின்றி ஒருவரை மாற்றி விடும்.

மற்றொரு சக்தி - (Yongshi) என்பது, நமது உடலில் இரத்தக் குழாய்களில் இரத்தம் ஓடிக் கொண்டே இருப்பதைப்போல, உடல் முழுவதும் உள்ள சக்தி ரேகைகளின் விழியாக சதா ஓடி, நமது ஒவ்வொரு உறுப்பையும் இணைத்து செயல்பட வைத்துக் கொண்டு இருக்கிறது.

அக்குபஞ்சர் நிபுணர்கள், நமது உடலில் உள்ள 12 அக்குபஞ்சர் சக்தி ரேகைகளை மட்டுமே பயன்படுத்தி பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை அளித்து குணம் அளித்து வருகின்றனர்.

ரேகைகளை படித்து, நோயுற்ற ஒருவருக்கு எந்த சக்தி ரேகை பாதித்துள்ளது என்பதை துல்லியமாக கண்டறிந்து, அக்குபஞ்சர் சிகிச்சையுடன் மாக்ஸா சிகிச்சை, டூனா சீனக் களிம்பு தேய்ப்பு சிகிச்சை, சக்தி உடற்பயிற்சி, சைனீஸ் மூலிகை மருந்துகள் போன்றவற்றால் ஆர்த்ரைட்டிஸ் முழுமையாக மூட்டு எலும்பு வலி மற்றும் தேய்வுகளையும் குணமாக்க முடிகிறது.

'ஆர்த்ரைட்டிஸ்' என்ற நோய் பெரும்பாலும் வயதானவர்களுக்கு ஏன் வருகிறதென்றால், நமது மூட்டுக்குள் இயற்கையாகச் சுரக்கும் மூட்டு நீர் குறைவாக சுரப்பதால் ஏற்படுகிறது. இந்நோய் அக்குபஞ்சர் சிகிச்சையில் ஓரளவு குணம் ஏற்பட்டாலும், மூட்டுக்களில் மீண்டும் மூட்டு நீர் சுரக்கவைக்கும் சைனீஸ் மூலிகை மருந்துகளான ஃபூ சென் செய்', 'ஷாபாவோ ஃஓ போன்ற சைனீஸ் மருந்துகளுடன் சைனீஸ் டூனா களிம்பு சிகிச்சைகளினால் முழுமையான குணம் கிடைக்கும்.

'ஓடும் நீர் கெடுவதில்லை' என்ற சீனப் பழமொழிக்கேற்ப, சக்தி ரேகைகள் சக்தியையும், உடலின் சக்தியையும் சீர்படுத்தும் 'தாவோண்', 'கியாஸ்' என்ற சீன ஆரோக்கியமாக வாழ எளிய உடற்பயிற்சிகளை சீன வைத்தியசாலைகளில் கொடுக்கிறார்கள்.

# குழந்தையின் படிப்பு ஆர்வத்தை தூண்டுவது எப்படி ?

உங்கள் குழந்தை படிக்க உங்களால் உதவ முடியும்! அதற்கு நீங்கள் தான் முதலில் படிக்க வேண்டும். நீங்கள் படிப்பதைக் கேட்கும் குழந்தை, மகிழ்வடைகிறது. ஆறு மாத குழந்தைக்கு என்னபுரியும் என்று நினைத்து அலட்சியமாக இருக்காதீர்கள். கைகளில் அணைத்துக்கொண்டு வெதவெதப்பான உங்கள் பரிசம், நீங்கள் படிப்பதை ஆவலோடு அவர்களை கேட்க வைக்கிறது. தொடுஉணர்ச்சி, சுவை உணர்ச்சி மிகுந்துள்ளதால், குழந்தைகளுக்கு கொடுக்கும் புத்தகங்கள் சிறிதாகவும், கைக்கு அடக்கமானதாகவும் இருக்க வேண்டும். அவர்களது கை விரல்கள் முழுதிறனைப் பெற்றிருக்காது என்பதால் எளிதில் பக்கங்களை திருப்பும் வண்ணம் இருக்க வேண்டும்.

புத்தகங்களின் பக்கங்களை திறக்கும்போது அவை ஒலி ஓசைகளை எழுப்புவனவாகவும், பக்கத்திலிருந்து படங்கள் எழுந்து வருவது போன்ற அமைப்பைக் கொண்டதுமாகவும் இருந்தால் நல்லது. இதுபோன்ற நிறைய கிடைக்கின்றன! ஏழைகளுக்கு இது கிட்டுமா? முடியும். நாமே இப்படி தயார் செய்து கொள்ளலாம். கொஞ்சம் கவின்கலை நுணுக்கம் வேண்டும். மேலைத்தேய நாடுகளில் இது போன்ற புத்தகங்கள் உள்ளன. கிளி படத்தைப் பார்த்தால், அந்த பக்கத்தைப் புரட்டியவுடன் 'கிளி'யின் ஓசை கேட்கும். இப்படி ரயில், பஸ் படங்களுக்கு ஏற்ப ஒலிகள் தோன்றும். கட்டடங்கள் போன்ற படங்கள் முப்பரிமாணத்தில் பிரிந்து வெளியே வரும். இது போன்ற உத்திகள் ஆவலை தூண்டுகின்றன. அரிசி, மா சங்கங்கள் இது போன்ற புத்தகங்களை வழங்கலாம். அவர்களிடம் கேட்டுப்பாருங்கள் தட்டுங்கள் திறக்கும்! கேளுங்கள் கொடுப்பார்கள்!



ஆறுமாதக் குழந்தையின் புத்தகப்படிப்பு ஆர்வம் அவர்கள் புத்தகங்களைத் தொட்டு இரசிப்பது, மெல்லுவது, கிழிப்பது, அடுக்குவது, புரட்டுவது என்பதில் தான் தெரியும். அவர்கள் கிழிக்கிறார்களே, புத்தகத்தை கசக்கிவிடுகிறார்களே என திட்டாதீர்கள். பத்துமாதமான குழந்தை புத்தகத்தை தன்னுடைய பிஞ்சுக் கரங்களால் தூக்கி வந்து உங்களிடம் கொடுக்கும் உங்களைப் படித்துக் காட்டச் சொல்லாமல் சொல்லும். கலர் படங்களைக் கண்டு மகிழும்.

உங்கள் குழந்தைக்காக நீங்கள் செய்தித்தாளை, பத்திரிகையைப் படித்துக்காட்ட வேண்டும். ஒலிகளையும், உச்சரிப்புக்களையும் கேட்டு மகிழச் செய்ய வேண்டும். சிறுவர் பாட்டுக்களைப் பாடிக் காட்டுங்கள். பஸ்சுக்கு காத்திருக்கும் போதும் கிளினிக்கில் உட்கார்ந்திருக்கும் போதும், பாடுங்கள் அல்லது படித்துக் காட்டுங்கள். அவர்களை உற்சாகமாக படிப்பதில் ஈடுபடுத்துங்கள். கேட்கும் சந்தேகங்களுக்கு பொறுமையுடன் விளக்கம் கொடுங்கள். அவர்களோடு உட்கார்ந்து புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டி குழந்தைக்காக கொஞ்ச நேரத்தைச் செலவிடுங்கள்.

தளர்நடைபோடும் பதின்மூன்றாம் மாதத்தில் படங்களைப் பார்த்து சிரிப்பதும் நகைப்பதும் என அவர்களின் உணர்வுகள் வெளிப்படும். எழுத்துணர்விலிருந்து பேச்சுக்கு அவர்கள் மாறிவிட்டார்கள் என்பதை இம்மாற்றம் உணர்த்துகிறது. 15 — 18 மாதங்களில் அவர்களுக்கு பிடித்தமான புத்தகத்தைக் காண்பித்து பூரித்துப்போவார்கள். ஒன்றரை வயது தொடங்கி மூன்றாம் ஆண்டிற்குள் மொழி வளர்ச்சியில் மிகப்பெரிய மாற்றம் தோன்றும். தொடர்ச்சியாகப் பேசவும், நினைவில் கொள்ளவும் அவர்களால் முடியும். படங்களைப் பார்த்தும், படங்களின் விளக்கங்களைப் படித்தும் புரிந்து கொள்வார்கள். நீங்கள் சோம்பலாக சில பக்கங்களை படித்துக் காட்டாமல் புரட்டினாலும், விடமாட்டார்கள்.

மேலும் நீங்கள் தான் குழந்தைகளுக்கு முன்மாதிரி. எனவே படித்துக் காட்டுங்கள். நீங்களும் படிக்க வேண்டும். அது கடிதமாக இருக்கலாம். ஏதாவது இதழாக இருக்கலாம். உங்களைப் பார்த்து குழந்தைகளும், படிக்கும் ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளும். படிப்பு, உங்கள் குழந்தையின் எதிர்கால பெருமைக்கு படிக்கட்டுகள் ஆகும்.

- வித்யா.

நன்றி: ஹெல்த்


# ஐரோப்பா தழுவிய குறும்பட போட்டி - 1998

**கலைஞர்களே!**

உங்கள் கமராக் கண்களைத் திறவுங்கள், எங்கள் முன்னால் விரிந்து கிடக்கும் எம்மவர் பற்றிய பிரச்சினைகளை படமாக்கிக் கொள்ளுங்கள். சமூகத்தைப் பற்றிய பார்வையும் எதிர்காலம் பற்றிய தெளிவும் உங்கள் குறும்படத்தில் பிரதிபலிக்கட்டும்.

**குறும்படப் போட்டியில் பங்குபற்றுவோருக்கான விதிமுறைகள்**

1. இவ்வருட ஜூலை மாத இறுதிப் பகுதிக்குள் போட்டியில் பங்குபற்றும் அனைவரும் தங்களது விண்ணப்பங்களை தொலைபேசி மூலமாக பதிவு செய்து கொள்ளுங்கள்
2. குறும்படங்கள் எம்மை வந்து சேரவேண்டிய இறுதித் திகதி ஒக்ரோபர் 15 இற்கு முன்.
3. ஆக்க தளம் - புலம் பெயர் வாழ்வின் அவலங்களை வெளிப்படுத்துவதாக இருத்தல் விரும்பத்தக்கது.
4. திரைக்கதை, இசை, பாடல், நெறியாள்கை யாவும் சுயமானதாக இருத்தல் வேண்டும்.
5. இப்போட்டியில் கலைக்குழுக்களாகவோ, தனிநபர்களாகவோ கலந்து கொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு:** *தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் - பிரான்ஸ் (01 43 58 11 42)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘தமிழீழப் பெண்கள் துணிச்சலுடன் இருப்பதற்குக் காரணம் அங்கு நடக்கும் போராட்டம்தான்’



*முன்னர் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றியவரும் தற்போது கனடாவில் இடம்பெற்றுவரும் ‘தமிழ் ஒலி’ வானொலியின் இயக்குனருமாகிய திருமதி வசந்தா நடராஜன் அவர்கள் சமீபத்தில் பாரிஸில் இடம்பெற்ற சர்வதேச இந்து ஒருமைப்பாட்டு மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக வருகை தந்திருந்தார். அவருடன் இடம்பெற்ற செவ்வியையே கீழே தருகிறோம்.*

**கேள்வி:** *வணக்கம் திருமதி வசந்தா நடராஜன் அவர்களே. நீங்கள் நீண்டகாலமாகவா கனடாவில் இவ் தமிழ் ஒலி வானொலி நிகழ்ச்சியை நடாத்தி வருகிறீர்கள்?*

**பதில்:** நான் தமிழீழத்தில் இருந்து கனடாவிற்குப் புலம் பெயர்ந்து வந்து 10 வருடங்கள் தான் ஆகிறது. ஆனால் கடந்த 5 வருடங்களாகத்தான் இவ் வானொலிச் சேவையில் பணியாற்றி வருகிறேன். இது தவிர கணினியுடன் தொடர்புடைய கையிருப்புக் கணக்கீட்டுப் பகுதியிலும் நான் தொழில் புரிந்து கொண்டு தான் இருக்கிறேன்.

**கேள்வி:** *நீங்கள் ஒரு தமிழ்ப்பற்று மிக்க பெண்ணாகக் காணப்படுகிறீர்கள். ஆனால் தற்போது நீங்களும் உங்கள் குழந்தைகளும் வாழ்ந்து வரும் சூழல் எம் பண்பாடுகள் பழக்க வழக்கங்களிலிருந்து பெரிதளவில் மாறுபட்டதே. இப்படியான ஒரு நிலையில் நீங்களும் ஒரு குடும்பத் தலைவி என்பதால் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்ன? இது தவிர உங்களைப்போல புலம்பெயர்ந்துள்ள ஏனைய எம்நாட்டுத் தாய்மார்களிற்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?*

**பதில்:** இங்கு வளர்ந்து வரும் தலைமுறை இடைவெளி கொண்ட குழந்தைகளை மூன்றாகப் பிரிக்கலாம். அதாவது முதலாவது பிரிவினராக, எம் ஈழத்திலேயே பிறந்து வளர்ந்து இங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் இளவயதுப் பிள்ளைகள். இரண்டாவது பிரிவினராக, அங்கு பிறந்திருந்தாலும் சிறு வயதிலேயே இங்கு வந்து இங்குள்ள கலாச்சாரம் பண்பாடுகளையே முழுவதுமாக அறிந்து அதன் வழியிலேயே வாழத்தலைப்படும் குழந்தைகள். மூன்றாவது பிரிவினராக, இங்கேயே பிறந்து இங்கையே முழுமையாக வளர்ந்து வரும் குழந்தைகளைக் குறிப்பிடலாம். எனவே இம் மூன்று பிரிவினரையும் ஒருமித்த சிந்தனைகள் செயற்பாடுகளுடன் நாம் வளர்க்க நினைப்பது தவறு. இதனால் அவர்கள் ஒவ்வொருவரினதும் உணர்வுகளைச் சரியான அளவில் புரிந்து, அதன்படி தமிழ்பண்பாடுகளிற்கேற்ப வளர்க்க வேண்டியது நிச்சயமாக ஒரு தாயின் கடமை. ஏன் பொதுவாக பெற்றோரினது கடமையென்றே சொல்லலாம்.

அதாவது முதலாவது பிரிவினர் என்று சொன்னேனே, அவர்கள் சற்று வளர்ந்த பிள்ளைகள். எம் கலாச்சாரம் பண்பாடுகளை முற்றிலும் அறிந்தவர்கள். இதனால் பெற்றோராகிய எம்முடைய எதிர்பார்ப்புகளின்படி தான் தம் வாழ்க்கையை நடைமுறைப்படுத்திக் கொள்வார்கள். எம் பண்பாடுகளைத்தான் முழுமையாகப் பின்பற்றுவார்கள். ஆனால் இவர்களிற்கு வெளியே சில பெரிய பிரச்சினைகள் காத்திருக்கும்.

அதாவது, ஒரு குறிப்பிட்ட வயது தாண்டியபின் மொழியைக் கற்கமுடியாத நிலை. ஆனால் தொழில் புரியவேண்டிய கட்டாயம். இது தவிர, வேற்று நாட்டுக் கலாச்சாரத்தை எதிர்கொள்ளவும் வேண்டிய சூழ்நிலை. இப்படி நிறையப் பிரச்சினைகள் இவர்களுக்குத் தோன்றும். இதனால் சிலர் உளவியல் ரீதியாகப் பாதிப்பு அடையத் தொடங்கலாம். எனவே பெற்றறோராகிய நாம் சரியான முறையில் இவர்களை இப்பிறநாட்டு வாழ்க்கையில் ஈடுபடுத்தி எம் பண்பாடுகளைச் சீரழிக்காத வகையில் இவர்களின் எதிர்காலத்தை வளப்படுத்த வேண்டும்.

அடுத்த இரண்டாவது வகையினர் கொஞ்சம் பிரச்சினைக்குரியவர்கள். ஏனெனில் இலகுவில் இவர்களை இங்குள்ள கலாச்சாரம் தன் வசம் ஆட்கொண்டு விடும். வீட்டில் நாம் சொல்வதைக் கேட்பதுபோல் இருப்பார்கள். ஆனால் வெளியில் சென்றதும் எமக்குத் தெரியாமல் இங்குள்ள கலாச்சாரங்களுடன் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி, சில நேரம் தவறுகளும் செய்ய முனைவார்கள்.

இதனால் இவர்களைக் கடுமையான முறையில் நாம் ‘இப்படித் தான் வளர வேண்டும், இதைத் தான் கட்டாயம் செய்ய வேண்டும்’ என வற்புறுத்தக் கூடாது. மென்மையான முறையில் இவர்களிற்கு எங்கள் பிரச்சினைகளை, தேவைகளைச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

அடுத்து மூன்றாவது பிரிவினர் உள்ளார்களே, அவர்கள் இங்கேயே பிறந்து இங்கேயே வளர்வதால் எம்நாட்டுக் கலாச்சாரங்களைப் பற்றி எதுவுமே தெரியாதவர்கள். இவர்களுக்கு முதல் மொழியே அவர்கள் எந்த நாட்டில் பிறந்தவர்களோ அந்நாட்டு மொழிதான். இதனால் வெளியில் எதையும் அவர்கள் எம் உதவியின்றியே கற்றுக் கொள்வார்கள்.

இதனால் வீட்டில் நாம் இவர்களோடு தமிழ் மொழியைத் தவிர வேறு மொழியில் கதைக்கவே கூடாது. அது மட்டுமல்லாது, அவர்களிற்கு எம் தாய் மொழி இரண்டாம் மொழியாகத்தான் இருக்கும். எனவே நாம் எவ்வாறு சிறீலங்காவில் ஆங்கிலத்தை மெல்ல மெல்ல அங்குள்ள குழந்தைகளிற்கு உணரக்கூடிய வகையில் கற்பித்தோமோ, அவ்வாறு இவர்களிற்கும் இத்தமிழ் மொழியை படங்கள், கதைகள் போன்றவற்றால் அவர்கள் விரும்பும் வண்ணம் கற்பிக்க வேண்டும். அதனால் மீண்டும் சொல்கிறேன், இங்குள்ள புலம்பெயர்ந்த தாய்மார்களாகிய நாம், எம் குழந்தைகளை வளர்ப்பதில் மிகுந்த தெளிவும், புரிந்துணர்வும் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

**கேள்வி:** *எம் தமிழ் பெண்களின் வாழ்க்கை நடைமுறை குறிப்பிட்ட ஒரு சிறிய கால இடைவெளியில் பெரிய மாறுதல்களைக் கொண்டுள்ளதே. இதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?*

**பதில்:** இத்தகையதொரு மாறுதல் தோன்றுவதற்கு இவர்கள் முகம் கொடுக்கும் காலப் பின்னணி தான் காரணம். அன்றைய பெண்களின் வாழ்க்கைச் சூழ்நிலை வேறு. அவர்களிற்கு அன்று அமைதியான நாட்டுச்சூழ்நிலை இருந்தது. உறவுகள் சூழ்ந்த அமைதியான குடும்பப் பின்னணி இருந்தது. இதனால்



தனக்குத் தேவையானவற்றை அறிவதோடு சரி. மேற்கொண்டு எதிலும் தம்மை ஈடுபடுத்திக்கொள்வதில்லை. ஆனால் இன்று நிலைமை வேறு இன்றுள்ள பெண்களிற்கு நாட்டிற்காகப் போராட வேண்டிய தேவை இருக்கிறது.

இதனால் வீர சுதந்திரப் பெண்களாகக் களத்திலே நிற்கிறார்கள். அது மட்டுமல்லாது, இன்றுள்ள யுத்த சூழ்நிலை காரணமாக சிதறிப்போயுள்ள குடும்பங்கள், உறவுகள் மத்தியில் ஏராளமான பொறுப்புக்களை தம்வசம் ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் இப்பெண்களிற்கு வந்துள்ளது. எனவே இன்றுள்ள பெண்கள் வீரமும், துணிச்சலும் மிக்கவர்களாக இருப்பதற்கு இன்று எம் நாட்டில் இடம்பெறும் போராட்டந் தான் காரணமாக இருக்கிறது.

**கேள்வி:** *இன்று பல பெண்கள் திருமணம் செய்து கொள்வதற்காகவே வெளிநாடுகளிற்கு வருகிறார்கள். ஆனால் இங்கு வந்து திருமணம் செய்த பின்பு எதிர்பார்ப்புகள் நிறைவேறாத சூழ்நிலையில் உளவியல் ரீதியாக பாதிப்படைகிறார்கள். இதைப்பற்றி உங்கள் கணிப்பீடு என்ன?*

**பதில்:** நீங்கள் சொல்வதில் நிறைய உண்மைகள் இருக்கிறது. இதற்குக் காரணம், எம்பெற்றோர்களிடையே உள்ள பிள்ளைகள் சார்ந்த அலுவல்களும் அக்கறையும் தான் என்றாலும், மறை முகத்தால் இதனால் பாதிப்புக்களும் இருக்கிறது.

அதாவது ஒரு பெண் வீட்டில் திருமணம் செய்யாமல் இருந்தால் எங்கே எம்மை பிறர் குறைவாகக் கூறுவார்களோ என்ற தாழ்வு மனப்பான்மை, மற்றும் பெண்தானே அவளால் எதையும் சகித்துக்கொள்ளக் கூடிய திறமை இருக்குமென்ற தவறான எண்ணங்களும் எம் பெற்றோரிடையே இயற்கையில் உண்டு. அத்தோடு இன்றைய யுத்த சூழ்நிலையும் அங்கிருந்து பிள்ளைகளை எப்படியாவது வெளிநாடுகளிற்கு அனுப்பி விட வேண்டுமென்ற தூண்டுதலை பெற்றோருக்கும் கொடுத்துள்ளது.

இதைவிட பெண்களிடையே உள்ள வெளிநாட்டு மோகமும் இதற்கொரு காரணம்தான். அதனால் விரைவில் இதற்கொரு தீர்வு காணப்பட வேண்டும்.

**கேள்வி:** *எமது தமிழ்ச் சமுதாயத்திலுள்ள ‘சீதனம்’ வழங்கல் என்ற முறைமை பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?*

**பதில்:** உண்மையில் இது எம் சமுதாயத்திலிருந்து உடனே அகற்றப்பட வேண்டிய ஓர் அம்சம். ஆனால் நான் நினைக்கவில்லை அவ்வளவு விரைவில் இப் பழக்கத்தை எம் சமுதாயம் விட்டுவிடுமென்று. இச் சீதனம் வழங்குதல் என்ற செயலால் பெண்கள்தான் பாதிப்படைகிறார்கள் என்று தனித்துச் சொல்ல முடியாது. இதனால் எத்தனையோ ஆண்களும் கூட பாதிப்புற்றுக்கொண்டுதான் இருக்கிறார்கள். எனவே இச்சீதனம் கொடுப்பதால் அல்லது வாங்குவதால் எவ்வளவு தூரம் ஆண்பிள்ளைகள் இழிவுபடுத்தப்படுகிறார்கள். அதாவது விலைபேசி விற்கப்படுகிறார்கள் என்பதை அவர்களிற்கும், அவர்கள் பெற்றோர் சகோதரர்களிற்கும் புரியும் வண்ணம் பெண்களிற்காக சேவையாற்ற விரும்பும் உங்களைப்போன்ற இளம் பெண்கள்தான் விளங்கப் படுத்தவேண்டும்.

அதாவது உங்கள் பெண்கள் பகுதியினூடாகவோ அல்லது இங்குள்ள தமிழ்ப் பெண்கள் அமைப்பு வாயிலாகவோ இச் சீதனத்தினைத் தடைசெய்யும் படியான விழிப்புணர்ச்சியுடைய நிகழ்வுகளை எம் மக்கள் முன் நிகழ்த்திக் காட்ட வேண்டும். ஆனால் ஒன்று நீங்கள் மற்றவர்களை திருத்துவதற்காக எடுக்கும் எந்தவொரு செயற்பாடும் யார் மனதையும் புண்படுத்தாமல் இருக்க வேண்டியதுதான் முதல் வெற்றியும் கட்டாயமும் ஆகும்.

**கேள்வி:** *நீங்கள் நடாத்திவரும் வானொலி நிகழ்ச்சி மூலம் பெண்களின் நலனிற்காக என்று எதையாவது விசேடமாக நடைமுறைப்படுத்திக் கொள்கிறீர்களா?*

**பதில்:** நான் நடாத்தும் இவ் தமிழ் ஒலி நிகழ்ச்சி தனிய பெண்களையும் அவர்கள் நலனையும் மட்டும் அக்கறை கொண்டதாக இல்லை. பொதுவாக இங்கு புலம் பெயர்ந்துள்ள மக்களின் நடைமுறை வாழ்க்கை பற்றியவையாகவும் அவர்களிற்கான தேவைகளை, அவர்கள் உணரவேண்டிய சில கடமைகயையும் சார்ந்தே நடை முறைப் படுத்தி வருகிறேன். இவற்றில் ஒரு அங்கமாக பெண்களிற்கான நிகழ்ச்சியும் உண்டு. உதாரணமாக தற்பொழுது தொலைபேசி மூலமாக கனடாவில் வாழும் எம் தமிழ் பெண்களிடம் ஒரு கேள்வியைக் கேட்டு வருகிறேன். அதாவது புலம் பெயர்ந்து இங்கு வாழும் எம் தமிழ்ச் சமுதாயம் சீரற்ற ஒரு பாதையிலேயே தம்மை வளர்த்துக் கொண்டு வருகிறது. இதை நல்வழிப்படுத்த தமிழ்ப் பெண்களாக நாம் இருந்து என்ன செய்யப் போகிறோம் என்பதுதான் அக் கேள்வி. நான் எதிர்பார்த்ததை விட நிறையப் பெண்கள் எமக்குச் சாதகமான பதிலைச் சொல்லி வருகிறார்கள்.

**கேள்வி:** *இறுதியாக உங்களிடம் ஒன்று கேட்க விரும்புகிறோம். வசந்தா நடராஜன் என்ற பெண்ணின் முழுமையான இலட்சியம் என்ன?*

**பதில்:** என்னுடைய இலட்சியம் எது என்பதைவிட, நான் எப்படியான ஒரு பாதையில் என்னை நடைமுறைப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். அதாவது தன்னைத்தான் திருத்தச் சமூகம் தானாகத் திருந்தும் என்று சொல்லுவது போல் முதலில் என்னை நான் பூரணமாக ஆராய்ந்து பார்க்கிறேன்.

நான் செய்வதெல்லாம் சரியா அல்லது அதில் ஏதும் திருத்திக் கொள்ள இருக்கிறதா என்றால் அதை ஏற்று திருத்திக்கொள்கிறேன். இதற்கடுத்தபடி என்குடும்பத்தையும் இதே பார்வையிலேயே வைத்துக்கொள்ள முயற்சி செய்கிறேன். இதன் பின்புதான் எனைச் சூழ உள்ளவர்களை நல்வழிப் படுத்த முனைகிறேன். தற்போதைய என் நிலையில் என்னையும் என் குடும்பத்தையும் தாண்டி சமூகத்தையும் சீர் திருத்தக்கூடிய அகலப்பாதையில் கால் வைத்துள்ளேன்.

இது நல்லமுறையில் நடந்தால் சந்தோஷம். ஏனெனில் நான் எப்போதுமே எங்கிருந்தாலும் ஈழத்துத் தமிழ்ப் பெண்ணாகவே வாழ விரும்புகிறேன். அதேபோல்தான் எம்மவர்கள் எல்லோருமே வாழ வேண்டுமென ஆசைப்படுகிறேன்.

**இவர்களுக்கு முதல் மொழியே அவர்கள் எந்த நாட்டில் பிறந்தவர்களோ அந்நாட்டு மொழிதான். வீட்டில் நாம் இவர்களோடு தமிழ் மொழியைத் தவிர வேறு மொழியில் கதைக்கவே கூடாது.**

**இச் சீதனம் வழங்குதல் என்ற செயலால் எத்தனையோ ஆண்களும் கூட பாதிப்புற்றுக் கொண்டுதான் இருக்கிறார்கள். எனவே இச்சீதனம் கொடுப்பதால் அல்லது வாங்குவதால் எவ்வளவு தூரம் ஆண்பிள்ளைகள் இழிவுபடுத்தப்படுகிறார்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செ.இராகுலன், செ.நிமலன், சுகி திருச்செல்வம், மோகனதாசன் நிமலதாஸ், ந.தனுஷா ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## உங்கள் கைவண்ணம்



சதுரம், வட்டம், முக்கோணம், நீள்சதுரம் இவற்றினால் இப்படியும் உருவங்கள் அமைக்கலாம் என வரைந்து அனுப்பியவர்:

**செல்வன் குகராஜா சாருஷன்**
**வயது: 05**
**இடம்: பொலோனியா, இத்தாலி**





## கவிதை முற்றம்



**செல்வி ஜெஷி தியாகராஜா**
**வயது: 08 (03.04.1990)**
**இடம்: சுவிஸ்**

தாய் மொழி

தாய் சொல்லித் தந்த மொழி
தாலாட்டில் கேட்ட மொழி
சந்திரனை அழைத்த மொழி
சாய்ந்தாடிக் கற்ற மொழி
பாட்டி கதை சொன்ன மொழி
பாடி இன்பம் பெற்ற மொழி
கூடி ஆட உதவும் மொழி
கூட்டுறவைப் பார்க்கும் மொழி
மனம் திறந்து பேசும் மொழி
வாழ்க்கையிலே உதவும் மொழி
எங்கள் தாய் மொழி
மிக இனிய தமிழ் மொழி
இனிய தமிழ் மொழி
அது எங்கள் தாய் மொழி




## குட்டிக் கதை படிப்போம்

# நரியும்; ஒட்டகமும்

ஒரு ஊரில் ஒரு வியாபாரி இருந்தான். ஒரு நாள் வெளியூர் போனால் நிறையப் பணம் சம்பாதிக்கலாமே என்று எண்ணினான். நூறு ஒட்டகங்களின் மீது விலை உயர்ந்த பொருட்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்டான்.

ஒரு காட்டின் வழியே போகும்போது, ஓர் ஒட்டகம் பாரம் தாங்க முடியாமல் தள்ளாடிக் கீழே விழுந்து விட்டது. அதன் மீது ஏற்றியிருந்த பொருட்களை இறக்கி மற்ற ஒட்டகங்களின் மீது ஏற்றினான் வியாபாரி. பிறகு அந்தக் காட்டிலிருந்து விரைவாகப் பயணத்தைத் தொடர்ந்தான்.

வியாபாரி சென்ற சிறிது நேரத்திற்கு எல்லாம் அந்த ஒட்டகத்துக்கு மயக்கம் தெளிந்தது. பிறகு அந்தக் காட்டில் கிடைத்த புல்லைத் தின்று கொண்டு உயிர் வாழ்ந்து வந்தது.

அதே காட்டில் ஒரு சிங்கம் வசித்து வந்தது. அதனிடம் ஒரு சிறுத்தை, நரி, காக்கை மூன்றும் வேலை பார்த்து வந்தன.

ஒரு நாள் சிங்கம் காட்டில் திரிந்து கொண்டிருந்த ஒட்டகத்தைப் பார்த்து விட்டது. ஒட்டகத்தைப் போல் ஒரு விலங்கை அது, அதற்கு முன்பு பார்த்ததேயில்லை. அதைப் பற்றி விவரம் அறிந்து வருமாறு சிங்கம் காக்கையை அனுப்பிற்று.

காக்கை திருப்பி வந்து, 'அரசே, அதற்கு ஒட்டகம் என்று பெயராம்,' என்றது.

சிங்கத்திற்கு ஒட்டகத்தை மிகவும் பிடித்து விட்டது. அதை அழைத்து அதைப் பற்றிய விவரத்தைக் கேட்டது. ஒட்டகத்தின் கதையைக் கேட்டதும் சிங்கத்துக்கு மிகவும் இரக்கம் வந்தது. அதற்கு ஆதரவு அளித்து தன் நண்பனாக ஏற்றுக்கொண்டது. ஒட்டகமும் இராஜ உபசாரங்களில் மகிழ்ந்து சுகமாக வாழ்ந்து மகிழ்ந்தது.

இப்படி சிறிது காலம் கழித்தது. ஒரு நாள் சிங்கம் யானையுடன் சண்டை போட்டுக் காயமடைந்து குகைக்குத் திரும்பி வந்தது. அதற்குப் பிறகு இரை தேடப் போக அதனால் முடியவில்லை. சிங்கமும் பட்டினி, அதனுடன் வாழ்ந்து வந்த குடி விலங்குகளும் பட்டினி. ஒட்டகம் மட்டும் புல்லைத் தின்று ஆனந்தமாக வாழ்ந்து வந்தது.

சிங்கம் தன் சிப்பந்திகளை அனுப்பி விலங்குகள் ஏதாவது தென்படுகிறதா என்று பார்த்து வரச் சொன்னது. எவ்வளவோ தேடியும் ஒரு விலங்காவது கண்ணில் படவில்லை. நரி, காக்கையைப் பார்த்து 'கையில் வெண்ணெய்யை வைத்துக் கொண்டு நெய்க்கு யாராவது அலைவார்களா? கொழுத்த ஒட்டகம் இருக்கவே இருக்கிறது. பல நாட்களுக்கு உணவாகுமே' என்றது. பிறகு நயவஞ்சகத் திட்டம் ஒன்றைத் தயாரித்தது அந்த நரி.



நான்கு விலங்குகளும் சிங்கத்தினிடம் சென்றன. உடனே காக்கை அழுது கொண்டே, 'அரசே, நீங்கள் இல்லாவிடில் இந்த வனம் எப்படி வாழும்? என்னை உணவாக ஏற்று உயிர் பிழையுங்கள்' என்றது. காக்கையைத் தடுத்தது நரி, 'நண்பா, நீ சொல்வது உன் உயர்ந்த குணத்தைக் காட்டுகிறது. ஆனால் உன் இறைச்சியால் மன்னனுக்குக் கால் வயிறு கூட நிரம்பாதே. நீ விலகிக் கொள் மன்னர் என்னை உணவாக ஏற்றுக் கொள்ளட்டும்' என்று வஞ்சகமாகக் கூறியது.

உடனே சிறுத்தையும் தன்னை உணவாக ஏற்கும்படி சிங்கத்திடம் வேண்டியது. இதை எல்லாம் பார்த்த ஒட்டகம் மட்டும் சும்மா இருக்குமா? அதுவும், 'அரசே, என்னை உணவாக ஏற்றுக்கொள்ளுங்கள்,' என்று வேண்டியது.

உடனே சிறிதும் தாமதியாமல் நரியும், சிறுத்தையும் ஒட்டகத்தின் மீது பாய்ந்து அதைக் கொன்றன.

# மயில்



மயில் மிக அழகான பறவை. இதன் முதுகிலிருந்து நீண்டு வளரும் சிறகு தோகை எனப்படும். ஒவ்வொரு சிறகின் நுனியிலும் கறுப்பு, நீலம், பச்சை நிறம் கொண்ட அழகான சிறிய வட்டம் இருக்கும். இதை கண் என்ற சொல்வார்கள்.

மயில் மகிழ்ச்சியடையும் போது இந்த அழகிய தோகையை விசிறி போல விரித்து ஆடும். ஆண் மயிலுக்குத்தான் தோகையுண்டு. பெண் மயிலுக்கு இல்லை.

தலையில் கருமையும் நீலப்பச்சையும் கலந்த அழகிய குஞ்சம் உண்டு. இதன் தலையும் கழுத்தும் பளபளப்பான நீலநிறமாக இருக்கும். உடலில் பச்சை, கறுப்பு இளம்சிவப்பு போன்ற பல நிறங்கள் கலந்து அழகாக அமைந்திருக்கும்.

பெண் மயிலுக்கு இவ்வளவு அழகு இல்லை. முழு உடலும் வெள்ளை நிறமுடைய மயில்களும் சில உண்டு. இந்தியாவே இதன் தாயகம் என்று கூறலாம். மயிலின் அழகுக்காக உலகின் பல நாடுகளில் இதைப் பூங்காவிலும், விலங்குச் சாலைகளிலும் வளர்க்கிறார்கள்.

இந்தியாவில் கோவில்களிலும் வீடுகளிலும் இதை வளர்க்கிறார்கள். பர்மா, ஜப்பான், ஜாவா ஆகிய நாடுகளில் வாழும் ஒருவகை மயிலுக்கு கழுத்தும் மார்பும் பளபளப்பாகக் காணப்படும்.

அடர்ந்த புதர்க்காடுகளிலும், மலைச்சாரல்களிலும் மயில்கள் சிறுகூட்டமாக வாழும். தானியங்கள், பூச்சி பல்லி, சிறுபாம்பு முதலியன மயிலின் உணவு. உயர்ந்த மரக்கிளைகளில் தங்கி இது இரவைக் கழிக்கும்.

இதற்கு மிகக் கூரிய பார்வையுண்டு. பகைவர்கள் வருவதைத் தொலைவிலிருந்தே கண்டு ஓடி ஒளியும். மயில்களால் அதிக உயரம் பறக்க முடியாது. ஆனால் இவை வேகமாக ஓடும். நீண்ட ஓசையிட்டு அகவும். மயில் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும்.

ஒவ்வொரு நாட்டிலும் அங்கேயே சிறப்பாகவாழும். ஒரு சில பறவைகள் வித்தியாசமாக இருக்கும் நாடு, அப் பறவையை தேசியப் பறவையாக அமைக்கும். மயில் இந்தியாவின் தேசியப் பறவையாகும்.

*– சுபன் (தமிழீழம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சாளரம்

# சிலம்பாட்டக் கலை

'ஸ்ஸ்ஸ்...ஈ..ஈ..ஈ..' காற்றில் கம்பைச் சுழற்றும் போது இப்படித்தானிருக்கிறது. வேகத்திற்கு சப்த வடிவம் கொடுத்தமாதிரி இருக்கிறது. பதினைந்து வயதான ஜமீலா என்கிற அந்தச் சிறுபெண் சிலம்பு சுழற்றும்போது.

கம்பை வணங்கிவிட்டு - நான்கு புறமும் மளமளவென்று -சுற்றித் தவ்விக்குதித்து இவ்வளவு வேகத்தில் சுழற்றும் பெண், சிலம்பத்தில் முன்னணியில் வந்ததில் வியப்பில்லை. 35 கிலோ எடையுள்ள பெண்களுக்காக உலக அளவில் நடந்த போட்டியில் முதலிடம் பெற்றிருக்கிறார் மதுரையைச் சேர்ந்த ஜமீலா. தன்னை விட இளையவனான இப்ராஹீம்ஷாவுடன் மாற்றி மாற்றிக் கம்பு சுழற்றும்போது, சாதாரணமான ஒல்லியான உடம்புடனிருக்கும் இவர்களுக்குள்ளிருக்கும் திறமைகள் ஆச்சரியப்படவைக்கின்றன.

சிலம்பாட்டம் - தமிழ்நாட்டின் கிராமங்கள் சிலவற்றில் இன்றும் இருக்கும் இந்த ஆட்டத்தை, இன்று பிரபலப்படுத்திக்கொண்டிருப்பது சினிமா வடிவ்மே. ஆரம்ப காலத்தில் பி.யு சின்னப்பா படங்களில் சிலம்பாடியிருக்கிறார். இவருக்கடுத்து சிலம்புக்கு முக்கியத்துவம் கொடுத்தது எம்.ஜி. ஆர். 'தாய்க்குப் பின் தாரம்', 'மலைக்கள்ளன்' படங்களில் சிலம்பாட்டத்தை ஆடியதற்கு நல்ல வரவேற்பிருந்ததும், மதுரையை ஒட்டியுள்ள மாடக்குளம் அழகிரிசாமியை வரவழைத்துக் கற்றுக் கொண்டதுடன் தொடர்ந்து வந்த 'மாட்டுக்கார வேலன்', 'ரிக்ஷாக்காரன்' என்று பதினைந்துக்கும் மேற்பட்ட படங்களில் சிலம்பு முக்கியத்துவம் பெற்றது. சிவாஜி கணேசனின் 'பட்



டிக்காடா பட்டணமா' போன்ற சில படங்களில் சிலம்பம் இடம் பெற்றிருக்கிறது. ஜெய்சங்கரும் சிலம்பம் கற்று படங்களில் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

'சகலகலாவல்லவன்' படத்தில் கமல்ஹாஸன். ரஜினிகாந்த், சத்தியராஜ், பாக்கியராஜ்- ஏன்? மனோரமா வரை பல படங்களில் சிலம்பு சுற்றியிருக்கிறார்கள். கிராமப்புறக் கதையம்சம் கொண்ட படங்களில் சிலம்பம் தவிர்க்க முடியாததாகி விடுகிறது. இது சினிமாவுக்கும் சிலம்பத்துக்கும் உள்ள தொடர்பு. சிலம்பத்திற்கும் இந்த மண்ணிற்கும் உள்ள தொடர்புதான் என்ன?

சிலம்பக் கலையை உருவாக்கியது தமிழ் இலக்கணத்தை வரையறுத்த அகத்திய முனிவர் என்கிற கருத்து பல சிலம்பாசிரியர்களிடம் உள்ளது. சேர, சோழ, பாண்டியர் காலத்தில் நன்கு வளர்ந்திருக்கிறது. இக்கலை, வீரபாண்டிய கட்ட பொம்மனின் படைவீரர்கள் ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போரிட்ட போது சிலம்பத்தைக் கையாண்டிருக்கின்றனர். ஊமைத்துரை, பகதூர் வெள்ளை, திருநெல்வேலி 'வடலிவிளை' கிராமத்தைச் சேர்ந்த செம்புலிங்கம் என்று பலர் சிலம்பத்தில் அப்போதே தேர்ச்சி பெற்றிருந்தவர்கள்' என்கிறார் அவர்.

மலேசியாவில் சிலம்பக் கலைக்கென்றே தனிக்கழகம் இயங்கி வருகிறது. 1975 வரை மலேசியாவியாவில் ரகசியமான முறையில் கற்றுக் கொடுக்கப்பட்டு வந்த சிலம்பம், 75-ல் மலேசிய அரசால் இந்தியர்களின் தற்காப்புக் கலையாக அங்கீகாரம் பெற்று அரசாங்க கெஜட்டில் பதவி பெற்றது. இன்று மலேசியச் சிலம்பக் கழகத்திற்கு ஏறத்தாழ 120 கிளைகள்.

சிலம்பக் கலையை ஆசான் மூலம் கற்க குறைந்தது இருபது மாதங்களாகிறது. இதை நான்கு கால கட்டங்களாகப் பிரித்திருக்கிறார்கள். நான்கு காலகட்டத்தையும் கடந்த பிறகே சிலம்பாட்ட அரங்கேற்றத்திற்கான நிலையைப் பெற முடியும்.

ஆரம்ப காலத்தில் தலையில் தலைப்பாகையுடன் விளையாடிய சிலம்பாட்டக் கலைக்கென்று இன்று தனி சீருடை. முஷ்டிக்கு, முட்டிக்கைக்கு, தலைக்கு, உடலுக்கு, [illegible] புக்கும் தனிக் கவ[illegible] 'கராத்தே'க்கு அணிகிற மாதிரி தளர்ந்த வெள்ளை உடையும் வந்துவிட்டது.

"சிலம்பாட்டம் என்பது கம்பை வைத்து மட்டும் விளையாடுவதல்ல. சுருள் வாள், ஈட்டி, கட்டாரி, சங்கிலி, மான்கொம்பு வைத்தும் இந்த விளையாட்டை விளையாடலாம். சிலம்பாட்டத்தின் முக்கியத்துவம் அதன் அடி வரிசை. ஏழு காலடி வரிசை ஒவ்வொரு அடிக்கும் தனித்தனிப்பெயருண்டு. அது போல தமிழ்நாட்டில் ஒவ்வொரு பகுதியிலும் சிலம்பத்தில் கர்நாடக வரிசை கரடிகை, புலிக்காவடி, துலுக்காணம், மல்லடம், பனையேறி மல்லு, வீரத் திரவிய வரிசை, அய்யங்கார் வரிசை, ஓரடி வரிசை என்று கம்பைச் சுழற்றுவதில் விதவிதமான முறைகள் உண்டு.

முன்பு போர்ச்சிலம்பம் இருந்தது. அதைப் போருக்கு மட்டும் பயன் படுத்தியிருக்கிறார்கள். இரண்டாவது அலங்காரச் சிலம்பம் திருவிழாக்களிலும் முக்கிய நிகழ்ச்சிகளிலும் கம்பைப் பல விதமாகச் சுழற்றுவது, தீச்சிலம்பம், இரவு நேரத்தில் சிலம்புக் கம்புடன் நெருப்புத் துணியை இணைத்துச் சுழற்றுவது, இப்போது 'போட்டிச் சிலம்பம்' என்று புதுமுறையும் உருவாகியிருக்கிறது" என்று விளக்கமாகச் சொல்கிற மதுரை மாவட்டச் சிலம்பக் கழகப் பயிற்சியாளரான கே.ஷேக்உஸ்மான், முப்பது வருடங்களுக்கு மேலாக சிலம்புப் பயிற்சியிலிருக்கிற இவர் தனது குழந்தைகளையும் சிலம்பாட்டத்தில் இறக்கியிருக்கிறார். மொஸ்கோவிலிருந்து கூட சில மாணவர்கள் வந்து இவரிடம் பயிற்சி பெற்றுக்கொண்டு போயிருக்கிறார்கள்.

எம்.ஜி. ஆருக்குச் சிலம்பாட்டத்தில் ஆர்வம் இருந்த மாதிரி, அவர் அமைச்சரவையில் இருந்த ராகவானந்தத்திற்கும் ஆர்வம். நன்றாகச் சிலம்பு சுற்றும் அவரும் இணைந்து முயற்சியெடுத்ததின் பேரில் 80 ல் 'தமிழ்நாடு சிலம்பாட்டக் கழகம்' உருவானது. அதன்பிறகு மாநில அளவில் சிலம்பாட்டப் போட்டிகள் நடத்தப்பட்டன. திருவையாறு, திருச்சி, புதுக்கோட்டை, நாகர்கோயில், மதுரை என்று பல இடங்களில் சிலம்பப் போட்டிகள் நடந்தாலும் 90-க்குப் பிறகு போட்டிகள் நடக்கவில்லை. 80க்குப் பிறகு அகில இந்திய அளவிலும், பிறகு உலக அளவிலும் சிலம்பாட்டக் கழகம் துவக்கப்பட்டிருக்கிறது. உலகச் சிலம்பாட்டக் கழகத்தின் தலைமைப் பீடம் இப்போது இருப்பது மலேசியாவில், அதிலிருப்பவர்கள் மலேசியத் தமிழர்கள்.

சிலம்பாட்டப் போட்டியில் முதல் மூன்று நிமிஷங்களில் சிலம்பைச் சுழற்றுவதில் தனித் திறமையைக் காண்பிக்க வேண்டும் முழுச்சுற்று, சோடாங்கிச் சுற்று, தலைச்சுற்று, வட்டச் சுற்று, வெளிச்சுற்று எல்லாவற்றையும் முடித்து, முன் சரணம். பின் சரணம் அனைத்தையும் செய்து முடித்தபின் அடுத்து சண்டை.

கழுத்திற்கு மேல் கம்பால் தொடாமல், மூன்று நிமிஷங்களில் 24 அடி விட்டமுள்ள வட்டத்திற்குள் இந்தச் சண்டை நடக்க வேண்டும். வெளியே வந்தால், கம்பு தவறினால், அடி பட்டால் 'அவுட்'. இம்மாதிரி விதிமுறைகளுடன் நடக்கின்றன சிலம்பப்போட்டிகள்.

"கம்புடன் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல சிலம்பம். கராத்தேயைக்காட்டிலும் சிலம்பத்தில் வெறுங்கையில் செய்யும் குத்து வரிசைகளிருக்கின்றன. இரண்டிற்கும் கால் அடியெடுத்து வைக்கும் முறை ஒன்றே. இவ்வளவு அருமையான கலையை வைத்துக்கொண்டிருந்த சிலம்ப வீரர்கள் பலர், இங்கு சரியான ஆதரவில்லாததால் சவ ஊர்வலத்திற்கு முன்பு சிலம்பாட்டத்தை ஆடிக் கொண்டு போனார்கள். அந்த அளவுக்குப் போன நிலையை 80-க்குப் பிறகு மாற்றியிருக்கிறோம்." என்கிறார் அகில இந்திய சிலம்பாட்டக்கழக தலைவரான பி.கே முத்துராமலிங்கம்

உடல்கூறுநிபுணர்கள் சொல்கிற கருத்துப்படி சிலம்பாட்டப் பயிற்சி உடலைச் சமநிலையில் வைத்துக்கொள்ள உதவுகிறது. தசைகளின் சக்தியை அதிகரிக்கிறது. இரத்த ஓட்டத்தைச் செம்மைப்படுத்துகிறது.

தமிழர்களின் ஆரோக்கியத்தோடும், சுறுசுறுப்போடும் சம்பந்தப்பட்ட சிலம்பக் கலை இன்று தமிழர்களிடமிருந்து பெருமளவில் அந்நியப்பட்டு நிற்கிறது. நம்மிடம் பெரும் சத்து மாதிரி இருந்த கலை பிற நாடுகளுக்குப் போய் பலவிதமாக உருமாறி நிற்க... 'ஆஹ்...ஊஹ்...' என்கிற சத்தங்களுடன் கராத்தே சத்தங்களை எழுப்பிக் காற்றில் கைவீசிக்கொண்டிருக்கிறார்கள் இங்குள்ள இளைஞர்கள்.

எப்படி வந்தது இந்த இடைவெளி?

**தமிழ் ஈழத்தில் சிலம்பாட்டக் கலையின் நிலை எப்படி இருக்கிறது! இது பற்றிய விபரம் தெரிந்தவர்கள் எழுதி அனுப்பினால் பிரசுரிப்போம் - ஆர்**

---

## நாற்று
### இளம் ஆக்கங்கள்

# உன்னையே எண்ணிப்பார்!

ஒளியாகி
சுடர்விட்ட எம்வாழ்வு!
பிள்ளையார் கோவில்
சிதறு தேங்காயாகி
சின்னாபின்னமாகி
இன்று........?

★★★

அன்றைய
அரசியல்வாதிகள்...
எச்சில் சோற்றுக்காய்
இழைத்த துரோகம்!
இன்று நாம் கொடுக்கும்
விலை...
இளசுகளின் உயிர்க்கொடை!

★★★

பள்ளம்
சிலர் உள்ளமாய்
இன்றும் இருப்பதால்
நாடற்றவராய் நாம்...?
சூறாவளி
துரும்புபோல்....
நாடெல்லாம் சுற்றுகிறோம்!

★★★

புகழுக்கும்...
பணத்திற்கும்....
குடைபிடிக்கும் வீணர்களால்
குற்றுயிரில் கிடக்கும்
என் உறவுகளின்
அவலம்...!
உணராமல்
ஏனோ
எனக்கென்று
தனக்காக வாழ்கிறார்...
எதிர்த்து
குரல் கொடுத்தால்
எனக்கும் விசரென்பார்?

★★★

விட்டில் பூச்சியும்.....
வெளிச்சம் பெறவேதான்
தன்னுயிரை மாய்க்கிறது!
நீயோ!
எதற்கும் உதவாமல்
இறக்கும்வரை இருக்கின்றாய்...

★★★

நறுமணம்
தந்துவிட்டே
மலர்கூட வாடுகிறது....
உன்னையே
எண்ணிப்பார்...!
இறந்தும் உயிர்வாழ்தல்
வேண்டின்
உனை ஈன்ற தந்தைக்கும்
தாய்க்கும் எதைச்
செய்யப்போகிறாய்?

— மட்டுவில் ஞானக்குமார் —
ஜேர்மனி

# என்கவிதை உன் சிரசேறுக!

நான் உன்னை
நேசிக்கின்றேன்...
கவிதா பிரசவத்தின்
ஊற்றுக்குள்ளே நான் இன்னும்
ஜீவிக்கின்றேன்...

★★★

இயற்கை வர்ணனை பற்றி
இப்போது நினைவில்லை!
காதலைப் பற்றியும்
கவிதை வரவில்லை!
உணர்வுகள் துடிக்கும்
உள்ளங்களை நினைக்கையில்
எனக்கு
கவிதை வருவதே
விடுதலை வேண்டியே!
ஆன்மாவைத் தட்டிடும்
அவலக்குரல்
மத்தியில்
பூபாள ராகங்களை
என்னால் மீட்ட முடியவில்லை...

★★★

என் இனத்தின் வேதனைத்தீயை
விழிப்புணர்வற்று
தூங்கும் உன்
செவிகளில் பறைஅடித்துப்
பார்க்கிறேன்?
இருந்தும் நான் தோற்கிறேன்!
என்
உணர்வு உன் செவி ஏறும்வரை
உரக்கக்கத்துவேன்!
என்
மண்ணில் நான்
தடம் பதிக்கும்வரை
எனக்குள் பிறப்பவை
என் இனத்தை
சூடேற்றி உசுப்பிவிடும்
விடுதலை கானமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சி.டி இசையுலகின் தந்தை

**திரு.இ.பார்த்தசாரதி தமிழ் திரை இசையில் முன்னணி இசையமைப்பாளராக இருந்தவர். பிரபல பின்னணிப் பாடகியான எஸ். ஜானகியையும் தமிழ் இசையில் சி.டி. யையும் அறிமுகப் படுத்தியவரும் இவர்தான். 30-இற்கு மேற்பட்ட படங்களுக்கு இசையமைத்த இவர் தற்போது அமெரிக்காவில் ஒரு தொழிலதிபராக இருக்கிறார். அவர் தெரிவு செய்த தொழிற்துறை கூட, இசைத் துறைதான். ஆம்! 'ஒறியண்டல் ரெக்கோட்ஸ்' நிறுவனத்தின் அதிபர் இவர்தான்.**

**தனது வியாபார விடயமாக அண்மையில் பாரிசுக்கு வந்திருந்த பார்த்தசாரதி அவர்கள் ஈழ முரசிற்கும் வருகைதந்திருந்தார். வாசகர்களுக்காக அவர் எம்மிடம் பகிர்ந்து கொண்டவை இதோ!**



**கேள்வி: இசையமைப்புத் துறைக்கான உங்களது பிரவேசம் பற்றி வாசகர்களுடன் கொஞ்சம் பகிருங்களேன்?**

**பதில்:** நான் 12 வருடங்களாக கர்நாடக சங்கீதத்தையும், 8வருடங்களாக மேற்கத்தேய சங்கீதத்தினையும், ஆர்மோனியத்தையும் முறைப்படி கற்ற பின்னர், 1950-ம் ஆண்டு நாடக இசைத்துறைக்குள் நுழைந்தேன். அந்த வேளை திரை இசைத் துறையில் ஜிராமனாதன் முக்கியமானவராகிருந்த காலகட்டம். 1953-ம் ஆண்டு அவரது இசையில் 'ஆரவல்லி' என்ற திரைப் படம் 'மார்டன்' தியேட்டரில் தயாராகிக் கொண்டிருந்த வேளை, ஆங்கிலப்பாடல் மெட்டு ஒன்றுக்கு இசையமைப்பதில் அவருக்கு சில சிக்கல்கள் எழுந்ததால் ரி.எஸ். பாலையா என்ற நடிகர் என்னை அவருக்கு அறிமுகப்படுத்தினார்.

நானும் அந்த இசையினை சுமார் அரைமணித்தியாலத்தில் அமைத்துக் கொடுத்துவிட்டதால், ராமநாதன் அவர்கள் என்னை வெகுவாகப் பாராட்டினார். இச்சம்பவமே என்னை திரை இசைத்துறைக்குள் நுழையவைத்தது. அன்று தொடக்கம் சுமார் 30 படங்களுக்கு இசையமைத்தேன். இவற்றில் தமிழ், மலையாளம், தெலுங்கு, சிங்கள படங்களும் அடங்கும்.

**கேள்வி: சில பிரபலமான பாடல்கள் உங்கள் இசையமைப்பில் உருவாகின. அப்படியிருந்தும் தமிழ் திரை உலகில் நிலையாக உங்களால் நிற்க முடியாது போனதேன்?**

**பதில்:** அப்போதைய திரை உலகு எம்ஜி.ஆர், சிவாஜி ஆகிய நடிகர்களின் ஆளுமைக்குள் இருந்தது. அவர்களை எல்லோரும் 'அண்ணே- அண்ணே' என மிகவும் பந்தாவாக அழைக்க வேண்டும். அந்த விடயத்தில் எனக்கு உடன் பாடு கிடையாததால், என்னை அவர்கள் ஒரு திமிர் பிடித்தவன் என்ற ரீதியில் நோக்கினர். நானும் எனது சுய கௌரவ கொள்கையில் விட்டுக் கொடுக்காததால் தமது படங்களுக்கு என்னை அவர்கள் சிபார்சு செய்வதில்லை. அதாவது அவர்கள் வரவேற்புக் கொடுக்கவில்லை. என்னை வரவேற்றவர்கள் எஸ்.எஸ். ராஜேந்திரன், விஜயகுமார் போன்ற நடிகர்களே.

**கேள்வி: எம்.ஜி.ஆர், சிவாஜி நடிகர்களாக இருந்தவர்கள். அவர்கள் எப்படி இசையமைப்பில் கட்டுப்பாடு விதித்தார்கள்?**

**பதில்:** அப்போதவர்களுக்கு இருந்த புகழ் காரணமாக தம்முடைய படங்களில் யார் யார் பங்கு பெற வேண்டும் என்ற கட்டுப்பாடுகளை தயாரிப்பாளர்களுக்கு விதிப்பவர்களும் அவர்கள் தான். அதாவது அவர்களுடைய அனுமதியின்றி யாரும் அவர்களுடைய படங்களுக்குள் நுழைய முடியாது.

**கேள்வி: உங்களுக்கு வெற்றியை கொடுத்த திரைப்படம் எது?**

**பதில்:** எனக்கு மிக புகழைக் கொடுத்தது கலைஞர் கருணாநிதியின் வசனத்திலே உருவான 'அவுன் பித்தனா' என்ற திரைப்படம். பாடல்கள் கண்ணதாசன் அவர்கள் எழுதினார். அதில் வரும் 'கிழக்கு வெளுத்ததடி கீழ் வானம் சிவந்ததடி....' என்ற பாடல் 1967-ம் ஆண்டு ஆட்சியைப் பிடித்த தி.மு.க.வின் பிரச்சாரத்திற்கு பெரிதும் துணை புரிந்தது.

**கேள்வி: திரை இசை உலகில் பிரபலமான பின்னணிப் பாடகியான எஸ்.ஜானகி அவர்களைத் தமிழ் திரை உலகிற்கு அறிமுகப் படுத்தியது நீங்கள் தானே?**

**பதில்:** ஆம்.... மலையாள திரை இசை உலகிற்கு ஜானகி முதலில் நுழைந்த போதும் அங்கு அவரால் புகழ் பெற முடியவில்லை. அந்த நேரத்தில் (1957-ம் ஆண்டு) எனது இசையமைப்பில் உருவான படத்திற்கு கூட ஜானகியை பாடவைக்கத் தயங்கினார்கள் ஆயினும் நான் ஜானகியைப் போடுங்கள் என முடிவாகக் கூறியதால் அவருக்கு முதன் முதலாக தமிழில் பாடச் சந்தர்ப்பம் கிடைத்தது.

**கேள்வி: தமிழகத்தில் ஆரம்பமான உங்கள் இசைப்பயணம் இன்று உங்களை அமெரிக்காவில் ஒரு இசைத்துறைத் தொழிலதிபராக உயர்த்தியுள்ளது. இச்சந்தர்ப்பம் எவ்வாறு நேர்ந்தது?...**

**பதில்:** அமெரிக்க கல்லூரி ஒன்றில் கர்நாடக இசை கற்பிப்பதற்கான தேர்வு ஒன்ற பம்பாயில் நடைபெற்றது. நான் அத் தேர்விலே சித்தியடைந்ததால் குடும்பத்துடன் அமெரிக்கா செல்லக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. அமெரிக்காவில் இருந்த 'இசைப் பதிவு தொழில் நுட்பம்' என்னைப் பிரமிக்க வைத்ததால் நான் அத் துறையில் பயில ஆரம்பித்தேன். காலையில் எனது கல்லூரியில் விரிவுரையாளராகவும், மாலையில் இசைப் பதிவு கல்லூரியில் மாணவனாகவும் மாறிய எனக்கு இறுதியில் வெற்றி கிடைத்தது. இசைப் பதிவுத் துறை கற்கை நெறியில் முதல் தேர்வு பெற்ற ஒரேயொரு இந்தியன் என்ற புகழையும் எனக்குக் கொடுத்தது.

**கேள்வி: 'ஒறியண்டல் ரெக்கோட்' நிறுவனத்தை எப்போது ஆரம்பித்தீர்கள்?**

**பதில்:** இசைப் பதிவுத்துறையில் நான் பெற்ற சிறப்பான கல்வியினால் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் இசைத் துறை வட்டப் பொறுப்பாளராக 1972-ம் ஆண்டு தெரிவானேன். அப்போது ஐ.நா.வில் 120 நாடுகளில் அங்கம் வகித்தன. அந்த நாடுகளிலிருந்து பல வேட்பாளர்கள் வந்த போதிலும் எனக்கு இந்த கௌரவம் கிடைத்தது.

76-ம் ஆண்டுவரை அப் பதவியில் இருந்தேன்.

அதன் பிறகு 77-ம் ஆண்டு ஜனவரி மாதம் 'ஒரியண்டல்' நிறுவனத்தை ஆரம்பித்தேன். இதிலும் ஒரு சுவையான அனுபவம் உண்டு. எனது வீட்டிற்கு அடுத்ததாக 'அருள்வாக்கு' சொல்லும் சீனர் ஒருவரது வீடு இருந்தது. நான் எனது பியானோ மூலம் கர்நாடக சங்கீத மெட்டுக்களை வாசிப்பதை அவர் நாள்தோறும் இரசித்து வருவார். திடீரென எனது வீட்டிற்கு ஒரு நாள் வந்த அவர், சிறிய வெள்ளிப்பதக்கத்தை எனது கையில் திணித்துவிட்டு இசைப்பதிவுத் துறை நிறுவனமொன்றினை ஆரம்பிக்குமாறு சொன்னதுடன் அதற்கு 'ஒறியண்டல்' என பெயரைச் சூட்டுமாறும் கேட்டுக் கொண்டார். அவரது யோசனைப்படியே நான் 'ஒறியண்டல்' நிறுவனத்தை என்ரை பேரில் ஆரம்பித்தேன்.

**கேள்வி: ஒறியண்டல் நிறுவனத்திற்கு சிறப்பான நோக்கம் ஏதாவது உண்டா?**

**பதில்:** ஆம்... சாஸ்திரிய சங்கீதத்தை உலகளாவிய ரீதியில் பரப்ப வேண்டும் என்பதே இதன் நோக்கம்.

**கேள்வி: ஒறியண்டல் நிறுவனத்துடன் உங்களுக்கு வேறென்ன நிறுவனங்கள் உண்டு?**

**பதில்:** இளையராஜாவிற்கு சொந்தமான சென்னை 'எக்கோ ரெக்கோடிங்' நிறுவனத்தையும் நான் கொள்வனவு செய்து அதே பெயரில் நடாத்தி வருகிறேன். அத்துடன் பம்பாயில் 'பாரத் ரெக்கோட்ஸ்' சென்னையில் 'பீற் கசெற்' நிறுவனமும் எனக்குச் சொந்தமானதுதான். இந்தியாவிலேயே முதன்முதலாக சி.டி. இசைத்தட்டினை ஆறிமுகப்படுத்தியது எனது நிறுவனம் (1986-ம் ஆண்டு) என்ற பெருமையும் உண்டு.

**கேள்வி: நீங்கள் ஒரு பெரிய தொழிலதிபராக இருந்த போதிலும் தமிழ்மொழி மீது கொண்ட பற்றுதலால் 'இசையில் எழுத்துக்கள்' என்ற இசைத்தட்டினை வெளியிட்டுள்ளீர்கள் அது பற்றி கொஞ்சம் கூற முடியுமா?**

**பதில்:** இந்த 'இந்த இசையில் எழுத்துக்கள்' ஒரு பெரும் கடினமான முயற்சியூடாக வெளிவந்ததாகும். இதற்காக நான் நான்கு வருடங்கள் பாடுபட்டேன். தமிழிலுள்ள 247 எழுத்துக்களிலும் சொல்லாக்கம் செய்த பாடல்கள் புனையப்

(தொடர்ச்சி 20-ம் பக்கம்)

## வீரமணி ஐயர் என்றாலே நடுக்கம் வரும்

*தமிழகத்திலே இருக்கும் இசைக் கலைஞர்களை நடுங்க வைக்கும் ஒரு ஞானம் மிகுந்த கலைஞர் ஒருவரென்றால் அது ஈழத்தின் வீரமணி ஐயர் ஒருவரேதான். அவருக்கு இந்த ஞானம் எப்படி வந்ததென்றே என்னால் மட்டுமல்ல ஏனையோராலும் இன்னமும் தான் விளங்கிக்கொள்ள முடியாதுள்ளது. அவர் தமிழகத்திலிருந்து ஈழத்திற்கு திரும்ப முயன்ற வேளை எத்தனையோ கலைஞர்கள் தமிழகத்திலேயே தங்கிவிடும்படி கெஞ்சினார்கள். ஆனாலும் அவர் ஈழத்திற்கே திரும்பிவிட்டார்.*

*ஆனாலும் தமிழகத்திலிருந்து கொழும்பிற்கோ, அன்றி யாழ்ப்பாணத்திற்கோ செல்லும் கலைஞர்கள் வீரமணி ஐயரைச் சந்தித்து ஆசி பெற்று வரத் தவறுவதேயில்லை.*

*இவ்வாறு செவ்வியின் ஒரு கட்டத்தில் உணர்வு பூர்வமாகக் கூறினார்.*

**அந்தக் காலத்தில் இசையமைப்பு என்பது ஒரு கடினமான கலை. எல்லாமே சுய முயற்சியில் உருவாகும். ஆனால் இந்தக் காலத்தில் எல்லாமே டெக்னிக் மயமாகிவிட்டது. இதே போக்கில் போனால் இசைக்கலைஞர்கள் நலிவு பெற்று விடுவார்கள் என்பது உண்மைதான்.**

*இந்தியாவிலேயே முதன்முதலாக சி.டி. இசைத்தட்டுக்களை 1986—ம் ஆண்டு அறிமுகப்படுத்திய இவர் தமிழிசை உலகிற்கு மறு ஆண்டிலேயே சி.டி. யை அறிமுகப்படுத்தினார். இளையராஜாவின் இசையமைப்பில் வெளியான பாடல் தொகுப்பே தமிழில் முதல் முதலில் வந்த சி.டி. யாகும்.*

## கண்ணதாசன் ஏற்ற கருத்து

**எனக்கு புகழ் தேடித்தந்த பாடல்களில் 'இறைவன் இருக்கின்றானா... மனிதன் கேட்கிறான்' என்ற பாடலும் ஒன்று. (படம்: அவன் பித்தனா?) கவிஞர் கண்ணதாசன் மேற் கூறியவாறு பல்லவியை எழுதியபோது, 'கவிஞரே! இறைவன் இருக்கின்றானா என்று மனிதன் கேட்டால் மனிதன் இருக்கின்றானா என்று இறைவனும் கேட்பான் தானே?'என நான் வினாவினேன்.**

**அதைக் கேட்ட கண்ணதாசன், சிரித்தபடியே உங்கள் எண்ணம் போலவே அடுத்த கட்டத்தை எழுதி விடுகிறேன் என கூறிவிட்டு மனிதன் இருக்கின்றானா இறைவன் கேட்கின்றான்? என்ற அடியை எழுதவும் தொடங்கிவிட்டார். குழந்தை உள்ளம் படைத்த ஒரு அற்புதமான கவியரசர் அவர்.**

**இது பார்த்தசாரதி அவர்கள் செவ்வியின் ஒரு கட்டத்தில் நினைவு கூர்ந்த சம்பவம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு கதை

# கோப்பை

மூடியைத் திறந்தும் ஆவி பக்கென்று வந்து கையில் அடித்தது. ஒரு கணம் துடித்துப் போனேன்....... ல் மிசின் என்று என்னையும் அறியாமல் ஒரு முறை கத்திவிட்டேன். பக்கத்தில் நின்ற ஸ்பானிய நண்பன், ஆ..! அது அந்த மிசினா' என்று முறிந்த ஆங்கிலத்தில் நான் சொன்ன வார்த்தையையும் திருப்பிச் சொல்லிக்கேட்டான். வலியையும் மறந்து எனக்குச் சிரிப்பு வந்தது. இரண்டுபேரும் விழுந்து விழுந்து சிரித்தோம். அவனுக்கு எனது மொழியில் இருந்த தூஷண வார்த்தைகள் அத்தனையும் அத்துபடியாகத் தெரிந்திருந்தது. நேற்று நான் வேலைக்கு வந்து சேர்ந்ததுமே, எல்லாவற்றையும் சொல்லிச் சரிபார்த்துக் கொண்டான். யாரோ என் கண்ணுக்குத்தெரியாத எனக்குமுன் வேலை செய்த முன்னாள் என்நாட்டுக் குடிமகனும், இந்நாள் 'டமில் கனேடியனுமான' ஒரு பிரகிருதி சொல்லிக் கொடுத்ததாகச் சொன்னான். கொலை பண்ணி ஒரு பெயரையும் சொல்லி, 'தெரியுமா?' என்றான்.

யாரை என்று நினைப்பது? புருவத்தைச் சுருக்கி 'இல்லை' என்றேன். ஏதோ டமிலை இந்தளவாவது வாழவைக்கின்றார்கள் என்று புறுபுறுத்துக் கொண்டே வேலையில் இறங்கிவிட்டேன்.

வேலை என்றால் கையை ஒருநிமிடமும் ஓயவைக்க முடியாது. கோப்பைகள் வந்து குவிந்து கொண்டேயிருக்கும். சின்னதும் பெரிதும் குஞ்சும் குருமனுமாக ஏகப்பட்ட தினுசுகளில் வரும். அதைவிட கறண்டி, கத்தி, பிச்சுவா என்று உயிரை வாங்கும்.

கொஞ்சம் இசகுபிசகாகக் கையைவைத்தால் போச்சு இரத்தத்தைக் கண்ணாரக் கண்டு களிச்சிருக்கலாம். கோப்பையில் உள்ள மிச்சச்சொச்சம் கச்சவடங்களைக் குப்பையில் தட்டிக் கொட்டிவிட்டு, அந்தத் தட்டத்தில் தினுசுதினுசாக அடுக்கி மிசினுக்குள் தள்ளி மூடவேண்டும். மிசின் வேலைசெய்யும் நேரத்தில் மற்றக் கூடையைத் தயார் செய்ய வேண்டும். மிசின் நின்றதும், உள்ளிருக்கும் கூடையை மறைமுகமாக ஆவிபடாமல் சுடுதண்ணீர் ஊற்றாமல் வெளியில் எடுத்து சூட்டோடு சூடாக சமையல்காரன் முன் அடுக்க வேண்டும். அதைவிட, குப்பை கொட்ட வேண்டும். கூட்ட வேண்டும், அடைப்பு எடுக்கவேண்டும் வெங்காயம் உருளைக்கிழங்கு, வெட்டவேண்டும். இன்னும் பல சில்லறை வேலைகளும் உண்டு. ஆனால் வேலைகேட்டு வந்த அன்று கோப்பை கழுவுவதில் 'டிஷ் வோஷிங்' முன் அனுபவம் உண்டா என்றுமட்டும் மனேஜர் கேட்டான். முப்பத்தைந்து வருடமாகக் கோப்பை கழுவித்தான் சாப்பிடுகிறேன் என்று சொல்ல வாயெடுத்தவன், வேலை முக்கியம் என்று சொல்லி சமாளித்துக் கொண்டேன். பின்னர் அவனால் எனக்குத் தரப்பட்ட அறிவுறுத்தல்களில் ஏதோ நான் கோப்பை கழுவப் பிறந்தவள் என்ற நினைப்பை எனக்கு ஏற்படுத்தி விட்டிருந்தது.

சிறுவயதில் கோப்பை கழுவுவதென்பது ஒரு கௌரவப் பிரச்சனையாக இருந்தது எனக்கு. அண்ணனுக்கு மட்டும் கோப்பையைக் கழுவிக் கொண்டு வாடா தம்பி என்று சொல்லும் போது சீ என்று வெறுத்தே போகும். அதைவிட தங்கச்சி இருக்கிறாளே தொட்டாச்சிணுங்கி. அண்ணனுக்கு மட்டும் வலு பவ்வியமாக கழுவிக் கொடுப்பாள். நான் கேட்டால் மட்டும் முறைத்துப் பார்ப்பாள். கையை ஓங்கினால் போதும்... இல்லாத பொல்லாததெல்லாம் சொல்லி அண்ணனிடம் அடிவாங்க வைத்து விடுவாள். கோப்பை கழுவி சாப்பிட வேண்டும் என்பதற்காகவே பசிக்கவில்லை என்று சொல்லிப் படுத்த நாட்களும் உண்டு. பாவம் அம்மா முடக்குவாதத்தோடு சிரமப்படாலும் இருக்கும் வரைக்கும் என் விருப்பம் அறிந்தே நடந்துகொண்டாள். இப்படி ஆகுமென்று அப்போதே தெரிந்திருந்தால், பாவம்... அம்மாவைக் கஸ்ரப்படுத்தி இருக்க மாட்டேன். வீட்டில் என்ன? ஊரிலுள்ள கோப்பைகளையே கழுவிக் கொடுத்திருப்பேன்.

முதலில் எங்கள் வீட்டில் இருந்தது தகரக் கோப்பைகள்தான். வெள்ளை வெளேரென்று மக்குப் பூசி கரைகளில் வேலைப்பாடும் கொண்டது. பின்னாளில் பட்டணத்துக்குப் போய் பீங்கான் வாங்கி வந்ததும் தகரக் கோப்பைகளில் ஒன்றை நாய்க்கு ஒதுக்கிவிட்டார் அம்மா. மற்றது எப்போதாவது வந்து வேலை செய்து விட்டுப்போகும் முனியாண்டிக்கு ஒதுக்கியாயிற்று. அடுத்தது துணி தோய்ப்பவருக்கும், முடி வெட்டுபவருக்கும் பொதுவில் ஒதுக்கப்பட்டது. இரண்டும் குசினித் தாழ்வாரத்தில் எதிரும் புதிருமாகச் செருகப் பட்டிருக்கும். வீட்டில் யாரும் அதைத் தீண்ட மாட்டார்கள். சம்பந்தப்பட்ட பேர்வழிகள் யாராவது வந்தால் அவர்களே எடுத்துக் கழுவிச் சாப்பிட்டு விட்டு பின் கழுவி இருந்த இடத்தில் வைத்துவிடவேண்டும் என்பது அம்மாவின் கண்டிப்பான உத்தரவு. இன்னொன்று தங்கச்சி மூலையில் இருக்கும்போது அவளுக்குச் சாப்பாடு போட்டுக் கொடுப்பது. அது எப்போதும் பறணுக்கு மேல் உட்கார்ந்திருக்கும். அவளுக்கு என்மேல் இருக்கும் சந்தேகத்தில் முனியாண்டியுடைய கோப்பையை மாற்றி வைத்துவிட்டேன் என்று ஒரு நாள் அண்ணனிடம் மூட்டிக் கொடுத்து வாங்கிய அடி ஜென்மத்திற்கும் மறக்கமுடியாது.


'என்ன தூக்கமா..?' என்றான், ஸ்பானிய நண்பன். நினைவை அறுத்துக்கொண்டு பார்த்தேன். ஏகப்பட்ட கோப்பைகள் குவிந்தது கிடந்தன.

பயப்படாதே நானும் உதவி பண்ணுகிறேன் என்று முறுவலித்தான் அவன். உண்மையில் இங்கு வரும் வாடிக்கையாளர் தொகைக்கு இரண்டு பேரைக் கோப்பை கழுவப் போட்டாலுங்கூடக் காணாது. ஒரு ஆளைப் போட்டுச் சமாளிக்க முயல்கிறான் மனேஜர் தடியன். எல்லோரும் நன்றாக வேலை வாங்கப் பழகி விட்டான்கள் இப்போது. என்ன செய்வது. வேறுவழி! என்று சொல்லி என்னைப் பார்த்தான். நான் தோளைக் குலுக்கி விட்டு முகட்டைப் பார்த்தேன். அவன் மௌனமாகிவிட்டான். பாவம் அவனுக்கும் வேலை அதிகந்தான். வாடிக்கையாளர் மேசையில் இருக்கும் கோப்பைகளைக் கொண்டுவந்து மிசினுக்குப் பக்கத்தில் வைக்க வேண்டும். மேசைகள் துடைக்க வேண்டும். இன்னும் எத்தனையோ சில்லறை வேலைகள். இருந்தும் எனக்கு உதவுகிறேன் என்று வந்து நிற்கும் அவனைப் பார்த்ததும் இதயம் கனத்தது, 'தேசம், இனம், மொழி, மதம் எதுவுமே உண்மையான மனிதனைக் குறுக்கிவிடாது' என்ற வாசகம் ஞாபகத்திற்கு வந்தது.

எல்லாவற்றையும் தட்டிக்கொட்டி வேலையை முடித்துவிட்டு வீட்டுக்கு வரத் தாமதமாகி விட்டிருந்தது. ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு என்று முணுமுணுத்தபடியே கதவைத் திறந்தேன். மனைவி ரிவியுடன் மல்லுக் கட்டிக்கொண்டிருந்தாள். தமிழ்ப் படம் போட்டிருப்பாள். எல்லாம் கலங்கலாக இருந்திருக்கும். எதுக்கு வம்பு என்று வாயை மூடிக்கொண்டேன். 'ஏனப்பா.. இவ்வளவு நேரம்' என்றாள் அவளே. 'கடையில் நல்ல வியாபாரம். கட்ட நேரமாகிவிட்டதென்றேன். ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டு, சரி, சரி மேலைக்கழுவிக்கொண்டு வாங்கோ, சாப்பிட!' என்று விட்டு ரிவிக்குள் மறுபடியும் புகுந்து கொண்டாள். நான் குளித்து விட்டு வரும்போது 'சாப்பாடு போட்டிருக்கு, பிள்ளை அழுகிறான்' என்று விட்டுப் போய்விட்டாள். சாப்பிட்டு முடிந்ததும் எனக்குள் பெரிய போராட்டமே உருக்கொண்டது. சாப்பிட்ட கோப்பையைக் கழுவுவதா? வேண்டாமா? என்று நீண்ட நேரம் அப்படியே இருந்தேன். பின் எழுந்து கோப்பையை அப்படியே வைத்துவிட்டு கையைக் கழுவி விட்டு, படுக்கை அறைக்குப் போனேன். மனைவி அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள்.

: நன்றி: காலம்

குமார் மூர்த்தி



(19-ம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழ் சி.டி...

பட்டது. ஆரம்பத்தில் தமிழகத்தின் புகழ்பெற்ற பாடலாசிரியர்கள் கூட என் முயற்சிக்கு ஒத்துழைக்க மறுத்தனர். எப்படி தமிழ் எழுத்துக்கள் எல்லாவற்றிலும் சொல்லாக்கம் செய்வதெனக் கூறி முடியாதென மறுத்துவிட்டனர். ஆயினும் கல்லூரி ஆசிரியர்கள், எஸ்.பி.பாலசுப்பிரமணியம் ஆகியோர்களின் ஒத்துழைப்புடன் இம் முயற்சி சாத்தியமானது. இதனைத் தொடர்ந்து குஜராத்தி, ஹிந்தி, மலையாளம், தெலுங்கு, கன்னடம், பஞ்சாபி ஆகிய மொழிகளிலும் இந்த இசையில் எழுத்துக்கள் வந்துள்ளது. எனது மொழிக்காரர்கள் எனக்குத் தந்த ஆதரவினை விட, குஜராத் மொழிக்காரர்கள் தந்த ஆதரவினை மறுக்க முடியாது.

**கேள்வி: ஒரு இசையமைப்பாளர்கள் என்ற ரீதியில் தமிழ் திரை இசை உலகின் தற்போதைய நிலை பற்றி?**

**பதில்:** எல்லாம் கணனி தொழில்நுட்பமயமாக வந்துவிட்டது. பல இசைக் கலைஞர்கள் செய்யவேண்டிய வேலையை ஒரு கணினி இசைக்கருவி செய்துவிடுகிறது. அந்தக் காலத்தில் இசையமைப்பு என்பது ஒரு கடினமான கலை. எல்லாமே சுய முயற்சியில் உருவாகும். ஆனால் இந்தக் காலத்தில் எல்லாமே டெக்னிக் மயமாகிவிட்டது. இதே போக்கில் போனால் இசைக்கலைஞர்கள் நலிவு பெற்றுவிடுவார்கள் என்பது உண்மைதான்

**கேள்வி: கர்நாடக சங்கீதம் தமிழிசையை ஆக்கிரமித்து விட்டதாக கூறப்படுவது உண்மையா?**

**பதில்:** இல்லை, சிலப்பதிகார காலத்திற்கு முன்னிருந்தே தமிழிசை உண்டு. ஆனால் 300 ஆண்டுகளுக்கு முன்னர் தான் தியாகராஜர், தீட்சிதர் போன்றோர்கள் தோன்றினார்கள். தமிழகம் தியாகராஜரை வரவேற்றதனால் அவர் புகழடைந்தார் உண்மையிலே தமிழிசைதான் கர்நாடக இசையென 15 ஆம் நூற்றாண்டில் பெயர் பெற்றது

**கேள்வி: தமிழிசையின் எதிர்காலம் செழுமையானதாக இருக்குமா?**

**பதில்:** நிச்சயமாக இருக்கும். தமிழிசை என்னும் போது தனியே சினிமா இசையினை உருவகப்படுத்துவது தவறு. சினிமா இசை தற்போது செழிமை குன்றியிருந்தாலும் இதில் ஒரு திருப்புமுனை நிச்சயமாக வரும்.

**கேள்வி: இளையராஜா, ரகுமானின் இசை பற்றி?**

**பதில்:** ரகுமானின் . தந்தை ஒரு மலையாள இசையமைப்பாளர். எனவே இசைத்துறையில் ரகுமானுக்கு இருக்கும் ஈடுபாட்டில் ஐயம் கொள்ளமுடியாது. ரகுமானை ஒரு இசையமைப்பாளர் என்று கூறுவதைவிட, ஒரு தொழில்நுட்ப இசையமைப்பாளர் என்று கூறுவதே பொருத்தமானதாகும். இளையராஜா பற்றி கூறுவதானால் அவர் எனது இசைக் குழுவில் கிட்டார் வாத்தியக் கருவி வாசித்தவர் (1966 - 67), எனது உதவியாளரான வைத்தியநாதன், இவரை எனது குழுவிற்கு அப்போது கூட்டிவந்தார். இசையமைப்பதில் இளையராஜா சிறந்த புத்திசாலி.

**கேள்வி: இறுதியாக; அமெரிக்காவில் உள்ள தமிழ்மக்களது எதிர்காலம் எப்படியிருக்கும்?**

**பதில்:** இதற்கு சரியான எதிர்வு கூறமுடியாது. ஆனால் அமெரிக்காவில் தமிழ் சிதைந்து விடக் கூடாதென்ற நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்ச் சங்கங்களின் செயற்பாட்டிலும் எனக்கு உடன்பாடு கிடையாது. தமிழ் மாநாடு ஒன்றைக் கூட்டிவிட்டு ஆங்கிலத்தில் உரையாற்றும் வழக்கமே அவர்களிற்கு தொற்றியுள்ளது. இவர்களே இப்படி நடந்தால் எதிர்கால சந்ததிக்கு எப்படி தமிழ் உணர்வு வரும்.

என எம்மிடமே திருப்பிக் கேள்வியைக் கேட்க...... பேட்டி அத்துடன் நிறைவுபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தினி உணவகம்

குதூகலமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது

14, Rue Perdonnet, 75010 Paris.
Métro: La chappelle / Gare du Nord
**Tel: 01 42 09 37 99**

காலை – 9.00 மணி முதல்
இரவு – 11.30 மணிவரை

**உங்கள் விருப்பத்திற்கேற்ப உணவு**

காலை: இட்லி, அப்பம், இலங்கைத்தோசை, மசாலாத்தோசை, இடியப்பம், பிட்டு
மதியம்: சோறு (பலவகைக்கறிகளுடன்), பிரியாணி, இடியப்பக்கொத்து, கொத்துறொட்டி, றொட்டி மற்றும் பலவகையான உணவுகள்.
இரவு: நீங்கள் விரும்பிய உணவு வகைகள் உண்டு மகிழ்ந்திட நாடவேண்டியது

சாந்தினி உணவகம்

Pub

# New Co-op

உங்கள் அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்யும் ஒரே இடம்

## New Co-op

இந்திய, இலங்கை, தாய்லாந்து உணவுப் பொருட்கள், உடைகள். அன்பளிப்புப் பொருட்கள் தமிழ் இலக்கண இலக்கிய புத்தகங்கள் புதிய ஆபரணங்கள் புதிய விலையில் பெற்றுக்கொள்ளலாம். சஞ்சிகைகள், பத்திரிகைகள் எம்மிடம் கிடைக்கும் வீணை, கணனி வகுப்புக்கள் தொடங்கவுள்ளது. படிக்க விரும்புபவர்கள் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்

## New Co-op

**Gathe 1a**
**42111 Wuppertal.**

Pub

# வெளிவந்துவிட்டன

# ரமி யின்













RAMY RECORDS

Pub


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவிசில் நடைபெற்ற யாழ்முரி-98

மாபெரும் இசைவிழா சுவிஸ் பணியக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், தமிழ் வர்த்தக நிறுவனங்களுடன் இணைந்து தனது கன்னி முயற்சியாக பல உள்நாட்டு, வெளிநாட்டு இசைக்குழுக்களை ஒரே மேடையில் ஒன்றிணைத்து மாபெரும் இசை நிகழ்வான 'யாழ்முரி - 98' நிகழ்வினை 12.07.98 ஞாயிறு பிற்பகல் சூரிச் 'அல்பிஸ்குட்வி' மண்டபத்தில் நடத்தியது. தாயக நிகழ்வுகளை கண்டுகளிப்பதில் சுவிஸ் வாழ் தமிழீழ மக்கள் என்றுமே சளைத்தவர்கள் அல்ல என்பதை மீண்டும் ஒரு தடவை நிரூபிக்கும் முகமாக மண்டபம் நிறைந்து மக்கள் கூட்டம் திரண்டது. தாயக விடுதலை வேண்டி எம்மினத்தின் ஒப்பற்ற தானைத் தலைவர் வழிநின்று போராடி காவியமான மாவீரர்களுக்கும், பொதுமக்களுக்குமான அமைதி வணக்கத்தைத் தொடர்ந்து சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கம் அவர்கள் மங்கல விளக்கினை ஏற்றிவைக்க விழா இனிதே ஆரம்பமானது.

யாழ்முரி 98 மாபெரும் இசை விழ்ாவில் கலந்துகொண்ட அனைவரையும் வரவேற்று வரவேற்புரையாற்றினார், சுவிஸ் பணியக பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பொறுப்பாளர்.

'யாழ்முரி' என்பது ஒரு இராகத்தின் பெயர். தொன்மையும் பழமையும் கொண்ட இந்த இராகத்தை நாமகரமாகக் கொண்டு அதி உயர்நிலையில் இசைவிருதாக 'யாழ்முரி - 98' அமைக்கப்பட்டது. இதற்கு முன்னர் இரு தடவைகள் இலண்டனில் யாழ்முரி போட்டிகள் நடைபெற்றாலும் சுவிற்சர்லாந்தில் முதல் முறையாக இப்போட்டி நடைபெறுகிறது. சுவிசிலுள்ள பல முன்னணி இசைக் குழுக்களும், ஐரோப்பியநாடுகளில் உள்ள பல முன்னணி இசைக் குழுக்களும் ஒரே மேடையில் தோற்றுவதாக ஆயத்தங்கள் செய்திருந்த போதிலும், தவிர்க்க முடியாத காரணங்களால் ஐரோப்பாவிலிருந்து பல இசைக் குழுக்கள் வராதபோதும், டென்மார்க் தமிழீழ இசைக் குழு மட்டுமே வெளியிலிருந்து வந்துபோட்டியில் கலந்து கொண்டது. அத்தோடு சுவிசிலிருந்து சுவிஸ் கலைபண்பாட்டு கழகத்தின் இசைக்குழு, சங்கமம் இசைக்குழு, விடுதலை கானம்பாடி (லுஷ்மி) இசைக் குழு ஆகியவையும் கலந்து கொண்டன.

முன்னர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும், தற்போது 'தமிழ்ஒலி' வானொலியிலும் தனது கணீரென்றும் குரல் வளத்தால் ஒலிபரப்புகளை செய்துவரும் திருமதி ஜெயந்தி மாலா குணசீலன் அவர்கள் அறிவிப்பு பணியை தொடர, தமிழ் ஒலி, ஒளி, றேடியோ ஆசியா கனடா, IBC ஆகிய மூன்று ஒலிபரப்புக்களும் சுவிற்சர்லாந்தில் முதல் முறையாக ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள, போட்டிகளை பார்வையிட்டு புள்ளி வழங்கி நடுவர்களாக பணிபுரிய வந்த சங்கீதபூஷணம் பொன். சுந்தரலிங்கம், இந்தியாவின் புகழ்பெற்ற வயலின் வித்துவான் எஸ். ராதாகிருஷ்ணன், ஜேர்மன் கலை பண்பாட்டுக் கழக உதவிப் பொறுப்பாளர் கண்ணன் ஆகியோர் முன் நிலையில், முதலில் சுவிஸ் கலை பண்பாட்டுக்கழகத்தின் இசைக்குழு சுவிசின் நடுவராக வீற்றிருந்த பொன். சுந்தரலிங்கத்தின் புகழ்பெற்ற பாடலான 'என்னினமே என் சனமே...' என்ற பாடலுடன் போட்டியில் கலந்து கொண்டது தொடர்ந்து விடுதலைப் பாதையில் கலைஞர்களின் பங்கு எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றி சிற்றுரையாற்றினார் கண்ணன். அடுத்து 'பாசல்' நகர சங்கமம் இசைக் குழு மேடையில் தோன்றி விடுதலை கானங்களை இசைத்தார்கள்.

சுவிஸ் ஈழநாதம் வானொலியின் 'அம்பலத்தார் அக்கம் பக்கம்' புகழ் சிங்கம், வேடிக்கையாக நாட்டுநடப்புக்களை மக்கள் மனங்களுக்கு நடித்துக் காட்டினார். தொடர்ந்து பூரணமான விடுதலைக்கு பல வழிகளிலும் நாம் செயற்பட வேண்டுமென்பதையும், அந்த வகையில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வளர்ச்சி; அதனூடாக செயற்படவுள்ள செய்தித்திட்டங்கள் பற்றி சாராம்சமாக கொண்டு விடுதலைப் புலிகளின் சுவிஸ் ஒருங்கிணைப்பாளர் உரையாற்றினார்.

அந்த நிகழ்வாக அரங்கிற்கு வந்த டென்மார்க் தமிழீழ இசைக்குழுவின் ஆரம்பம் சற்று வித்தியாசமாக இருந்தது. இசைக் குழுவின் அனைத்து கலைஞர்களும் மேடைமுன் எழுந்து நின்று வணக்கத்தைச் செலுத்தி தமது இசைப்போட்டியை ஆரம்பித்தனர். ஏனைய இசைக் குழுக்களைவிட இவர்களுடைய அறிவிப்பும் வித்தியாசமாகவே இருந்ததை காணக் கூடியதாக இருந்ததுடன் பலரது வரவேற்றையும் பெற்றது.

அடுத்து சுக் மாணவ மாணவியரின் நடிப்பாற்றலால் தற்போதைய நாட்டு நடப்பு எடுத்துக் காட்டப்பட்டது.

இப்போட்டியில் இறுதியாக கலந்துகொள்ளும் இசைக் குழுவாக விடுதலைக் கானம்பாடி இசைக்குழு தனது திறமைகளை வெளிக்காட்டியது. இங்கு கலந்து கொண்ட அனைத்து இசைக்குழுக்களும் தலா ஆறு பாடல்களை இசைத்தார்கள். இவற்றில் நான்கு ஏற்கனவே வெளியான பாடல்கள். மிகுதி இரண்டும் இசைக் குழுக்களால் இயற்றி இசையமைத்து மேடையேறியவை என்பது குறிப்பிட்த்தக்கது.

கிட்டத்தட்ட இரவு 9 மணியளவில் போட்டிகள் முடிவுக்கு வர மண்டபத்தில் பெருந்திரையில் உலகக்கிண்ண இறுதிப் போட்டிகளை பார்க்கும் ஒழுங்குகளை தமிழ் ஒலிஒளி நிறுவனத்தினர் ஏற்பாடு செய்தனர். உலகக்கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் ஏற்பட்ட இடைவேளையின்போது போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டு கேடயங்கள் வழங்கப்பட்டன. பொன். சுந்தரலிங்கம் அவர்கள் முடிவுகளை அறியத்தந்தார். முடிவுகளின்படி உருவாக்கிய பாடல்கள் அடிப்படையில் விடுதலை கானம்பாடி, டென்மார்க் தமிழீழ இசைக்குழு, சங்கமம் முறையே 1, 2, 3-ம் இடங்களைப் பெற்றன. ஒட்டுமொத்தமான யாழ்முரி 98 முடிவுகளின்படி டென்மார்க், தமிழீழ இசைக்குழு, சுவிஸ் கலைபண்பாட்டுக்கழக இசைக்குழு, விடுதலைக் கானம்பாடி இசைக் குழு முறையே 1, 2, 3-ம் இடங்களை பெற்றுக்கொண்டன.

முதல்பரிசை பொன். சுந்தரலிங்கம் டென்மார்க் இசைக் குழுவினரிடமும், இரண்டாம் பரிசை கண்ணன் கலைபண்பாட்டுக் கழகத்திடமும், மூன்றாம் பரிசை எஸ். ராதாகிருஷ்ணன் விடுதலை கானம்பாடியிடமும் வழங்க, சுவிஸ் ஒருங்கிணைப்பாளர் சிறப்பித்து பரிசு கேடயத்தை சங்கமம் இசைக் குழுவிடம் வழங்கினார். பரிசுக்குரிய பணத்தொகைகளை தமிழ் வர்த்தகர்கள் வழங்கியிருந்தார்கள். இப்போட்டியில் பங்கெடுத்த சகல இசைக்கலைஞர்களுக்கும் நினைவுக் கேடயம் வழங்கப்பட்டு நிகழ்ச்சிகள் மகிழ்வுடன் முற்றுப்பெற்றன.

தொகுப்பு—
சங்கையூர் குமார்.

## புனர்வாழ்வுக் கழகத்திற்கு நிதிக் கையளிப்பு

ஜேர்மனி எசன் வள்ளிதேவசேனா சிறீ சிவசுப்பிரமணியம் ஆலய நிர்வாகத்தினர் ஆலய நிதியிலிருந்து தமிழீழத்தில் அல்லலுறும் மக்களின் துயர்துடைப்பிற்காக ஆயிரம் மார்க் பணத்தை ஜேர்மனி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் வழங்கினர். எசன் நகரில் ஈழமுரசு நடாத்திய நாடகப் போட்டியின்போது இப்பணம் ஆலய நிர்வாகத்தினரால் ஜேர்மனி தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளரிடம் கையளிக்கப்பட்டது


Ennepetal

**Super Cup 98**

**Tsv Ennepetal நடாத்தும் வெளியரங்கு உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டி**

**காலம்:** 01.08.98 சனிக்கிழமை காலை 8 மணி

**இடம்: Sportplatz - Reichenbach Gymnasium**

Peddinghaus Str/17, 58256 Ennepetal (Altenvoerde)

**விதிமுறைகள்**

1. ஒவ்வொரு கழகமும் 7 விளையாட்டுவீரர்கள் கொண்டதாகும் பங்குபற்ற விரும்பும் ஒவ்வொரு கழகமும் 100 டி.எம்.செலுத்திப் பதிவு செய்யவேண்டும்.
3. விளையாட்டு விதிமுறைகள் F.I.F.A விதிமுறைகளுக்குள் அடங்க நடாத்தப்படும்.
4. நடுவரின் தீர்ப்பே இறுதியானது.

தொடர்புகளுக்கு:

S.Sangar
02333/913340
V.Thasan
Tel:02333/3895 & 02333/4290


# புகலிட நிகழ்வுகள்

## பிறிலோன் நகரில் புனர்வாழ்வுக் கலைத்தென்றல்

தமிழர் புனர்வாழ்வுக் கழக ஜேர்மனிக் கிளை பரவலாக நடாத்தும் புனர்வாழ்வுக் கலைத் தென்றலில் இந்த ஆண்டுக்கான முதல் நிகழ்ச்சி, பிறிலோன் நக



ரில் சனிக்கிழமை (04.07.1998) பிற்பகல் நடந்தது. தமிழீழ மக்களின் துயர் துடைக்கும் நிதிப்பங்களிப்பைக் கோரி நிற்கும் கலை நிகழ்ச்சியாக இது நடாத்தப்பட்டுவருகின்றது.



அமைதி வணக்கத்தை அடுத்து திரு.சர்வானந்தன் அவர்கள் வரவேற்புரை வழங்கினர். செல்வி துன்ஷா சிறீதரன் சிற்றுரை ஆற்றினார். யாமினி சர்வானந்தனும் அவரது மாணவரும் விடுதலை நடனங்களை



சிறப்பாக ஆடிக்காட்டினர். செல்வி பவித்ரா செல்வகாந்தனும் அவரது மாணவரும் 'முல்லைமலர்' என்னும் நாட்டிய நாடகத்தை உணர்வு வெளிப்பட கலைப்படைப்பாக்கினர்.

தமிழீழம் இசைக் குழுவினர் 'பாசஇசைமழை' என்னும் விடுதலை இசைநிகழ்ச்சியைக் கம்பீரமாக நடாத்தினர். நாட்டுக் கூத்து அண்ணாவியார் எலியாஸ் பிள்ளை அவர்களின் 'கதிர்காமா கதிர்காமா!' என்னும் கதாபிரசங்கம் நகைச்சுவை கலந்து விடுதலைவேட்கையை வெளிப்படுத்தியது.

கரும்புலிகளின் தியாகச் செயல்களை உள்ளடக்கிய 'தேசத்தின் புயல்கள்' என்னும் ஒலித்தட்டு வெளியீடு செய்யப்பட்டது. தாயகத்தின் இம்ரான் பாண்டியன் படையணியின் வெளியீடான இதனை, தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலகம் மீள்வெளியீடு செய்திருந்தது. முதற்பிரதியை அமைப்பின் நகரப்பிரதிநிதி சண் அவர்கள் வெளியிட்டுவைக்க, புனர்வாழ்வுக்கழக நகரப்பிரதிநிதி சர்வானந்தன் அவர்கள் அதனைப் பெற்றுக் கொண்டார்.

வெளியீட்டுரையின்போது பேசிய கா.சிவநாதன், 'கரும்புலிகள் வெடிக்கின்றபோது, இராணுவ மதிநுட்பத் திட்டங்களையெல்லாம் மீறி, யாராலும் வெல்லமுடியாத சாதனையைப் படைக்கின்றனர். அவர்களுடைய வெற்றி, அவர்கள் பொருதும் களத்துக்கான வெற்றி மட்டுமல்ல, அதன்பின்னரும் பல்லாயிரக்கணக்கான சிங்கள இராணுவத்தினரதும் இனவாத அரசியல்வாதிகளதும் நெஞ்சங்களில், பயம் என்னும் பேரிடியை இறக்கி, எதிரியை ஆட்டங்காண வைக்கும் மாபெரும் நிரந்தர வெற்றி!' எனக் குறிப்பிட்டார். நிகழ்ச்சிகளைக் கலைபண்பாட்டுக்கழக அறிவிப்பாளர்களான வலண்டைன், யேசுதாஸ் ஆகியோர் தொகுத்துவழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கரம் கொடுங்கள்!

## தூக்குக் கயிற்றின் முடிச்சினை அவிழ்த்திட கரம் கொடுங்கள்!!

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்று இன்று இந்தியச் சிறைகளில் வாடும் அந்த 26 பேரும் தூக்கில் தொங்க நாம் அனுமதிக்கப்போகிறோமா?

மனிதாபிமானத்தின் பெயரால் கேட்கிறோம் நீதியின் பெயரால் கேட்கிறோம் உயிர்கள் தவிக்கின்றன. அந்த உயிர்களை ஒன்றிணைத்துக் காப்பாற்றுவோம். எம்மால் இயன்றதை மேன் முறையிட்டு வழக்கு நிதிக்காக வழங்குவோம்.

எங்கள் மனச்சாட்சியின் ஒவ்வொரு வாசலூடாகவும் அவர்களை விடுதலை செய்வோம்.

**மேலதிக விபரங்களுக்கும் ஒவ்வொருவரின் பங்களிப்பிற்கும்**

**முகவரி:**
தபால் பெட்டி இலக்கம் 518,
**Harrow**
**Ha2, 8xx, London**
தொலைபேசி இலக்கம்: 0411947433
அல்லது 0181 8646782
வங்கிக் க/கு இலக்கம்: 703 66 757
**Short Code No -20 96 89**

### நோர்வே
முகவரி: தமிழர் நிதி
தபால்பெட்டி இலக்கம்: 2941
5030, **Landas**
**Norway**
தொலைபேசி இலக்கம்: 90669859
வங்கிக் க/கு இலக்கம்: 5202 05 44805
தமிழர் நிதி
**Den Norske Bank**

### சுவிற்சர்லாந்து
முகவரி: தபாற்பெட்டி இலக்கம்: 187
**1950 Sion**
**Switzerland**
தொலைபேசி இலக்கம்
027 3466 984 அல்லது
027 3232 062

### ஜேர்மனி
தொலைபேசி இலக்கம்: 0201 7220 510

### டென்மார்க்
தொலைபேசி இலக்கம்: 97 22 42 77

### பிரான்ஸ்
தொலைபேசி இலக்கம்: 01 48 33 13 90

### நெதர்லாந்து
தொலைபேசி இலக்கம்: 0786 12 61 07

# கறுப்பு யூலை தினத்தை முன்னிட்டு விசேட பூசை

பாரிஸ் அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை 24.07.98 மாலை 6.30 மணிக்கு கறுப்பு யூலை தினத்தை முன்னிட்டு விசேட பூசை வழிபாடு இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

அனைத்துத் தமிழ் மக்களும் இவ் விசேட பூசையில் கலந்து உயிர் துறந்த எம் மக்களுக்காகப் பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயம் — பாரிஸ்
26, Rue du Departement, 75018 Paris.
Tel: 01 40 38 30 75

# மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டு விழா

ஜேர்மனியில் தமிழ் மாணவர் அமைப்பினால் நடாத்தப்படும் மாபெரும் மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுவிழா எதிர்வரும் 25-ம் திகதி சனியன்று டோட்முன்ட் நகரில் நடாத்தப்படும்.

இதுவரை மாநில ரீதியாக நடைபெற்ற மெய்வல்லுனர் உதைபந்தாட்டப் போட்டிகளின் இறுதிப்போட்டிகள் அத்தினம் நடைபெறும்.

மெய்வல்லுனர் போட்டிகளில் இதுவரை மாநில ரீதியாக நடாத்தப்படாத 1000 மீ.ஓட்டம், அஞ்சல் ஓட்டம், குண்டெறிதல், தடைதாண்டி ஓட்டம், சாக்கு ஓட்டம், கொடிகொடுத்து ஓடுதல், கூடைக்குள் வந்து எறிதல் ஆகிய போட்டிகளும் அத்தினம் நடைபெறும்.

டோட்முன்ட் Stadion Rote Erde விளையாட்டு மைதானத்தில் போட்டிகள் அனைத்தும் காலை எட்டு மணிக்கே ஆரம்பமாகிவிடும். மெய்வல்லுனர் போட்டிகள், தமிழாலய உதைபந்தாட்ட இறுதிப் போட்டிகள், கழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்ட இறுதிப்போட்டி, ஒப்பனையும் பாவனையும், அணி நடைப் பயிற்சி, கயிழுத்தல் போட்டிகள் ஆகியவை இடம் பெறும்.

தமிழாலய உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் சுட்காட் தமிழாலயமும், டியூஸ்பேர்க் தமிழாலயமும் மோதிக்கொள்கின்றன. கழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் முன்சன் கிளட்பாக் தமிழர் விளையாட்டுக் கழகமும், எசன் தமிழர் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொள்கின்றன.

ஜேர்மன் தழுவிய தமிழ் மாணவர்கள் பெருமளவில் கலந்துகொள்ளும் இவ்விளையாட்டு விழாவில் கலந்து கொண்டு விளையாட்டு வீரர்களையும் வீராங்கனைகளையும் உற்சாகப்படுத்த, டோட்முன்ட் 'சிவந்த மண்' மைதானத்தில் ஒன்று திரளுமாறு பார்வையாளர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றார்கள்.

ஜேர்மன் தமிழ் மாணவர் அமைப்பினர் ஆறாவது வருடமாக மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப்போட்டிகளை நடாத்துகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

*வீ. ஆர். வரதராஜா*

# ஈராக்கில் விஷத்தினால் ஏற்பட்ட பெரிய அழிவு (1971–1972)

1971—1972 ல் ஈராக்கின் ஏற்பட்ட பஞ்சத்தைத் தடுக்க முயன்ற மக்கள் மேலும் கூடுதலான அழிவை ஏற்படுத்திவிட்டனர்.

1969 —1971 வரை ஈராக்கின் காலநிலை மிகவும் சூடாக இருந்தமையால் அங்கு வாழ்ந்த மக்களால் விவசாயம் செய்ய முடியவில்லை. சாப்பிடுவதற்கு உணவு இல்லாததால் பஞ்சம் உருவாகியது. தங்களின் பசியைப் போக்க மக்கள் ஒன்றுகூடி வெளிநாடுகளில் இருந்து தானியங்கள் வாங்கத் திட்டமிட்டனர்.

அமெரிக்காவிலுள்ள ஒரு நிறுவனத்திடம் இருந்து 73,000 தொன் சோளம் வரவழைக்கப்பட்டது. U.S West Coast Suppliers இடமிருந்து 22,000 தொன் பார்லி அரிசி வரவழைக்கப்பட்டது. வரவழைக்கப்பட்ட தானியங்கள் பயிர் செய்யும் போது, பயிர்கள் பூச்சிகளினால் நாசம் செய்யப்படாமல் இருப்பதற்காக தானியங்கள் மேக்கியூரி என்ற இரசாயனப் பொருளால் பராமரிக்கப்பட்டிருக்க வேண்டும் என ஈராக் அரசாங்கம் கேட்டுக்கொண்டதால், அதேபோன்று மேக்கியூரியினால் பராமரிக்கப்பட்ட தானிய வகைகள் (சோளம், பார்லி) வரவழைக்கப்பட்டன. ஆனால் இவ்வகையான தானியங்கள் 1950-ல் பாகிஸ்தானிலும், சுவீடனிலும் கௌத்தமாலாவிலும் பிரயோகித்த போது நச்சுத் தன்மையை உண்டாக்கியதால் அமெரிக்கா, கனடா மற்றும் வேறு ஐரோப்பிய நாடுகள் இத்தானிய வகையை உணவுக்காக உபயோகிப்பதை தடுத்து விட்டன. ஆனால் வேறு பல பாவனைகளுக்காக மாத்திரம் (நாட்டைச் செழிப்பாகவும் அழகாகவும் வைத்திருப்பதற்காக) பாவிக்கப்பட்டு வந்தது.

ஈராக்கில் ஏற்பட்ட கடும் வரட்சி காரணமாக மக்கள், இவ்வகையான தானியங்கள் நச்சுத் தன்மையானவை என்பதை ஏற்றுக்கொள்ள மறுத்து, தானியங்களைப் பெற்றுக்கொண்டனர். அங்கிருந்து வரவழைக்கப்பட்ட தானியங்களின் ஒவ்வொரு மூடைகளிலும் 'இத்தானிய வகைகளை உணவுக்குப் பயன்படுத்த வேண்டாம்' என ஆங்கிலத்திலும் ஸ்பானிய மொழியிலும் எழுதப்பட்டிருந்தபோதும், ஈராக்கிலுள்ள பெருந்தொகையான மக்களுக்கு இந்த இரண்டு மொழிகளும் தெரியாத காரணத்தினால் யாரும் எதுவும் அறிந்து கொள்ளவில்லை.

வரவழைக்கப்பட்ட தானிய மூட்டைகள், துறைமுகத்திலிருந்து தானிய வகைகள் சேர்த்து வைக்கும் இடத்திற்கு வாகனத்தில் கொண்டுசெல்லும்போது பல மூடைகள் வழியில்வைத்து பலரால் களவாடப்பட்டன.

தானியங்களைப் பெற்றுக்கொண்ட பின், ஈராக் அரசாங்கத்தினால் துண்டுப் பிரசுரங்களில், 'அத் தானிய வகைகள் நச்சுத்தன்மை வாய்ந்தவை, உணவுக்கு உபயோகிக்க வேண்டாம்' என எழுதி ஹெலிக்கொப்டர் மூலம் எல்லா இடங்களிற்கும் போடப்பட்டிருந்தும், அங்கு பட்டினியால் தவித்த மக்கள் [illegible] வில்லை. களவாடப்பட்ட தானிய மூடைகள் விதைக்கப்பட்டு விளைந்த தானியங்களிலிருந்து உண்டாக்கப்பட்ட பாண் வகைகள் மிகவும் ருசியாக இருந்ததாக மக்களால் கூறப்பட்டது.

அந்தப் பாண் வகைகளை உணவாகப் பயன்படுத்திய பிள்ளைகளும், பெரியோர்களும் மிகவும் கொடூரமான முறையில் வாந்தியெடுக்கத் தொடங்கினர். பெருந்தொகையான மக்கள் இறந்தனர். உயிர் தப்பியோர் பலர் மூளை நரம்புகள் பாதிக்கப்பட்டு உயிருக்குப் போராடினர். இத் தானிய வகைகளை யாரும் உணவாகப் பயன்படுத்தி அதனால் வாந்தி ஏற்பட்டால் பால் அல்லது நீரில் கலந்த முட்டை வெள்ளைக்கரு குடிக்க வேண்டும், பின்பு ஒரு மேசைக் கரண்டி உப்பு சுடுதண்ணீரில் கரைத்துக் குடிக்கவேண்டும். தானியமெல்லாம் வெளியேறி தண்ணீராக வாந்தி வரும்வரை பல தடவை செய்யவேண்டும் என மூடைகளில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தும் யாரும் அதை வாசிக்கவில்லை.

அங்குள்ள எல்லா வைத்தியசாலைகளும் நோயாளர்களால் நிரம்பின. பின்பு, இத் தானிய வகைகள் யாராவது வீடுகளில் பதுக்கி வைத்திருந்தால் உடனடியாக தானியங்களைச் சேர்த்து வைக்கும் இடத்திற்கு திருப்பி அனுப்புமாறு, அரசாங்கத்தினால் உத்தரவிடப்பட்டது. இவற்றை மிருகங்களுக்கோ, மனிதர்களுக்கோ சாப்பாட்டிற்கு பயன்படுத்தவேண்டாம் எனவும் கேட்கப்பட்டது.

ஒரு மாதத்தின் பின்பு மாட்டிறைச்சி விற்கும் கடையில் நச்சுத் தன்மையான இறைச்சி கண்டுபிடிக்கப்பட்டது. இறைச்சி விற்பனை இரண்டு மாதங்களுக்கு அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்டது. இதனால் ஏனைய உணவு வகைகள் விலை கூடின. 6000 இற்கும் மேற்பட்ட மக்கள் கொடூரமாக உயிரிழந்தனர். இலட்சக்கணக்கானோர் மூளை, நரம்புகள் பாதிக்கப்பட்டு அவதிப்பட்டனர்.

எட்வேட் கக்ஸ் (Edward Hughes) என்ற எழுத்தாளர் 2 வருடங்களுக்கு முன்பு ஈராக்கிற்குப் பயணம் செய்தபோது அங்கு 6—12 இற்கு இடைப்பட்ட சிறுவர்கள் உதைபந்தாட்டம் விளையாடிக் கொண்டிருந்ததைக் கண்டார். அவர்கள் மது அருந்தியவர்கள் மயக்கத்தில் இருந்ததுபோல், ஆடியசைந்து விளையாடுவதையும் ஒரு சிறுவன் பந்தடிக்க முயன்றபோது சமநிலையில்லாது தடுமாறிக் கீழே விழுந்துவிட்டதாகவும், இன்னொருவன் பந்தை எடுக்க ஓடியபோது கண்பார்வை சரியாக இல்லாததால் புற்தரையில் விழுந்துவிட்டதாகவும், தான் அங்கு கண்டதாக எடுத்துரைத்தார்.

பல வருடங்களின் பின்பு நியூயோர்க்கிலுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் ஆராய்ச்சி செய்தபோது அவர்களின் தலைவனான டாக்டர். தோமஸ் கிளாக்ஸன் என்பவரால், பிறக்க இருக்கும் குழந்தைகளுக்கும் தாய்மாரினால் மேக்கியூரி என்ற இரசாயனப்பொருள் இரத்தத்தில் கலக்கப்பட்டு தீங்கு விளைவிக்கலாம் என அறிக்கை விடப்பட்டது.

இது ஈராக்கில் நடைபெற்ற மிகப்பெரிய அழிவாகும்.

### – கவிதா –

## வரலாற்றில் பதிவாகிய அழிவுகளும் தவறுகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1983 கறுப்பு ஜூலை

**25.07.1983 திங்கட்கிழமை**

நுவரேலியா நகரம் கோடை காலத்துக்குரிய குதூகலத்துடனும், வண்ணப் பொலிவுடனும் இயங்கிக்கொண்டிருக்கிறது.

நுவரேலியா மத்திய பஸ் நிலையத்தில் ராகலை பகுதி தோட்டப் பாடசாலையில் ஆசிரியைகளாக கடமையாற்றும் இரு இளம் தமிழ் பெண்களும், அங்குள்ள பிரபல வர்த்தக நிலையம் ஒன்றில் கணக்காளராக கடமையாற்றிய இளம் கணக்காளர் ஒருவரும், அவரது மனைவியும், அவர்களது 3 வயதும் 5 வயதும் நிரம்பிய குழந்தைகளும், யாழ்ப்பாணம் செல்வதற்காக நானு ஓயா புகையிரத நிலையத்துக்கு செல்லும் பேருந்துக்காக காத்திருக்கின்றார்கள்.

நேரம் மாலை 4.30 இருக்கலாம். இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று வருகின்றது.

'நானு ஓயா' என்ற பெயர் பலகையுடன் வந்த அந்தப் பேருந்தைக் கண்டதும் தமிழர் சிங்களவர் என்ற பேதமின்றி அனைத்துப் பயணிகளும் அதில் ஏறுவதற்குத் தயாராகின்றார்கள். ஏற்கனவே அந்தப் பேருந்துக்குள் ஒரு 10 அல்லது, 15 சிங்களவர்கள் இருந்து கொண்டிருந்தார்கள். அதில் சிலர் பேருந்தின் ஜன்னல் ஊடாக தலையை வெளியே நீட்டி - தெமிழ கட்டிய வித்தரக் நகிண்ட' (தமிழர் மட்டும் ஏறுங்கள்) என்று கத்துகின்றார்கள்.


அங்கே அந்த பஸ் தரிப்பில் நின்ற அந்த தமிழ் ஆசிரியைகள், அந்தத் தமிழ் கணக்காளர் குடும்பம் உட்பட அங்கிருந்த தமிழர்களுக்கு ஒரு கணம் திகைப்புண்டாகிறது.

அதன் பின் என்ன நடந்தது என்பதை அந்தச் சம்பவத்திற்கு இன்றும் சாட்சியாகவுள்ள ஆசிரியர் க. தங்கவேலு என்ன சொல்கின்றார் என்று பார்ப்போம்.

நுவரேலியா ஹெலி ருனிட்டி கல்லூரி ஆசிரியரான நான் அன்று கொழும்புக்கு செல்வதற்காக அந்த பேருந்து தரிப்பில் மற்றவர்களுடன் நின்றேன்.

அங்கே ஏறக்குறைய சிங்களவர்கள், தமிழர்கள் உட்பட ஒரு 30 அல்லது 40 பேர் நின்றோம். அந்த பஸ்சில் வந்த சிங்களக் காடையர்கள், தமிழர்கள் மட்டும் ஏறுங்கள் என்று கத்திய போது எங்களுக்கு பயம் ஏற்பட்டு விட்டது.

நாங்கள் யாருமே அதில் ஏறவில்லை. அடுத்த கணம் - கத்தி, வாள் கொட்டன்களுடன் அந்தப் பேருந்திலிருந்து இறங்கிய சிங்களக் காடையர்கள் எங்களைச் சுற்றி வளைத்துக்கொண்டார்கள் பின்பு, 'சிங்களவர்கள் எல்லாம் போங்கள்' என்று சொல்லிவிட்டு, பொட்டு வைத்திருந்த தமிழ் ஆசிரியைகள் இரண்டு பேரையும், அந்தக் கணக்காளரின் மனைவியையும் பிடித்து இழுத்தார்கள். கணக்காளர்கள் தடுத்தபோது அவருக்கு சரமாரியாக் கத்தி வெட்டும் வாள் வெட்டும் விழுந்தது. ஒரு சிங்கள வெறியன் அவரது வயிற்றைக் கத்தியால் கிழித்து குடலை வெளியே விழுத்தினான். அவருடைய உயிர் அதிலேயே போய்விட்டது. பயத்தால் அலறிய அவரது இரண்டு குழந்தைகளையும், அவர்களது தலையில் கட்டையால் அடித்தே கொன்றார்கள்.



## ஜெயவர்த்தனாவுக்கு செருப்படி

*('ஹொட் ஸ்பிரிங்' பத்திரிகையின் ஆசிரியரான திரு. எஸ்.சிவநாயகம் அவர்களை 1983 ஜூலை கலவரம் பற்றிக்கேட்டபோது)*


1983 ஜூலை கலவரம் என்றவுடன் அதுமட்டும்தான் தமிழர்களுக்கு எதிராக நடாத்தப்பட்ட ஒரேயொரு கலவரம் என்று வரலாற்றைப் படிக்கின்ற நமது புதிய தலைமுறையினர் நினைத்துவிடக் கூடாது. உண்மையில் 1956 லேயே தமிழர்களை அழிக்கின்ற முயற்சி தொடங்கிவிட்டது. 1956 கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன்.

1983 கலவரம் கொழும்பில் அதிகளவிற்கு நடந்த படியாலும் இயக்கங்களின் தோற்றம் வந்தபின்பு நடந்தமையால் சர்வதேச அளவில் அது முக்கியம் பெற்றுவிட்டது. 1958, 1977, 1981 களில் எல்லாம் தொடர்ந்து இனக்கலவரங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

1983 கலவரம் நடைபெற்றபோது நான் யாழ்ப்பாணத்தில் இருந்தபடியால் அதைப்பற்றி விரிவாகச் சொல்வது பொருத்தமாக இருக்காது.

ஆனால் 1983 கலவரம் சர்வதேச அளவிலும் தமிழ் நாட்டிலும் எமக்கு ஒரு எழுச்சியை ஏற்படுத்தித் தந்தது. தமிழ்நாட்டில் நடந்த ஒரு சம்பவம் இப்பவும் எனக்கு மறக்கமுடியாத ஒன்றாக இருக்கின்றது. சென்னையில் உள்ள ஒரு முக்கியமான இடத்தில் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் கொடும்பாவியைக் கட்டித் தூக்கிவிட்டு அதற்குக் கீழ் செருப்பையும் வைத்திருந்தார்கள். அதாவது அந்த வழியால் போகிறவர்கள் செருப்பை எடுத்து ஜெயவர்த்தனாவிற்கு (கொடும்பாவிக்கு) அடித்துவிட்டு அங்கே காசைப்போட்டுவிட்டுச் செல்லவேண்டும். நிறையப்பேர் போட்டிபோட்டுக்கொண்டு அதைச் செய்தார்கள். அங்கே இருந்த காசை ஒருவரும் களவெடுத்துக்கொண்டு போகவில்லை. தமிழர்களுக்கு கொடுமை செய்தவருக்கு அடிக்கவேண்டும் என்ற உணர்வு மக்களுக்கு இருந்தது.

மற்றும்படி 1983 மே மாதத்திலேயே யாழ்ப்பாணம் திருகோணமலைப் பகுதிகளில் கலவரம் ஆரம்பித்துவிட்டது. ஆனாலும் ஜூலை 24ம் திகதி ஆரம்பித்த கலவரம்தான் பெரிய கலவரமாகச் சொல்லப்படுகிறது என்றார்.




தங்கத்துரை

'தமிழர்களைக் கொல்லுங்கள்! தமிழர்களைக் கொல்லுங்கள்' என்று அவர்கள் போட்ட கூச்சலில், அந்த பஸ் நிலையத்தில் இருந்த சிங்களவர்கள் உற்சாகமடைந்து அங்கிருந்த தமிழர்களையெல்லாம் தாக்கத் தொடங்கினார்கள்.

பேருந்தில் வந்த காடையர்கள் அந்த தரிப்பில் நின்ற தமிழர்களையெல்லாம் வெட்டிச் சரித்துக்கொண்டு, என்னிடம் வந்தபோது நான் தமிழன் இல்லை முஸ்லீம் என்று கெஞ்சலாக கத்தினேன் 'எங்கே குரான் ஓதடா' என்றார்கள்.

நான் ஒரு இஸ்லாமிய நண்பரின் வீட்டிலேயே தங்கியிருந்ததால் எனக்கு குரானில் ஒரு சில வரிகள் தெரியும்.



குட்டிமணி

நான் எனக்குத் தெரிந்த பாணியில் ஓதினேன். எனக்கு ஒரு அசட்டுத் தைரியம், அவர்களுக்கு குரானைப் பற்றி ஒன்றும் தெரியாது என்ற என் நம்பிக்கை வீண் போகவில்லை.

ஓடடா என்று கலைத்து விட்டார்கள். ஒரே ஓட்டமாக ஓடி எனது இஸ்லாமிய நண்பரின் வீட்டில் அடைக்கலம் புகுந்துவிட்டேன்.

என்னுடன் அந்தப் பேருந்து தரிப்பில் நின்ற அந்த மூன்று இளத் தமிழ்ப் பெண்களும் அந்தக் காடையர்களால் குதறப்பட்டு உயிருடன் எரிக்கப்பட்டதாக பின்பு அறிந்தேன். அதைத் தொடர்ந்து நுவரேலியா நகர தமிழர் கடைகளும், வீடுகளும் கொள்ளையடிக்கப்பட்டபின் எரியூட்டப்பட்டன. 300 க்கும் அதிகமான தமிழர்கள் கொல்லப்பட்டதாகவும் பலர் உயிருடன் வீடுகளுக்குள் வைத்து எரிக்கப்பட்டதாகவும் அறிந்தேன் என்கிறார்.



ஜெகன்

இது ஒரு சம்பவம். இதைப் போல் ஆயிரக்கணக்கான சம்பவங்கள். மலையக தொழிற் சங்கத் தலைவரான ஓ.ஏ. இராமையா பின்வருமாறு சொல்கிறார்.

இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களைப் பார்க்க நான் பதுளை, பண்டாரவளை, நுவரேலியா போன்ற நகரங்களுக்குப் போனபோது இந்த நகரங்கள் சுடுகாடுகள் போல் காட்சியளித்தன. அங்கிருந்த தமிழர்களுடைய அலுவலகங்கள் வர்த்தக நிறுவனங்கள் வீடுகள் எல்லாம் தீக்கிரையாக்கப்பட்டிருந்தன.

சொந்தங்களையும், தங்கள் வாழ்நாளெல்லாம் சேர்த்து வைத்த சொத்துக்களையும், தொலைத்துவிட்டு பல்லாயிரக் கணக்கான மக்கள், உடுத்திருந்த ஆடைகளோடு கண் கலங்கிய நிலையில் அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருந்ததைப் பார்த்தேன். தமிழர்களாய்ப் பிறந்ததைத் தவிர அவர்கள் செய்த குற்றம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை.

கொழும்பு மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறை துணை விரிவுரையாளராகக் கடமையாற்றியவர் திரு. இராஜாராம். பண்டாரவளையைச் சேர்ந்த அவருக்கு திருமணமாகி சில ஆண்டுகளே ஆகியிருந்தது. கொழும்பு களுபோவளையில் வைத்துத் தாக்கப்பட்ட அவர் அங்குள்ள ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் என்ற செய்தி அறிந்து அங்கே அவரைப் பார்க்கச் சென்றபோது, அவரும் அந்த ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட தமிழர் பலரும், அங்கேயே கொல்லப்பட்டு எரிக்கப்பட்டதாக அறிந்து மிகவும் வேதனைப்பட்டேன் என்கிறார்.

1983 ஜூலைக் கலவரத்தின் முதல் வெறியாட்டம் ஜூலை 24 ஞாயிறு காலை, யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்தது. திருநெல்வேலியில் வீடுகளுக்குள் இருந்த அப்பாவிகள் சிறீலங்கா இராணுவத்தால் வீதிக்கு இழுத்து வரப்பட்டு நாயைச் சுடுவது போல் சுட்டுக் கொல்லப்பட்டனர். அன்றைய தினம் மானிப்பாய் பகுதியில் பேருந்துக்காக காத்திருந்த பிரயாணிகளும் அதே பாணியில் சுட்டுக்கொல்லப்பட்டனர். அன்று மட்டும் 41 தமிழர்கள் சிறீலங்கா இராணுவத்தினராலும் பொலிசாராலும் யாழ்ப்பாணம் குடாநாட்டில் வைத்துக் கொலை செய்யப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

1983 ஜூலை 25 திங்கட்கிழமை கொழும்பிலும் அதன் புறநகர் பகுதிகளிலும் தமிழர்களுக்கு எதிரான கலவரங்கள் திட்டமிட்ட அடிப்படையில் தூண்டிவிடப்பட்டன. கொழும்பு பிரதேசத்தில், தமிழர்களை அழிக்கும் முயற்சிக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் குண்டர் படை பயன்படுத்தப்பட்டது. இந்தக் குண்டர் படை பிரேமதாசாவின் ஆசியுடனேயே செயற்பட்டதாகவும், சொல்லப்படுகின்றது. இதேபோல் நுவரேலியா நகரத்திலும் அதைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 ஆண்டுகள்

சூழவுள்ள பகுதிகளிலும் நடந்த வெறியாட்டங்களுக்கு காமினி திசாநாயக்காவின் குண்டர் படையே காரணமாக இருந்தது என்று சொல்லப்படுகின்றது.

கண்டி. காலி மாத்தறைப் பகுதியில் ஐ.தே, கட்சிக்கு போட்டியாக சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், தனது குண்டர்களை ஏவிவிட்டு தமிழர்களைத் தாக்கியது.


மொத்தத்தில் இந்தக் கலவரத்தின் முழுநோக்கமும், தமிழர்களை அடக்கவேண்டும், அச்சத்துக்குள்ளாக்க வேண்டும் என்பதே.

1983 ஜூலை 25ம் திகதி திங்கட்கிழமை நடந்த முக்கியமான சம்பவம் கொழும்பு வெலிக்கடைச் சிறையில் இருந்த தமிழ் கைதிகள் சிறைக்காவலர்களாலும் சிங்களப் கைதிகளாலும் கோரமான முறையில் அடித்தும், வெட்டியும் கொல்லப்பட்டதே. அன்றைய தினம் குட்டிமணி, ஜெகன் தங்கத்துரை உட்பட 37 தமிழ் கைதிகள் வெட்டியும் அடித்தும் கொல்லப்பட்டனர்.

மரண தண்டனை பெற்ற குட்டிமணி, தனக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்ட பின் தனது கண்களை எடுத்து கண் தெரியாத ஒரு தமிழருக்கு கொடுக்கவேண்டும். அதன் மூலம் தமிழீழம் மலர்வதை நான் பார்க்கவேண்டும் என்று கூறியதற்காக உயிருடன் இருந்த போதே அவரது இரண்டு கண்களும் தோண்டி எடுக்கப்பட்டு பூட்ஸ் காலால் போட்டு மிதிக்கப்பட்டு இப்போது எப்படி உன் கண்களால் தமிழீழத்தை பார்ப்பாய் என்று சிங்களக் காடையர்கள் கேட்டதாகச் சொல்லப்படுகின்றது.

1983 ஜூலை 29ம் திகதி அதே வெலிக்கடை சிறைச்சாலையில் மீண்டும் தமிழ் கைதிகள் சிங்களக் கைதிகளால் தாக்கப்பட்டனர். இரண்டாவது தடவையாக நடந்த இந்தச் சம்பவத்தின்போது தமிழ் கைதிகள் உசார் நிலையில் இருந்ததால் 15 பேர் மட்டுமே கொல்லப்பட்டனர். இதில் கொல்லப்பட்டவர்களில் டாக்டர் இராஜசுந்தரமும் ஒருவர்.

இந்தக் கலவரம் பற்றி இந்தக் கலவரத்தில் ஏற்பட்ட உயிர் உடமை இழப்புக்கள் பற்றி இதுவரை துல்லியமான எந்தக் கணிப்பீடுகளும் செய்யப்படவில்லை.



## அரும்புகள் என்ன செய்யும் ?

ஒவ்வொரு முகாமிலும் ஒவ்வொருநாளும் 50 முதல் 100 குழந்தைகள் வரை செத்துக் கொண்டிருக்கிறார்கள். பெரியவர்களே தாக்குப்பிடிக்க முடியாதபோத அரும்புகள் சாகாமல் என்ன செய்யும்?

'முந்தித் தவங்கிடந்து 300 நாள் சுமந்து அந்தி பகலாய் நொந்து' பெறப்பட்ட குழந்தைகள் இப்படி அரைகுறை வாழ்வு பெறுவதை எண்ணி அழுவதா? இருபது வயது இளைஞன் வளர்ந்து இனிமேல் அவன்தான் குடும்பத் தலைவன் என்று எண்ணி இறுமாந்து கிடக்கும் பெற்றோர்கள், குத்துவெட்டுக்களால் தன்மகன் குற்றுயிரும் குலையுயிருமாக துடித்துக் கிடப்பதைக் கண்டு விழும் நிலையை எண்ணுவதா? வளர்ந்தாள் மகள்- மலர்ந்தாள் -மணந்தாள்- மனம் பூரிக்க வாழ்வாள் எனும் எதிர்பார்ப்போடு நின்ற இளம்பெண் தம் கண் முன்னாலேயே சிங்களக் காடையர்களால் இராணுவ வெறியர்களால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு, மார்பகம் அறுக்கப்பட்டு கண்டதுண்டமாக வெட்டப் படுவதைக் கண்ட பெற்றோர்கள் அடைந்த கொடுமையை எண்ணுவதா, இந்தக் கொடுமைகள் எப்படி உருவெடுத்தன?

இப்போதைய கலவரத்தில் கொழும்பு நகரம் சிதைந்து கிடக்கிறது. அந்தக் காட்சிகளில் பல அனிதா பிரதாப் உதவியால் நம் கண்களில் பட்டன. அடக்குமுறைக்கு ஆளாகி தந்திரமாக எடுத்த படங்களே இப்படி என்றால் சுதந்திரமாகப் படம் எடுத்து அனுப்பியிருந்தால்.....?

கொழும்பில் இருபது பெரிய தொழிற்சாலைகள் நாசமாகிவிட்டன. பல இலட்சம்பேர் வேலை இழந்தனர், பல ஆயிரக்கணக்கான சிங்களவர்களும் வேலை இழந்துவிட்டனர். பலகோடி ரூபா மதிப்புள்ள தொழிற்சாலை அழிந்துபோனபின் அதன் உரிமையாளர் மனமுடைந்து சாவிக்கொத்தையும், சிங்களவர்களிடமே கொடுத்து தொழிற்சாலையே அழிந்து போனபிறகு அதைத் திறக்க ஒரு சாவிக்கொத்து தேவையில்லை. அதையும் நீங்களே வைத்துக்கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு வந்தாரே! அப்போது அவர் மனநிலை எப்படியிருக்கும்? ஆதரவற்ற நாதியற்ற தமிழினத்தில் பிறந்தால் அல்லவா நமக்கு இந்தக்கதி என்றல்லவா நினைத்திருப்பார்? பெல்ஜியம், ஆஸ்திரியா போன்ற சிறு நாடுகளில் பிறந்திருந்தாலாவது யாராவது இந்தக் கொடுமையை தட்டிக் கேட்டிருப்பார்கள். பெரிய நாட்டில் பெருமை பேசியே காலத்தை ஓட்டும் தமிழ் இனத்தில் பிறந்ததால் அல்லவா இந்த இழப்பு?

- தமிழ் அமைச்சர் தமிழ் குடிமகன் அன்று

அரசாங்கம், 316 தமிழர்கள் மட்டுமே இந்தக் கலவரத்தில் கொல்லப்பட்டதாக சொல்கிறது. இது ஒரு அப்பட்டமான பொய். நுவரேலியா நகரத்தில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையே இதைவிட அதிகம். கொழும்பில் மாத்திரம் 1000 பேருக்கு மேல் கொல்லப்பட்டிருப்பார்கள். கொழும்பு நகரத்தில் மூன்று இடங்களில் தலா 20 முதல் 30 வரையிலான தமிழர்கள் சிறிய பேருந்துகளுக்குள் (மினிபஸ்) அடைத்து உயிருடன் எரிக்கப்பட்டிருக்கின்றார்கள். தென்பகுதியில் ஆலயங்களுக்குள் தஞ்சமடைந்த பல தமிழர்கள் ஆலயங்களுடன் சேர்த்தே எரிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

ரோம் நகரம் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தபோது பிடில் வாசித்துக்கொண்டிருந்த நீரோ மன்னனைப்போல், தமிழர்களின் உயிரும் உடமையும் அழிக்கப்படும்போது அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது மட்டுமல்லாமல் அதற்கு வக்காளத்தும் வாங்கிய ஜே.ஆர். ஜெயவர்த்தனாவினுடைய பௌத்த சிங்களப் பேரினவாத மனப்பான்மையே இந்தக் கலவரத்தின் வீச்சத்திற்கான அடிப்படையாகும்.

எனக்கு 'யாழ்ப்பாண மக்களது கருத்துக்களைப் பற்றியோ, அவர்கள் எம்மைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றியோ கவலையில்லை என்று லண்டன் தினசரியான டெலிகிராப் பத்திரிகைக்கு ஜே.ஆர் ஜெயவர்த்தனா அளித்த பேட்டி அவரது பேரினவாத மனோபாவத்திற்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

## அழிவு எவ்வளவு?

### அரச தகவல்

உயிரிழந்தவர்கள் - 316
அகதிகள் (கொழும்பில் மட்டும்) - 65000
நாடுமுழுவதும் - 79000
எரிக்கப்பட்ட வீடுகள் - 1321
இடம்பெற்ற கொள்ளைகள் - 75

## அழிவு எவ்வளவு?

### பொதுவான தகவல்

உயிரிழந்தவர்கள் - 6000 க்குமேல்
பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட தமிழ் பெண்கள் - 1000 க்குமேல்
அகதிகளாக்கப்பட்ட தமிழர்கள் நாடுமுழுவதும் - 2,50,000 க்குமேல்
சொத்திழப்பு - 1000 கோடி ரூபாவுக்கு மேல்

## இன்று கைவைக்க முடியாது !

*மலையகத்தின் இளைய தலைமுறை தலைவர் ஒருவரைக் கேட்டபோது பெயர் குறிப்பிட அவர் விரும்பவில்லை)*

சிறீலங்காவின் இன்றைய பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியாளர்கள், குறிப்பாக சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் 1983 கலவரத்தை ஐக்கியதேசியக் கட்சிதான் செய்தார்கள். தங்களது கட்சிக்காரர் தமிழர்களுக்கு உதவிசெய்து காப்பாற்றியவர்கள் என்று சொல்லி வருகின்றனர். உண்மையில் அவர்களுக்கு இவர்கள் ஒன்றும் குறைந்தவர்கள் அல்ல. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்திலும் இரண்டு கலவரங்கள்தான் நடந்தன. பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில் நான்கு கலவரங்கள்தான் நடைபெற்றன.

இன்று இனக்கலவரம் எதுவும் ஏற்படவில்லை என்றால் அதற்குக் காரணம் சிங்களப் பேரினவாதிகள் திருந்திவிட்டார்கள் என்பதல்ல. விடுதலைப் புலிகளின் வளர்ச்சியால் அவர்கள் அடங்கி ஒடுங்கிப் போய்விட்டார்கள்.

இதுவரை நடந்த இனக் கலவரங்களால் அதிகமாகப் பாதிக்கப்பட்டது மலையக மக்கள்தான். ஆனால் இன்றைக்கு மலையக தமிழர்மீது அவ்வாறு யாரும் கைவைக்க முடியாது அதற்குக் காரணம் நாங்கள் சொல்லித் தெரியவேண்டியதில்லை என்றார்.

பல நிலைகளிலும் பாதிக்கப்பட்ட தமிழர்களின் 75,000 இற்கும் மேற்பட்டவர்கள் அகதிகள் முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். ஒரு முகாமில் 12,000 பேர் இருந்தால் அங்கு இரண்டு கழிப்பறைகள் , இரண்டு தண்ணீர் குழாய்கள் - இவ்வளவு பேருக்கும் ஒரு பொலீஸ்காரன் - சாலை முனையில் ரோந்து சுற்றும் நான்கு, ஐந்து இராணுவத்தினர் அடா! முகாம்களில் இவர்களை வைத்திருப்பதைவிட ஒரு வழியாகக் கடலில் தள்ளியிருக்கலாம்.

- தமிழ் குடிமகன்

## பண்பை இழந்த சிங்களவர்கள்

குடியிருக்கும் வீட்டில் கொள்ளை -கண்முன்னாலேயே வீடு எரிப்பு -பெற்றோர் முன்னிலையில் மகள் பாலியல் வல்லுறவு - குடும்பத்தார் முன்னிலையில் மகன் சுட்டுத் தள்ளப்படும் கொடுமை,

தண்ணீர் வேண்டுமென்று கேட்ட இராணுவத்தார்களுக்கு தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தவர் கொஞ்ச நேரத்தில் தண்ணீர் குடித்த பாவிகளாலேயே சுடப்பட்டு சாகும்காட்சி - நன்றியறிதல் என்னும் பண்பை இழந்த சிங்களவர்கள் என்பதை நாடறியச் செய்யும் நிகழ்ச்சி.

மருத்துவ மனையில் காலொடிந்து கையொடிந்து நோய் வாய்ப்பட்டுப் படுத்துக் கிடக்கும், பலநாள் படுத்துக்கிடக்கும் நோயாளிகளைக் கூடத் தாக்கியுள்ளனர். சில நோயாளிகள் வெறிகொண்டு வந்த சிங்களவர்களின் காலில் விழுந்து கெஞ்சிக்கேட்டு உயிர்ப்பிச்சை வேண்டி நிற்கும் நிலை - வீட்டில் இருந்தாலும் எரிப்பு - வெட்டுக்குத்து- வெளியில் வந்தால் துப்பாக்கிச்சூடு - தப்பியோடி முகாம்களுக்கு வந்தால் அங்கு நடக்கும் கண்றாவிகள் சகிக்க முடியாதவை.

- தமிழ் அமைச்சர் தமிழ் குடிமகன் அன்று


## வேலை வாங்கிக்கொடுத்த அமைச்சருக்கு 24 கத்திக் குத்து

சிங்கள வெறியர்கள் முன்னாள் அமைச்சர் ஒருவரையும் விடவில்லை. குமாரசூரியர் என்னும் அமைச்சரை (அவர் தமிழர்) ஒரு சிங்கள வெறியன் 24 தடவை கத்தியால் குத்தியிருக்கிறான். இவ்வளவிற்கும் அந்த வெறியனின் மகனுக்கு அரசாங்க வேலை வாங்கிக் கொடுத்தவரே இந்த அமைச்சர்தான். அதற்கான நன்றியை 24 கத்திக்குத்து காணிக்கையாக அளித்திருக்கிறான் அவன். இந்த அமைச்சர்தான் சிறீமாவோ ஆட்சியில் அமைச்சராக இருந்த தமிழர். தமிழர்களுக்கு எதிராக சிறீமாவோ ஆட்சி சதி செய்தும், சமர் புரிந்தும், தலையறுத்தும் வினை புரிந்தபோதெல்லாம் அருகில் அமர்ந்து ஆலவட்டம் வீசிக்கொண்டு தலையாட்டிக்கொண்டிருந்தவர். சிறீமாவோ ஆட்சியில் தலையாட்டம், ஜெயவர்த்தனா ஆட்சியில் கத்திக்குத்து. இப்போது ஜெயவர்த்தனா ஆட்சியில் குமாரசூரியர்கள் மூன்றுபேர்! தொண்டமான், இராஜதுரை, தேவநாயகம் என்னும் மூன்று அமைச்சர்கள் உள்ளனர். சிங்கள வெறியர்கள் இந்த தமிழ் அமைச்சர்களுக்கு இந்த எதிர்காலத்தில் என்ன காணிக்கை வைத்திருக்கிறார்களோ தெரியவில்லை.

- தமிழ் அமைச்சர் தமிழ் குடிமகன் அன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10ம் ஆண்டு நினைவலைகள்



# லெப். மரியா

**புவனேந்திரசோதி (சோதி) புலேந்திரன்**
வட்டுக்கோட்டை

எண்பதுகளின் நடுப்பகுதி தமிழீழ விடுதலைப் போராட்டம் தனித்துவமான வளர்ச்சியைப் பெற்று, விடுதலை உணர்வு கொண்டவர்களை தன்னகத்தே ஈர்த்துக்கொண்ட காலப்பகுதி. ஆயுதம் ஏந்திய விடுதலைப்போரில் குறிப்பாக 83ல் நிகழ்ந்த திருநெல்வேலித் தாக்குதலோடு இளைஞர்கள் போராட்டத்தோடு தம்மை இணைத்துக்கொள்ளத் தொடங்கினார்கள். இவர்களில் மிகப் பெரும்பான்மையினர் இளவயது ஆண்களாகவே இருந்தனர். ஆயினும் ஆண்டாண்டு காலமாக எமது சமுதாயத்தில் புரையோடிப்போய்விட்டிருந்த பெண்ணடிமைத்தனத்தையும் அடக்கு முறைகளையும் அறுத்தெறிந்துகொண்டு சுதந்திரக்காற்றை சுவாசிப்பதற்காய் சிறகசைத்துக் கொண்டார்கள் சில சுதந்திரப்பறவைகள். அவ்வாறு புதுமை செய்யப் புறப்பட்டவர்களில் ஒருத்திதான் புவனேந்திரசோதி என்கிற மரியா.

புலேந்திரன் தம்பதியினருக்கு மகளாகப் பிறந்த புவனேந்திரசோதி, தனது பள்ளிப்படிப்பை வட்டு இந்துக் கல்லூரியில் பயின்ற காலத்திலே விளையாட்டு, மற்றும் சமூக ஈடுபாடுகளில் அதிக அக்கறையுடையவராய் விளங்கினார்.

சமூக முன்னேற்றத்திலும், பொதுப் பணிகளிலும் ஆர்வம் கொண்ட சோதி இளவயதிலேயே வட்டூரின் மாதர் சங்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டார். மாதர் சங்கத்தில் தான் அங்கம் வகித்த காலத்தில் தனது பணிகளை மிகவும் நேர்த்தியாகவும், திறமையோடும் செய்துவந்ததை அவ்வூர்மக்கள் இன்னும் பசுமையோடு மீட்டுக்கொள்கிறார்கள். ஒரு ஊருக்குள் இருந்து தன்னால் இயன்றவற்றைச் செய்துகொண்டிருந்த சோதி முழுமையான எமது இனத்தின் விடிவிற்கு தான் என்ன செய்யலாம் என்று எண்ணலானாள். அவன் தன்னையே தருவது என்று முடிவு செய்தாள். சரியான தலைமையையும் அமைப்பையும் இனங்கண்ட சோதி, ஆயுதம் ஏந்திய போரிற்காய் புலிகளோடு இணைந்துகொண்டாள். கட்டுக்காவல் என்ற வட்டத்தின் வாழ்ந்த எம்மினத்தின் பெண்களாலும் கானகத்திலும் வாழ முடியும், களமாடிடவும் முடியும் என்று, பிரபாகரன் என்ற பெருநெருப்பின் வெளிச்சத்தின் வழிபார்த்து நடந்த புலிகளின் ஆரம்பகால பெண் உறுப்பினர்களில் ஒருவராய் இணைந்து மரியா என்ற மாற்றுப் பெயரினைப் பெற்றாள் சோதி.

மரியாவின் செயல் திறன் அவளை ஒரு குழுத் தலைவியாக்கியது. 85–ல் குடாநாட்டில் நின்று செயல்பட்டாள் மரியா. புதிய உறுப்பினர்களை திரட்டுதல், முதலுதவி வகுப்புக்களை ஒழுங்குசெய்தல் என்ற பணிகளைச் செய்து கொண்டே 86–ல் புதுக்குடியிருப்பு நோக்கி புறப்பட்டாள்.

புதுக்குடியிருப்பு நோக்கி புறப்பட்டவள் புதிய புலி உறுப்பினர்களை உருவாக்குவதில் ஆற்றிய பணிகளை தளபதி கிட்டு அவர்கள் பல தடவைகள் நினைவு கூர்ந்ததுண்டு.

87–ல் அமைதிப்படை என்ற பெயரில் பாரதத்தின் அரக்கர்படை எமது பூமியில் தனது பூதாகாரக் கால்களை பதித்துக்கொண்டது. தொடர்ச்சியாக வன்னி மண்ணிற்கு தன்னை பழக்கப்படுத்திக்கொண்ட மரியா கடைசிவரை இந்தியப் படையை எதிர்த்து வன்னி மண்ணில் களமாடிக்கொண்டிருந்தாள். கடைசிவரை அவள் கொண்டிருந்த அவளது கரமிருந்த சுடுகலன் கைநழுவவில்லை. ஆனால் அதனை இயக்குவதற்கு அவளால் முடியவில்லை. நெஞ்சிலேயே குண்டேந்தி நினைவிழந்துபோனாள். 03.07.88–ல் பாரதப் படையை எதிர்கொண்ட படு களமொன்றில் விழிமூடிக் கொண்டாள் இந்த வீரமகள்.

விடுதலையை வேண்டிநின்று விதைகுழியில் வீழ்ந்தவரின் புதைகுழியில் இருந்து பல புலி மகள்கள் பிறந்துள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைந்த சொற்கள் எண்: 11

கீழ் உள்ள சொற்களின் எதிர்ப்பால் சொற்கள் மேலுள்ள அட்டவணையில் கலைந்திருக்கின்றன. கீழ்உள்ள சொற்களின் நேரே அதனுடைய எதிர்ப்பால் சொல்லை எழுதி அச் சொல்லை மேலுள்ள அட்டவணையில் கண்டுபிடித்து கோடிடவும்.

சொற்கள் நேர்கோட்டிலும், இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், மூலைப்பக்கம் இருக்கும். சொற்களில் சேராத சில எழுத்துக்களை சேர்த்தால் ஓர் பழமொழி வரும். அது என்ன .....................?

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கி | ன் | ண | பு | நி | ப | ந | த | த | தி | பு | த | மா |
| ழ | டு | ர் | டி | ண் | பெ | ம் | கு | தி | த் | ழ | உ | ட் |
| வ | பா | ட் | டி | ணு | ணி | பி | ம | தி | ரு | ம் | மு | ஒ |
| ன் | ர | த | கோ | ச | தொ | ய | ரி | ண் | ஒ | ட | ம | மை |
| க | ன் | சி | ப | சி | மு | ச் | வ | த | த் | சை | ன் | ம் |
| த | ம | ய | ச் | உ | த் | த | மி | தி | ன் | க | ழ | அ |
| பா | மா | டி | ரி | சி | தை | ழி | தோ | வ | த் | த | ம் | பி |
| ட | வே | ம் | க | சி | ச் | ப | ல் | ன | ணு | ய | னி | கூ |
| க | ட | ள் | ங் | சி | ஆ | த | ம | ஞா | ண் | டி | கு | பு |
| ன் | ளி | ட் | ச | சு | பு | ன் | க | ங் | பா | ல | க | ன் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அப்பன் | ........................ | தமிழன் | ........................ | தச்சன் | ........................ |
| உத்தமன் | ........................ | தோழன் | ........................ | தொழும்பன் | ........................ |
| புதல்வி | ........................ | ஞானவான் | ........................ | அழகி | ........................ |
| முடவன் | ........................ | புனிதை | ........................ | பாணன் | ........................ |
| குயவன் | ........................ | கூனன் | ........................ | வேடன் | ........................ |
| புண்ணியவான் | ........................ | பண்டிதை | ........................ | நிபுணை | ........................ |
| ஆடவர் | ........................ | ஆசிரியை | ........................ | சகோதரி | ........................ |
| சங்கரன் | ........................ | கிழவி | ........................ | கள்வன் | ........................ |
| மாமி | ........................ | மாமன் | ........................ | பாதகி | ........................ |
| திருடி | ........................ | உழவன் | ........................ | ஒருவன் | ........................ |
| புத்திரன் | ........................ | குமரன் | ........................ | தங்கை | ........................ |
| பாடகி | ........................ | பாங்கி | ........................ | தாத்தா | ........................ |
| நங்கை | ........................ | பாலகி | ........................ | | |

பழமொழி:.......................................................................................................

பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................

..............................

பிறந்த நாள்: ..............................

சந்தாதாரராயின் சந்தா இல: ............


கலைந்த சொற்கள் எண்–11 இற்கான விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள்: 31.07.98

*(போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)*

**விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:**

கலைந்த சொற்கள்
ஈழமுரசு - 22, Rue Perdonnet,
75010 Paris, France.

# கலைந்த சொற்கள் எண் - 10 விடைகள்



*ஈழமுரசுவின் கலைந்த சொற்கள் பகுதிக்கு 250 இற்கும் மேற்பட்ட வாசகர்கள் விடையெழுதி அனுப்பியிருந்தார்கள்.*

*அவர்களில் சரியான விடையெழுதிய வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து வாசகர் விபரங்கள் வருமாறு.*

1) திருமதி சிவானந்தம்
77200 Torcy
France.
2) கார்த்திகேசு கணேஸ்
2300 La Chaux de Fonds,
Swiss.
3) ஆ. கனகலிங்கம்
75010 Paris,
France.
4) V. திருநந்தி
70376 Stuttgart,
Germany.
5) M. தவலிங்கம்
06240 Beausoleil,
France.

இவர்களுக்கு
**Lune International Paris**
நிறுவனத்தினரால் பெறுமதி மிக்க நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

இந்த கலைந்த சொற்கள் எண்-11 இற்கான சரியான விடையும், கலைந்த சொற்கள் எண்-12ம், 06 - 12 ஒகஸ்ட் 98 ஈழமுரசில் வெளிவரும்.

**தயாரிப்பு: சவேயூ சவுந்தரராஜா**

*சுவிற்சர்லாந்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பு நினைவுகூரும்*

# கறுப்பு யூலை

**நினைவு நாள் யூலை 1983**

**இடம்: Hotel Limmat, Limmatstr 118, Zurich.**

**காலம்: 26.07.98 ஞாயிறு**

**நேரம்: பிற்பகல் 16.00 மணிக்கு**

விழா நிகழ்ச்சிகள்

*வரவேற்புரை*
*கவிதா நிகழ்வு*
*நாடகம்*
*எழுச்சிகானங்கள்*
*பேச்சு*
*எழுச்சி நடனங்கள்*

**'அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்'**

*- தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு-சுவிஸ்*

# கிறங்கன் அருள்மிகு ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலய அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

சைவ நற்சிந்தனையும், தமிழ் பண்பாடும் நிறைமக்களாக வாழும் சொலத்தூண் மாநகரில் கிறங்கன் எனும் பகுதியில் வீற்றிருந்து மனமுருகி வேண்டுபவர்களின் வேண்டுதல்களை தீர்த்தருளி அருள்மழை பொழிந்து கொண்டிருக்கும் அகிலாண்டகோடி நாயகியான அன்னை ஸ்ரீ துர்க்கா தேவிக்கும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் அலங்கார உற்சவம்.

நிகழும் மங்கலகரமான வெகுதானிய வருடம் ஆடி மாதம் 5ம் நாள் (21.07.98) செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் அலங்கார உற்சவம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளமையால் அம்பிகை அடியார்கள் அனைவரும் இவ் உற்சவ காலங்களில் தோய்ந்து நீராடி விரதம் அனுஷ்டித்து ஆசார சீலர்களாக ஆலயத்திற்கு வருகை தந்து எல்லாம் வல்ல துர்க்கா தேவி அம்பாளுக்கும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் நடைபெறவிருக்கும் விஷேட அபிஷேகங்கள், விஷேட தீபாராதனைகள், விஷேட பூஜைகள் என்பவற்றை மனதார தரிசித்து வழிபட்டு தேவியினுடைய பேரருளை பெற்று பேரானந்த பெருவாழ்வு வாழ்வீர்களாக.

தெய்வீகக் கிரியைகள்: மாலை 5.30 மணிக்கு புண்ணியாகம், ஸ்நபன கும்பபூஜை, அபிஷேகம் என்பன
மாலை 6.45 மணிக்கு கூட்டுப்பிரார்த்தனை (பஜனை)
இரவு 7.30 மணிக்கு மூலஸ்தான மற்றும் பரிவாரமூர்த்திகள் விஷேட பூஜை
இரவு 8.00 மணிக்கு வசந்த மண்டப விஷேட தீபாராதனைகள். விஷேட பூஜைகள்
இரவு 8.30 மணிக்கு அம்பாள் அலங்கார பூர்வமாக உள்வீதி உலாவரும் அற்புதக் காட்சி இடம்பெறும்
இரவு 9.00 மணிக்கு விபூதி மற்றும் அருட்பிரசாதம் வழங்குதல்

**15 நாட்களும் இந்த ஒழுங்கின் பிரகாரமே திருவிழா நடைபெறும்.**

**உற்சவ கால பிரதம குரு**

ப்ரஹ்ம சமூக ஸேவா விபூஷண ஆன்மீக விடுதலைப் பணிப்பாளர், சிவத் தமிழ் ஞானாகரம், சிவஸ்ரீ பஞ்சாஷர வித்தியானந்தக் குருக்கள் (ஜேர்மனி)

**ஆலய பிரதமகுரு**

ஆகம கிரியா ஜோதி பிரம்மஸ்ரீ தியாக கணேஷரஞ்ச சர்மா (சொலத்தூண்)

**முக்கிய குறிப்பு:** கிரியைகள் அனைத்தும் மேலே குறிப்பிட்ட நேரத்திற்கு ஆரம்பமாகி குறிப்பிட்ட நேரத்துக்கு முடிவடையும் என்பதால், அம்பிகை அடியார்கள் நேரத்துடன் ஆலயத்திற்கு சமூகமளிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். கிரியா காலங்களில் பூஜைக்கு வேண்டிய புஷ்பம், பூமாலைகள், பால். தயிர், பழவகைகள், இளநீர் போன்ற அபிஷேக பொருட்கள் உரிய நேரத்தில் ஆலயத்தில் வழங்கி அம்பிகையின் இஷ்டசித்திகளை பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**அனைவரும் வருக! அம்பிகையின் அருள்பெறுக!**
**மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்**

ஆலய முகவரி: கிறங்கன் துர்க்கை அம்மன் ஆலயம்
(Grenchen Sud புகையிரதத்திற்கு பின்புறம்
Bruhlstr, 6, 2540 Grenchen (so). - Tel: 032/653 30 64
மேலதிக தொடர்புகளுக்கு :
**032/622 30 75 - 032/6826506 - 032/ 685 36 67**

*இங்ஙனம்*
*உபயகாரரும்*
*கிறங்கன் துர்க்கை அம்மன் ஆலயதேவஸ்தானமும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7ம் ஆண்டு நினைவஞ்சலி



## 2ம் லெப்டினன்ட் காண்டீபன்

வைரவப்பிள்ளை உமாநேசன்
(நேசன்)

உடுத்துறை

வீர ஜனனம்: 15.02.1971

வீர மரணம்: 16.07.1991



ஆனையிறவு கடல்நீரேரிப் பகுதியில் நடைபெற்ற சிறீலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில்வீரமரணம்

எத்தனையோ பூக்கள் வையகத்தில் மலர்கின்றன
அத்தனையும் மறுநாள் காலையில் உதிர்கின்றனவே
எங்கள் ஈழமண்ணில் உதித்த மண்ணின் மைந்தர்கள்
என்றும் உதிராமல் மீண்டும் உயிர்த்தெழுவார்கள்

நீ அன்னையின் மடியில் பூத்தாய்
நாட்டிற்காகவே உன் உயிரைக்கொடுத்தாய்
நீ வீரமரணமடைந்து ஏழு வருடங்களானாலும்
நம் நாட்டின் மீட்புக்காக மீண்டும் பிறப்பாய்

எங்கள் மைத்துனரே உம் புன்னகை மறையவில்லை.
எங்கள் மாமாவே, சித்தப்பாவே எங்கிருக்கின்றீர்கள்
எப்பொழுது நீங்கள் எழுந்து வருவீர்கள்
உங்கள் கல்லறை நிச்சயம் உயிர்பெறும்


ஆருயிர்ச் சகோதரனே உன்னை நாங்கள் மறக்கவில்லை
அன்புமகனே உன்னை நாம் இழக்கவில்லை
உன்னோடு மண்ணிற்காக மடிந்த தோழர்களையும்
உனது ஏழாவது சிரார்த்த தினத்தில் நினைவு கூருகின்றோம்.

உன்னை நினைக்கும் உறவுகள்
அப்பா, அம்மா, அண்ணன், சகோதரிகள், மைத்துனர்கள்,
தம்பி, மைத்துனி, மருமக்கள், பெறாமக்கள், உறவினர்கள்

தகவல்: ரவி (பாரிஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டயானா கிண்ணத்தை டெண்டுல்கர் தலைமையில் உலக அணி வென்றது




சென்ற ஆண்டின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றான வேல்ஸ் இளவரசி டயானாவின் மறைவை நினைவுபடுத்தி உலகிலுள்ள தலைசிறந்த கிரிக்கட் வீரர்கள் பலரை ஒன்றுதிரட்டி M.C.C. எனவும் Rest of the world (உலக அணி) எனவும் இரு அணிகளாகப் பிரித்து 18.07.98 இல் ஒருநாள் போட்டி ஒன்றை இங்கிலாந்து நடாத்தியது. கிரிக்கட்டின் பிறப்பு மைதானம் என்று பெருமையுடன் பேசப்படும் பழமை வாய்ந்த 'லோர்ட்ஸ்' மைதானத்திலேயே இப் பெருமைக்குரிய ஆட்டம் நடைபெற்றது.

எம்.சி.சி. அணியை வழி நடத்தியவர் இங்கிலாந்தின் முன்னாள் அணித் தலைவர், மைக் அதட்டன். அவருடன் இந்திய அணித் தலைவர் அசாருதீன், வேகப் பந்து வீச்சாளர்களான தென்னாபிரிக்க வீரர் டொனல்ட், அவுஸ்திரேலிய வீரர் மக்கிறாத், இந்திய வீரர் சிறிநாத், இந்திய அணியின் சுழல் பந்து வீச்சாளர் கும்பிளே, துடுப்பெடுத்தாட்ட வீரர்களான மேற்கிந்திய தீவுகள் அணியின் சந்திரபோல், இந்திய வீரர் கங்குலி ஆகியோரும் எம்.சி.சி. அணியில் விளையாடினார்கள்.

உலக அணியை தலைமை ஏற்று நடத்தியவர், உலகப் புகழ் பெற்ற இந்திய இளம்புயல் சச்சின் டெண்டுல்கர். கூடவே அதிரடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரனான சிறீலங்கா வீரர் ஜெயசூரிய, உலக சாதனையாளரான பாகிஸ்தான் அணி வீரர் சயிட் அன்வர், அதிரடி வித்தகரான சிறீலங்கா வீரர் அரவிந்த டி சில்வா, ஒருநாள் ஆட்டங்களில் கூடிய விக்கட்டுக்களை வீழ்த்தி உலக சாதனை படைத்த பாகிஸ்தான் முன்னாள் அணித் தலைவர் வசிம் அக்கிரம் போன்ற பல முன்னணி பிரபலங்களும் உலக அணியில் அங்கம் வகித்தனர்.

எம்.சி.சி. அணி முதலில் துடுப்பாட்டத்தை ஆரம்பிக்க உலக அணி தடுப்பு வியூகங்களை அமைத்து மைதானத்தை ஆக்கிரமித்திருந்தது. அதட்டன், அமிர் சொலி எம்.சி.சியின் ஆட்டத்தை ஆரம்பிக்க போட்டி ஆரம்பமானது. மந்த நிலையில் ஆரம்பம் போய்க்கொண்டிருக்க முதலில் 12 ஓட்டங்களுடன் அமிர்சொலி தனது நாட்டு வீரன் அக்கிரத்தின் பந்துவீச்சில் பிளவரிடம் பிடிகொடுத்து மைதானத்தை விட்டு விலக, இந்திய வம்சாவளியினரான மேற்கிந்திய தீவுகளின் புதிய நம்பிக்கை நட்சத்திரமாக பிரகாசிக்கும் சந்திரபோல் அதட்டனுடன் இணைந்தார். இந்த சோடியும் நீண்டநேரம் தாக்குப்பிடிக்க முடியாமல் 28 ஓட்டங்கள் எடுத்த நிலையில், எம்.சி.சி. அணி தனது அணித் தலைவரை இழந்தது. அப்போது ஆடுகளம் புகுந்தவர், இந்திய அணித் தலைவரும், மிகவும் அனுபஸ்தரும், ஒருநாள் போட்டிகளில் பல சாதனைகள் படைத்தவருமான அசாருதீன். இந்த புதிய சந்திரபோல் - அசாருதீன் சோடி மிகவும் நிதானமாகவும், நேர்த்தியாகவும் ஆட்டத்தைத் தொடர்ந்து ஓட்டங்களைக் குவித்தது. அசாருதீன் 61 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, மற்றொரு இந்திய வீரரான கங்குலி 14 ஓட்டங்கள் வரையே தனது ஆட்டத்தைத் தொடர்ந்தார். இறுதியில் தென்னாபிரிக்கா வீரர் மக்மிலான்



சந்திரபோலும் இணைந்து 50 ஓவர்களில் 261 ஓட்டங்களைப் பெற்றனர். சந்திரபோல் ஆட்டமிழக்காது 127 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

பதிலுக்கு ஆட்டத்தை தொடர்ந்த உலக அணியின் ஆரம்ப சோடி, எம்.சி.சி. அணிக்கு அச்சத்தையும் பீதியையும் கொடுக்கக்கூடியதும், பல திசையிலும் பந்தை பதம் பார்த்து எல்லைக்கோட்டுக்கு அனுப்பக்கூடியவர்களான ஜெயசூரிய, டெண்டுல்கர் சோடியும். ஜெயசூரியவுக்கு பல முறை 'தண்ணிகாட்டிய' அதே பந்து வீச்சாளர் லண்டன் லோட்ஸ் மைதானத்திலும் நுழைந்துவிட்டார். அவர் வேறு யாருமில்லை; இந்திய வேகப் பந்துவீச்சாளர் சிறீநாத். சிறீநாத் வீசிய ஒவ்வொரு பந்தையும் ஒவ்வொரு ஓவர்களாகவே எதிர்கொண்டு திணறிய ஜெயசூரியாவால் 8 ஓட்டங்களுக்கு மேல் சிறீநாத்திடமிருந்து தப்பமுடியவில்லை. சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் 194 ஓட்டங்களை அடித்து உலக சாதனை படைத்த சயிட் அன்வராலும் 14 ஓட்டங்களுக்கு மேல் டெண்டுல்கருடன் இணைய முடியவில்லை. அடுத்து ஒரு அதிரடிச் சிங்கம் இளம்புயலுடன் இணைந்தது. வித்தகர் அரவிந்த டி சில்வாவின் வித்தைகளும், உலக அணியை தலைமை தாங்கும் மும்பாய் இளம்புயலின் சூறாவளி ஆட்டமும் லண்டன் மாநகரை உலுக்கியது. கட்டுக்கடங்காத துடுப்பாட்டம் கரை புரண்டது. ஓட்டங்களாய், இளையவன் டெண்டுல்கர் ஒருபுறமும், வித்தகர் சில்வா ஒருபுறமும் எம்.சி.சி. அணிக்கு எதிர்கள் ஆகினர். 114 ஓட்டங்களை மட்டும் சந்தித்து 15 நாலுகளையும், 4 ஆறுகளையும் அடித்து 125 ஓட்டங்களைக் குவித்திருந்த டெண்டுல்கர், தனது நாட்டின் தலைசிறந்த சுழல்பந்து வீச்சாளர் அனலி கும்பிளேயிடம் சரணடைந்து மைதானத்தைவிட்டு நீங்கினார். சில்வாவும் தனது பங்காக 82 ஓட்டங்களைக் குவித்தார். ஈற்றில் 43.3 ஓவர்களில் வெற்றியின் இலக்கிற்கு உலக அணியை எடுத்துச் சென்றனர் 'ஹிக், 'மூடி' ஆகியோர். 6 விக்கட்டுக்களால் வெற்றிபெற்ற உலக அணியை வழி நடத்திய டெண்டுல்கர் சிறந்த ஆட்டக்காரனாகவும் தேர்வானார்.

20.06.99 அன்று இதே மைதானத்தில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண இறுதிப் போட்டியிலும் டெண்டுல்கர் தோன்றி மீண்டும் ஒரு சாதனை ஏற்படுத்துவாரா?

**- பொன் தாமோதரம்**

# தேசிய மாவீரர் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி - 98

தமிழீழத்தின் விடுதலைக்காக தமது இனிய உயிர்களை தியாகம் செய்த மாவீரர்களை நினைவுகொண்டு வருடா வருடம் தேசிய மாவீரர் கிண்ண உதைபந்தாட்ட போட்டிகள் சுவிசில் நடைபெறுகின்றன. இவ் வருடமும் 11.07.98 அன்று பேர்ண் நகரில் அமைந்துள்ள 'வங்டோர்ப்' விளையாட்டுத் திடலில் மாவீரர் கிண்ணப் போட்டிகள் ஆரம்பமாகின. புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட செந்தமிழரின் தேசியக் கொடியை, புளியங்குளச் சமரில் வீரச் சாவடைந்த மாவீரன் படையரசனின் சகோதரர் வேலாயுத பிள்ளை விமலேந்திரன் ஏற்றி வைக்க, அனைவரும் எழுந்து நின்று அமைதி வணக்கம் செய்ய உதைபந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாகின.

மாவீரர் கிண்ணப் போட்டியில் மொத்தம் 24 அணிகள் கலந்துகொண்டன. இவை 3 அணிகள் கொண்ட 8 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, முதல்



சுற்றுப் போட்டிகள் 'லீக்' முறையில் நடாத்தப்பட்டன. நடாத்தப்பட்ட போட்டிகளின் அடிப்படையில், தலா ஒவ்வொரு குழுவில் இருந்தும் இரு அணிகளாக 16 கழகங்கள் தெரிவு செய்யப்பட்டு, ஏற்கனவே ஒழுங்குசெய்யப்பட்ட அட்டவணைப் பிரகாரம் அரைக்கால் இறுதிப் போட்டியில் மோதிக் கொண்டன. வெற்றிபெறும் அணிகள் முறையே கால் இறுதிப் போட்டிக்கும் அரையிறுதிப் போட்டிக்கும் தெரிவாகின.

Sun Rise (Wattwil), Swiss Boys (White), Young Birds (Yellow), Jolly Boys (Blue) ஆகிய நான்கு அணிகள் அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதிபெற்றன. முதலாவது அரையிறுதிப் போட்டியில் 'சன் றைஸ்' அணியும், 'சுவிஸ் போய்ஸ்' அணியும் மோதிக்கொண்டன. சிறப்பாக நடைபெற்ற ஆட்டத்தில், இரு அணியினும் தலா ஒரு கோல் போட்ட நிலையில் ஆட்டம் முடிவடைய, வெற்றியை தீர்மானிக்க வழங்கப்பட்ட தண்டனை உதை வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட தண்டனை உதையில் 'சுவிஸ் போய்ஸ்' அணியினர் இறுதியாட்டத்திற்கு தகுதிபெற்றனர்.

நடைபெற்ற மற்றொரு இறுதியாட்டத்தில் 'ஜொலி போய்ஸ்' 'யங் பேர்ட்ஸ்' அணியை 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்கு தெரிவாகினர்.

இறுதிப் போட்டிக்கு முன்பாக 3ம் இடத் தெரிவுக்காக 'சன் றைஸ்' அணிக்கும் 'யங் பேர்ட்ஸ்' அணிக்கும் தண்டனை உதைகள் வழங்கப்பட்டதில் 'யங் பேர்ட்ஸ்' 3ம் இடத்தை தட்டிச் சென்றது.

1998ம் ஆண்டுக்கான மாவீரர் கிண்ணத்தை கைப்பற்றுவது



வெற்றிபெற்ற 'சுவிஸ் போய்ஸ்' அணியினர்

எந்த அணி என்ற பலமான எதிர்பார்ப்புக்கிடையில் இறுதி ஆட்டம் ஆரம்பமாகியது. ஆட்ட ஆரம்பத்தில் இறுதியாட்டத்தில் மோதிக்கொண்ட 'சுவிஸ் போய்ஸ்' 'ஜொலி போய்ஸ்' ஆகிய இரு அணியினரும் சிறப்பாக ஆடியபோதிலும், 'சுவிஸ் போய்ஸ்' அணியினருக்கே முதலில் கோல் போடும் வாய்ப்புக் கிடைத்தது. ஆட்டத்தை சமநிலைப் படுத்துவதற்காக 'ஜொலி போய்ஸ்' அணியினர் பலதரப்பட்ட முயற்சிகளை மேற்கொண்ட போதும் பலன் கிடைக்கவில்லை. மாறாக 'சுவிஸ் போய்ஸ்' அணியினரே மேலும் இரு கோல்களை போட்டனர். முடிவில் 'சுவிஸ் போய்ஸ்' அணியினயினர் 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி மாவீரர் கிண்ணத்தை தமதாக்கிக்கொண்டனர்.

மேலும் பெரும் எண்ணிக்கையில் வந்திருந்த பார்வையாளர்க்கும் துப்பாக்கி, கைத்துப்பாக்கி சுடும் போட்டி, குறி பார்த்தெறிதல், 'பனாட்டி கிக்' போன்ற பல போட்டிகளும் மைதானத்தைச் சுற்றி நடைபெற்றன.

வரும் காலத்தில் தமிழீழத்திலிருந்தும் பேலே, மரடோன, றொனால்டோ, சிடான் போன்று உலகப் புகழ்பெற்ற வீரர்கள் உருவாகுவார்கள் என்ற நம்பிக்கையோடு சிறுவர்களை ஊக்குவிப்பதற்கான கண்காட்சிப் போட்டிகளும் இடம்பெற்றன. இதில் லவுசான் மாநில சிறுவர்கள், லுசேர்ண் கரிகாலன் விளையாட்டு அணி, பார்சல் இளம் பறவைகள் அணி, சூரிச் தமிழ் வித்தியாலய சிறுவர்கள் என நான்கு அணிகள் கலந்து கொண்டு போட்டியை மேலும் சிறப்பித்தன.

சிறந்த தண்டனை உதை வீரனாக, லிட்ஸ் அணியின் உதயனும், சிறந்த விளையாட்டு வீரனாக 'ஜொலி போய்ஸ்' அணி வீரர் உதயனும், சிறந்த கோல் காப்பாளராக 'சுவிஸ் போய்ஸ்' அணியின் நிசாந்தும், சிறந்த விளையாட்டுக் கழகமாக லுசேர்ண் 'யங் போய்ஸ்' கழகமும் தெரிவுசெய்யப்பட்டன.

பார்வையாளர் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கும், மாவீரர் சுற்றுப்போட்டிகளில் வெற்றிபெற்ற கழகங்களுக்கும், வீரர்களுக்கும் கேடயங்கள் வழங்கப்பட்டதோடு, பங்குபற்றிய அனைத்து கழகங்களுக்கும் புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட பதக்கங்களும் வழங்கப்பட்டன. செஞ்சோலை காப்பகத்திற்காக விற்பனை செய்யப்பட்ட அர்திஸ்டலாபச் சீட்டுக்கள் அதிர்ஸ்டம் பார்க்கப்பட்டு, கொடியிறக்கத்துடன் போட்டிகள் யாவும் நிறைவை எட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10.08.98 திங்கள் பிற்பகல் 2.00 மணி** ஜெனிவா புகையிரத நிலையத்திலிருந்து ஐக்கிய நாடுகள் சபை வரை

## சுவிஸ், பிரான்ஸ், இங்கிலாந்து, யேர்மனி, இத்தாலி வாழ் தமிழீழ மக்கள் முதன்முறையாக ஒன்றிணைந்து...




வன்னிப் பெருநிலப்பரப்பில் சிறீலங்கா அரசு மேற்கொள்ளும் அரச பயங்கரவாதத்தைக் கண்டித்தும்.....

தமிழீழ மக்களுக்கு எதிரான தொடர்சியான இன அழிப்பை உடன் நிறுத்த வழி கோலும் வகையில் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழீழப் பகுதிகளிலிருந்து சிங்கள இராணுவத்தை வெளியேற்றக் கோரியும்....

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தையும், சுயநிர்ணய உரிமைகளையும் அங்கீகரித்து நிலையான தீர்வு ஏற்படுவதற்கு சர்வதேச அரசுகள் சிறீலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுக்கக்கோரியும்

தமிழின அழிப்பிற்காக உலக நாடுகளிடம் அபிவிருத்திக்கென சிறீலங்கா கோரும் உதவிகளை சர்வதேச நாடுகள் வழங்குவதை நிறுத்தக் கோரியும்,...

சிறீலங்கா அரச பயங்கரவாதத்தால் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியத்தின் அவலத்தை அகிலத்திற்கு எடுத்துரைக்கவும்....

சிறீலங்காவின் போர்ச் சூழலே தமிழீழ மக்களைப் புலம் பெயர்ந்த நாடுகளில் அரசியல் அகதியாக்கியுள்ளது என்பதை எடுத்துரைக்கவும்....

போக்குவரத்து வசதிகளுக்கு உங்கள் பகுதிகளுக்குரிய விடுதலைப் புலிகளின் பணியாளர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.


*சூரிச் (சுவிஸ்) புகையிரத நிலையத்திலிருந்து விசேட புகையிரத வசதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.*







## எங்கும் கிடைக்கிறது




*Marketed & Distributed by*
**Ayngaran Limited**
172, Woodmansterne Road,
London SW16 5TZ,
United Kingdom.
Tel: 0181 7645200
Fax: 0181 764 5255
*E-mail:*
*bhasky@aol.com*




போலி CD க்களை வாங்கி ஏமாறாதீர்கள். Bhasky முத்திரைகளை கவனித்து வாங்குங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாணயமாற்று விகிதம்

| | $ | DM | £ | FFr | S.Fr |
|---|---|---|---|---|---|
| நியூயோர்க் | – | 0.55 | 1.64 | 0.16 | 0.65 |
| பிராங்பேட் | 1.80 | – | 2.96 | 0.30 | 1.18 |
| லண்டன் | 0.61 | 0.34 | – | 0.10 | 0.40 |
| பாரிஸ் | 6.05 | 3.35 | 9.92 | – | 3.96 |
| சூரிச் | 1.53 | 0.84 | 2.50 | 0.25 | – |
| பம்பாய் | 42.57 | 23.53 | 69.66 | 7.02 | 27.82 |
| கொழும்பு | 65.42 | 36.16 | 107.06 | 10.79 | 42.75 |

# ரத்வத்தை எச்சரிக்கை

மாகாணசபைத் தேர்தல்கள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் - பிரதிபாது காப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தவுக்கும் இடையில் பலத்த கருத்து வேறுபாடு எழுந்துள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மாகாணசபைத் தேர்தல்கள் திட்டமிட்டவாறு நடாத்தப்பட்டால் யுத்தம் சம்பந்தமான பொறுப்புக்களை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என அமைச்சர் ரத்வத்தை பகிரங்க எச்சரிக்கை விடும் கட்டம் வரையிலும் சென்றுள்ளது.


## பாசல் தமிழ் வித்தியாலய மெய்வல்லுனர் போட்டி

காலம்: 25.07.98 சனிக்கிழமை

நேரம்: 10.00 மணி முதல் 18.00 மணி வரை

இடம்: Leichtathletil Stadiam Stakob

வாகன தரிப்பிடத்திற்குப் பின்புறம்

குறிப்பு: பார்வையாளர்களுக்கான போட்டிகளும் இடம்பெறும்

## கீபோட் வகுப்புகள்

குறுகிய காலத்தில் சர்வதேச முறையில்

(International Method)

கீபோட் கற்பிக்கப்படும்

சனி: ஞாயிறு: 8.00 மணி தொடக்கம் 13.00 மணிவரை

திங்கள்: செவ்வாய்: 14.00 மணி தொடக்கம் 18.00 மணி வரை

ஆசிரியர் S.S தில்லைச்சிவம்

56, Rue Riquet, 75019 Paris. M°: Riquet

Tel: 01 40 37 56 69

Pub.

## சிவாசினி வாகன சேவை

*Chivashini Transport*

வாகன தேவைகளுக்கு 24 மணி சேவை

தொடர்புகட்கு: ஜெயா

0614616984 / 0611289118 / 0614424117 / 01 42 05 44 04

டிஸ்னி றெஸ்றோறன்ட்



Pub


(32ம் பக்கத் தொடர்ச்சி)

### ஜேர்மன் சட்டத்தரணி....

ஜேர்மன் அரசு திருப்பியனுப்ப எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாகவே இவரது விஜயம் அமைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

திரு.வோல்ட்டர் கெல்லர் ஜேர்மனியில் அகதி அந்தஸ்து கோரி நிராகரிக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் சார்பில் வாதாடி வரும் முக்கியமான சட்ட வல்லுனர் ஆவார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### மன்னார் தாக்குதலில்....

டதையடுத்து வவுனியா — மன்னார் வீதி உடனடியாக மூடப்பட்டதுடன் 9-ம் 10-ம் மைல்கல் பகுதியில் இராணுவத்தினர் தேடுதலை நடாத்தினர். ஆயினும் தாக்குதலை மேற்கொண்ட புலிகளின் அணி தேடுதலுக்கு முன்னரே தளம் திரும்பிவிட்டது.

தாக்குதல் பற்றிய செய்தி தள்ளாடி முகாமிற்கு எட்டியதுடன் அப்பகுதி வீதியால் சென்ற பல தமிழ் மக்கள் படையினரால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளனர்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### விடுதலைப் புலிகளின்....

வானொலி சேவை பொறுப்பாளர் தமிழன்பன், விதுரன் ஆகியோரும் இலக்கியவாதிகளான கவிஞர் பஞ்சாட்சரம், கருணாகரன், இசையமைப்பாளர் கண்ணன், புதுவை அன்பன், பாலா மாஸ்டர், மகேந்திரன் இலங்கராஜன் ஆகியோர் உட்பட்டதான பேராளர்களும் கலந்து கொண்டனர். இலக்கியங்கள், கவிதைகள் ஆகியன விடுதலை போராட்டத்திற்கு உறுதுணையாக இருக்க வேண்டியதன் அவசியம் குறித்து இக்கருத்தரங்கில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.


## படையினர் அரண்கள் புலிகளால் அழிப்பு

தென்மேற்கு, தென்கிழக்கு மாங்குளப் பகுதிகளில் அமைந்திருந்த சிறீலங்காப் படையினரின் முன்னரங்க காவலரண்கள் சில விடுதலைப் புலிகளின் மோட்டார் தாக்குதல் மூலம் அழிக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதலின் போது சில படையினரும் கொல்லப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகளின் தாக்குதலை அடுத்து படையினர் ஆட்டிலெறிகள் மூலம் பதில் தாக்குதல் நடாத்தியபோதிலும் புலிகளுக்கு இழப்பேதும் ஏற்படவில்லை.

முன்னர் தாக்குதல் நடாத்தப்பட்டு சேதமாக்கப்பட்ட படை நிலைகள் மீதே மீண்டும் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இத் தாக்குதலில் கொல்லப்பட்ட, காயமடைந்த படையினர் வான் படையினரின் உலங்கு வானூர்திகள் மூலம் அப்புறப்படுத்தப்பட்டனர்.

## மரண அறிவித்தல்

அன்னையின் மடியில்: 14.09.1914



ஆண்டவன் அழைப்பில்: 12.07.1998

### அமரர் திரு. தில்லயம்பலம் இராமசாமி

யாழ்ப்பாணம்- அழகொல்லை, அளவெட்டியை பிறப்பிடமாகவும், கிளிநொச்சி திருவையாற்றை வதிவிடமாகவும் கொண்டவருமாகிய திரு. தில்லையம்பலம் இராமசாமி 12.07.1998 இல் காலமானார்.

இவர் காலம் சென்ற திரு. திருமதி தில்லையம்பலம் சிவக்கொழுந்துவின் அன்பு மகனும், காலம் சென்ற செல்லமுத்துவின் அன்புக் கணவரும், நாகேந்திரம் (தமிழீழம்), அருணகிரிநாதன் (செல்லப்பா – பிரான்ஸ்), புனிதவதி (ஜேர்மனி), செல்வராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்கினேஸ்வரன், ஜெயராசா, பாலசரஸ்வதி, சியாமளா, ஆகியோரின் அன்பு மாமனாரும், தீபன், கௌரி, பிரசன்னா, பிரவீன், ஜான், நிதர்சன், துவாரகா, ஆதித்யா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமைக் கிரியைகள் 12.07.1998 அன்று கிளிநொச்சியில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்: *இ.அருணகிரிநாதன் (செல்லப்பா)*
01815481328 (லண்டன்)
0144937840 (பாரிஸ்)
ராணி (ஜேர்மனி)
00497141905820

Pub

## வீர மரணம்

தாயின் மடியில்: 30–01–1974



தாயக மண்ணில்: 04–06–1998

### 2ம் லெப்டினட் சிவகுமாரன்

### (பரமானந்தம் விக்கினதாஸ்)

*கொக்குவில் கிழக்கு*

04-06-98 கிளிநொச்சி சமரில் வீரமரணம் அடைந்தார்.

இவர் பரமானந்தம் இந்திராணியின் அன்பு மகனும், கெங்கா தேவியின் பெறாமகனும், சண்முகதாஸ், குகதாஸ், குமரதாஸ் (மாவீரர்), முருகதாஸ், வேல்தாஸ், மகாலட்சுமி, சண்முகச் செல்வி, தனலட்சுமி, அபிராமி ஆகியோரின் அருமைச்சகோதரரும், ஜெயாநிதியின் மைத்துனரும், சபேஷன், பிரித்திகா ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்: சகோதரன் P. MURUGATHAS (BABI)
SCHWOJER - STR-22
82140 - OLCHING, GERMANY
TEL -08142-49230 / 01728218482.

Pub


# AMV

IMPORT - EXPORT

*அனைத்து மீன் வகைகளும் மொத்த விலையில் கொடுக்கப்படும். மரக்கறி வகைகளும் மலிவான விலையில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். Rungis மரக்கறி வகைகளும் மொத்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.*

208, Rue du Fbg. St. Denis,
75010 Paris.

ஏற்றுமதி இறக்குமதியாளர்கள்

Tel: 01 44 72 91 25
Fax: 01 44 72 91 30

Pub


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The BROADWAY, Southall, Middx. T.P: 0181 / 813 9126

# வன்னியெங்கும் மக்கள் போர்க்கொடி

## புதுக்குடியிருப்பு- ஒட்டுசுட்டான்-முத்தையன்கட்டில் திரண்ட மக்கள்

வன்னிப் பகுதியெங்கும் சிறீலங்கா அரசிற்கு எதிரான கண்டனப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. ஆயிரக்கணக்கான மக்கள் பெரும் உணர்வு பூர்வமாக கலந்து கொண்ட இப் போராட்டங்களில் சிறீலங்கா அரசின் அராஜகமான இராணுவத் தாக்குதல்கள், பொருளாதார, மருத்துவத் தடைகள், கல்வி வாய்ப்பினை நசுக்குதல் போன்ற நடவடிக்கைகளுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச உலகு நீதியைத் தொலைத்து விட்டதா? ஏன் வன்னிப் பகுதி மக்களின் அவலங்கள் அதன் கண்களுக்கு தெரியவில்லை? எனக் கோரிய வன்னி மக்கள், திட்டமிட்ட ரீதியில் இனப் படுகொலையை செய்துவரும் சிங்கள அரசுகள் மேற்கொண்ட கறுப்பு யூலை காலப் பகுதியில் நாம் நீதி கேட்கிறோம் எனவும் உருக்கமாகக் கோரியுள்ளனர்.

புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், கரைத்துறைப்பற்று, முத்தையன்கட்டு ஆகிய இடங்களில் மேற்படி ஆர்ப்பாட்டப் பேரணிகளும், பொதுக்கூட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன. இடம் பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான நிவாரண உதவித்திட்டத்தில் சிறீலங்கா அரசு அண்மையில் கொண்டு வந்த வெட்டு முறையினையும் பேரணியில் சென்றவர்கள் கடுமையாகச்சாடி, கோசங்களை எழுப்பினர். வன்னிப் பகுதிக்கான பிரஜைகள் குழுக்களின் சம்மேளம் இப்போராட்டங்களை ஒழுங்கு செய்திருந்தது.

## ஆனைக்கோட்டை சோதனை சாவடி அனுமதியின்றி
# பிரசவ சிக்கலால் பெண் மரணம்

ஆனைக்கோட்டை பகுதியிலுள்ள சிறீலங்கா சிப்பாய்களின் ஈவிரக்கமற்ற செய்கையினால் பிரசவ சிக்கலால் இளம் பெண் ஒருவர் பரிதாபகரமாக மரணமாகியுள்ளார்.

கடந்த 18-ம் திகதி இரவு 10 மணியளவில் சிவசுதன் மேரி அந்தோரினா என்ற 18 வயதான கர்ப்பினிப் பெண்ணிற்கு பிரசவ வலி தோன்றவே அவரது உறவினர்கள் அவரை யாழ். வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல முனைந்தனர். ஆயினும் சாவற்காட்டு பகுதியிலுள்ள சிறீலங்கா சோதனை சாவடி சிப்பாய்கள் அவர்களை யாழ். நகர் செல்ல அனுமதிக்காது அருகிலுள்ள வீடொன்றில் பிரசவத்தை பார்க்குமாறு உத்தரவிட்டனர்.

ஆனால் அப்பெண்ணிற்கு பிரசவச் சிக்கல்கள் தோன்றியதுடன் கடுமையான உதிரப் பெருக்குடன் குழந்தையை பிரசவித்துள்ளார். காலை வேளையில்தான் அவரை வைத்தியசாலைக்கு செல்ல படையினர் அனுமதித்தனர்.

ஆயினும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்தில் அவர் பரிதாபகரமாக மரணமடைந்து விட்டார்.

## விடுதலைப்புலிகள் - இலக்கியவாதிகள் கலந்துகொண்ட இருநாள் கருத்தரங்கு

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இருநாள் இலக்கிய கருத்தரங்கு கடந்த 18,19 ஆகிய திகதிகளில் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றுள்ளது.

சுமார் 800 பேர் கலந்து கொண்ட இக்கருத்தரங்கில் விடுதலை இலக்கியம், நவீன இலக்கியம், போர்க்கால இலக்கியம் ஆகியன பற்றியும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் சார்பில் செய்தி பிரிவு பொறுப்பாளர் திரு.ரவி, நிதர்சனம் தொலைக் காட்சி சேவை பொறுப்பாளர் நகுலன், கவிஞர் புதுவை ரத்தினதுரை, திரு.வே.பாலகுமார், பெண்கள் பிரிவைச் சேர்ந்த தமிழ் கவி, புலிகளின் குரல்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## மன்னார் தாக்குதலில் அதிகாரி பலி

(20.07.98)

வவுனியா மன்னார் வீதியில் விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில் சிறீலங்கா படை மேஜர் தர அதிகாரி ஒருவர் பலியாகியுள்ளார். மேலும் ஒரு சிப்பாய் படுகாயப் படுத்தப்பட்டுள்ளார்.

மன்னாரின் தெற்குப் பகுதி ஊடாக காலை 9 மணியளவில் இராணுவ அணியொன்று சென்று கொண்டிருந்த போதே கிளேமோர் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. அதிகாரி பயணம்செய்த வாகனத்தை இலக்கு வைத்தே இத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. கிளேமோர் தாக்குதலுக்கு இராணுவ வாகனம் ஒன்றும் இலக்கான தாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதல் மேற்கொண்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## வவுனியாவில் புலனாய்வு அதிகாரி சுட்டுக்கொலை

சிறீலங்கா புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த என். சிவானந்த ராஜா என்ற பொலிஸ் உத்தியோகஸ்தர் கடந்த 17ம் திகதி காலை வவுனியாவில் சுட்டுக்கொல்லப்பட்டார். காலைவேளையில் இவர் வவுனியா சிந்தாமணிப் பிள்ளையார் கோவில் பக்கமாகச் சென்ற வேளையில் இவரை எதிர்கொண்ட ஆயுதபாணிகள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர். இதன் காரணமாக ஸ்தலத்திலேயே இவர் மரணமாகியுள்ளார்.

## ஜேர்மன் சட்டத்தரணியின் யாழ் விஜயம் அகதிகளை திருப்பியனுப்பும் நடவடிக்கைகளுடன் தொடர்புடையது

ஜேர்மனி நாட்டில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள ஈழத் தமிழர்களின் கோரிக்கை தொடர்பாக, யாழ். குடாவின் தற்போதைய நிலையினை நேரில் கண்டறிந்து கொள்ளவென ஜேர்மன் நாட்டின் பிரபல சட்டத்தரணி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து திரும்பியுள்ளார்.

கடந்த 15-ம் திகதி யாழ் சென்ற சட்டத்தரணி திரு.வோல்டர் கெல்லர் அங்கு இருநாட்கள் தங்கியிருந்து நிலைமைகளை பார்வையிட்ட பின் கொழும்பு திரும்பினார்.

குடாநாட்டில் இவர் தங்கியிருந்தபோது பல்வேறு பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளை பார்வையிட்டதுடன் பலரை சந்தித்து உரையாடியுள்ளார்.

ஜேர்மனியில் அகதி அந்தஸ்து கோரிய தமிழர்களை

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

லண்டனில் புதுப் பொலிவுடன்
கணபதி தமிழ்க்கடை

உடன் மரக்கறி வகைகள், கடலுணவுகள், மளிகைப் பொருட்கள்
உங்கள் அனைத்து தேவைகளையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்வதற்கு
Ganapathy Food & Wine
34, Ealing Road Wembley, Middx, Hao 4TL, U.K
Tel: 0181 903 1824 Fax: 0181 903 3185
நண்டு £3.99
அறக்குளா (King Fish) £2.99
இறால் £1.49
விளைமீன் கும்பிளா சீலா £2.99
மரக்கறி (நம்நாட்டு வகை) .99Pence

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org